[illegible]

[illegible], 1927

©

7L
[illegible]211, N26AG
N27.2.21
169831


No. 21
ANANDA GUNA BODHINI
Regd. No. M. 2151
ஆநந்தகுணபோதினி.
ராஜகோபால முதலியார்
தங்கசாலைத் தெரு, மதராஸ்
(காபிரைட் ரிஜிஸ்டர்டு).

## விஷய அட்டவணை. (மார்கழி மீ)


| | | | |
|---|---|---|---|
| 1. ஆநந்த தரிசனம் | ... 421 | 9. பழமொழிக் குறிப்புகள் | 450 |
| 2. 42-வது காங்கிரஸ் மகாசபை | 425 | 10. நட்பு | ... 453 |
| 3. 42-காங்கிரஸ்களின் விவரம் | 431 | 11. மாதர் மனோரஞ்சிதம் | ... 455 |
| 4. பத்திராசிரியரின் விஞ்ஞாபனம் | ... 432 | 12. கவிதா விலாஸம் | ... 457 |
| 5. பிரபஞ்ச விலாஸம் | ... 434 | 13. துரைதாச சுந்தரம் | ... 461 |
| 6. [illegible]கடப்பிரதாபன்— வி[illegible]தாவி[illegible] [illegible] | ... 437 | 14. சென்ற மாதம் | ... 464 |
| 7. பிரபஞ்ச நவீன[illegible] | ... 443 | 15. பெரியாரின் மொழிகள் | 465 |
| 8. பிரபஞ்ச தரிசன[illegible] | 446 | 16. ஆங்கில தமிழ் கடிதங்கள் | 466 |
| | | 17. சென்றுபோன நாட்கள் | 468 |


**விச்சித்திரத் துப்பறியும்கண் விளம்பரத்தை முதலில் வாசியுங்கள்.**

### [illegible]ஆநந்த குணபோத[illegible]''யின் வருஷ சந்தா விவரம்.

[illegible]தியா, பர்மா, [illegible]லான் முதலிய இடங்களுக்கு வருஷ சந்தா [illegible]1. வெளி[illegible]களுக்கு ரூபாய் 1—4—0. தனிப்பத்திரிகை அணு 2.

ஒருவரு[illegible]த் குறைந்த சந்தா இல்லை. எந்த மாதத்தில் சேர்ந்தாலும், பயின்[illegible]வதற்குச் சௌகரியமாய் அவ்வருஷத்தின் முதற் பத்திரிகையிலிருந்தே கணக்கிடப்பட்டு அப்பத்திரிகைகளையும் கூடச் சேர்த்து அனுப்பப்படும்.

கடிதம் எழுதுகையில் இவ்வருஷம் கொடுத்திருக்கிற தங்களின் புதிய நெம்பரைத் தெரிவிக்காவிடில் பதில் தரப்படமாட்டா. பதிலுக்கு ஸ்டாம்பு அல்லது ரிப்ளைகார்டு அனுப்புக. பத்திரிகை கிடைக்கப் பெறதோர் பிரதி தமிழ் மாதமும் 15-ம் தேதிக்குள் எழுதாவிடில் அனுப்பப்படமாட்டா. அன்னோர் விலை கொடுத்துப் பெறவேண்டும்.

---

### ''ஆநந்த குணபோதினி'' முதல் வருஷ வால்யம்.

முதல் வருஷத்திய வால்யத்தின் 12 ஸஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து நேர்த்தியான முழு காலிகோ பைண்டு செய்துள்ளது. விலை ரூ. **1—6.** 630-பக்கங்களுக்கு மேல்கொண்ட அருமையான அநுபவ ஞான நூலாகும். விரைவில் எழுதிப் பெறுக

---

### நமது நிருப நேயர்கட்கு அறிக்கை.

☞ பத்திரிகையில் பிரசுரிப்பதற்கென்று வியாசங்கள் வரைவோரும், மதிப்புரைக்காக நூல்கள் அனுப்புவோரும் அடியில் கண்ட விலாஸத்தின்படி பத்திராசிரியருக்கே நேராக அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப் பெற ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

*விலாசம் :— பத்திராசிரியர், "ஆநந்த குண போதினி" ஸ்ரீரங்கம்.*

☞ "ஆநந்த குணபோதினி" க்குச் சந்தாதாராதல், சந்தா அனுப்புதல், பத்திரிகையின் சார்பான விவரங்கள் விரும்புதல், விளம்பரம் செய்தல் முதலிய நிர்வாக விஷயங்கட்கு தி. இராஜகோபால் முதலியார், "ஆநந்த குணபோதினி" ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை, என்று எழுதுக.

---

☞ **இனாம் :—இதுவரையிலும் சேராதிருக்கும் இரண்டு புதிய சந்தாதார்களைச் சேர்த்துத் தருவோருக்கு ரட்டணு விலையுள்ள புஸ்தகம் இனாமாகத் தரப்படும்.**

## Supplement to this issue.

புதிய நாவல்! துப்பறியும் நாவல்!! மாண்புமிக்க நாவல்!!!

# விசித்திரத் துப்பறியும் கண்.

# THE WONDER DETECTIVE EYE

அதி ஆச்சரிய, அற்புத, ஸமத்காரமான திடுக்கிடும் சூட்சிகளும், காட்சிகளும், காதல் மாட்சிகளும் நிறைந்து பிரமிக்கச் செய்யும் புது விதமான துப்பறியும் நாவல்.

**616**-பக்கங்கள் கொண்டது. விலை ரூபாய் மூன்று தான்.

*தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த பிரஸித்த அநுபவ ஞான* கதாசிரியரும், பிரஜாநுகூலன், ஆநந்த குணபோதினி பத்திராதிபரும், பிரபல கிரந்த கர்த்தாவுமாகிய ஸ்ரீமான் எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடவர்கள் இயற்றியது. நவீன முறையில் அமைத்தது, வெள்ளிய தெள்ளிய நடை, மனதைக் கவரத்தகுந்த ரஸங்கள், நூதனமான கற்பனைகள். யாவும் புது விசேஷங்கள். இவ்வுலகத்து அநுபவங்களின் இன்சுவைகளெல்லாம் ஓர் உருக்கொண்டு திரண்டுள்ள நாவல்.

*இதில் தோன்றும்* **10**-*பெரிய பாகங்களின் திடுக்கிடும் விஷயங்களும்,* **55**-*காதற் கடிதங்கள் இந்த நாவலைச் சுற்றி வளைந்து செல்லும் விசித்திரங்களும், டாக்டர் பிரஹதீசனின் துப்பறியும் தீரச் செயல்களும், இதுவரையில் எந்த நாவல்களிலும் காணாத நூதன விதமாய் இருக்கும். எல்லாம் பிரமிக்கும் ஆச்சரிய அதிசய மர்மங்களே! எவராலும் கண்டு பிடிக்க முடியாத ரகசியங்களே!!*

*இந்த நாவல் மொழிபெயர்ப்பன்று. நான்கு வருஷங்களின் உழைப்பாகும். அளவற்ற மதிப்புடையது, மிகவும் அருமையானது, வெகு சிரமத்துடன் இயற்றப்பெற்றது. பர்வத குகைகள் வெடிப்பதுபோன்றுள்ளது. காதலை இருவரிடத்து வைத்துத் திகைக்கும் தவிப்புகளும், குடும்பத்தில் ஒருவரை யொருவர் வஞ்சிப்பதின் முடிவுகளும், குணங்கெட்ட நடத்தையின் அலங்கோலங்களும், தாயாதித் துன்பங்களின் படுகுழிகளும், தர்மம் அதர்மத்தை வெற்றி கொள்ளும் மாட்சிகளும், பயங்கரமான கொலைகளும், பழிகளும், சூழ்ச்சிகளும், அவற்றை யெல்லாம் மறைக்கும் திரைகளை நெடுக விலக்கிச் சென்று துப்பறியும் தீரத்வங்களும், மற்றும் அநேக அநுபவங்களும், போதனைகளும், பத்து பகுதிகளும் ஒருங்கே கலந்து, மஹா அற்புதகாமான ஸமத்கார நிர்மாணிப்பின் முறையில் மிகு நவீனமாய் முடிக்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கே இந்த நாவலுக்கு எழுதுங்கள்.*

"விச்சித்திரத் துப்பறியும் கண்" என்ற இந்நாவலில் வரும்

# 55 காதற் கடிதங்கள்

அன்புடையார் எல்லாம் உடையார்.
நீ யாவராலும் மகிழப்பட்ட மாதரசி.
எளியார்க்கு ஈசன் துணை.
மனிதன் நினைப்பான், கடவுள் நிறை
வேற்றுவார்.
உன்னைப்போல் உலகில் உண்டோ?
கண்கள் பூத்தன, கவலை அதிகரித்
என் வீடும், என் வேலைக்காரர் [தது.
களும் தங்களுடையன.
நீ இவ்வாறு நினைப்பது இனிதோ?
குழந்தைகளின் இன்பமொழி.
நீ அன்பின் வடிவம். [வே.
சூரியனைக்காணுந்தோறும் உன் நினை
உன்னை நினைவு கூர்ந்தேன்.
இவ்வின்பம் நீடிக்கிறது.
வருங்காலம் ஸமீபிக்கிறது.
கூடும் நாள் நெருங்குகின்றது.
அன்பு செய்யாத பாவியேன்.
உன்னை எண்ணியதும் ஓர்நீர்த் துளி.
தனியே கிடந்து தவிக்கின்றேன்.
என் மனம் உருகிற்று.
உன்னை மனதில் எண்ணினேன்.
நெஞ்சங் கரைந்தேன் நான்.
சீக்கிரம் நீ வாராயோ?
நீ இளகிய நெஞ்சமுடைய வஞ்சிழை.
என் உள்ளமோ இடித்துரைத்தது.
வேறுபடுத்தி வேடிக்கை
காணும் விமலன். [ன்.
இன்னும் எவ்வாறு எடுத்தோதுவே
நல்லோர் தீங்குற்று வாட்பட வருந்து
வது ஞாலத்தில் இல்லை.
என் மாறாத அன்பைச் சொல்.
இந்தா என் காதல் முத்தங்கள்.

உன்மீது இனிய எண்ணங்கள்.
என்னே என் கவலை வாழ்க்கை!
உன் படமே என் பிராணாதாரம்.
மீண்டும் காண்பது என்நாளோ!
என் உயிரை உன்னிடம்
வைத்துள்ள நான். [கிளர்ச்சி.
உன்னை நினைக்கும்போதே உள்ளக்
என் சிந்தையிற் குடிகொண்ட
செல்வியே! என் கண்ணே!
இம்மாலையை உன் கருங்கூந்தலில்
சூட்டி நான் காண்பதற்கில்லை!
அது நான் செய்த நற்றவம்.
உன் பிரிவென்னும் நெருப்பால்.
உன்னைப் பிரிந்தபின் எனக்கு இமை
யளவு நேரமும் எல்லையற்ற காலமாகி,
விழித்தெழுந்து விம்மினேன்.
எந்நேரமும் என் மனதில் வதியும்
உன்னை எண்ணி யெண்ணி
நீயே நான்—நானே நீ!
அன்பை ஒருபோதும் குறையேன்.
என் "அத்தாண்டி!" என்றாய்.
இதுவன்றோ குடும்ப ரம்மியம்.
இரும்பினோர் மனத்தையும் இளகச்
செய்யும் வஞ்சிழையே! நீ நீடுவாழ்க.
நாம் இன்புறுவது எந்நாள்?
விசனம் தேகத்தைத் தின்கிறது!
என் இதயம் கரைகின்றேன்.
அன்பு என்னும் தேனையுண்டு நான்
பலகாரங்களில் உன் அன்பு கண்டு.
உத்தமியே பொற்கொடியே! நிலாவே!
நீ அன்புடையாய், அழகுடையாய்,
கலங்காத கற்புடைய காதலியே!
என்றும் அவர் பாதமலர் துணை.

"விச்சித்திரத் துப்பறியும் கண்" என்ற அபூர்வ நாவலை இந்த 55—காதற் கடிதங்களும் வளைந்து சுற்றிக்கொண்டு, மிகு ஸமத்காரமான துப்பறியும் தீரத்துடன் 10-பாகங்களாகச் சென்று வெகு அற்புதகரமாய் முடிந்திருக்கின்றது. விலை ரூ. 3. உடனே எழுதுங்கள்.



"விச்சித்திரத் துப்பறியும் கண்" என்ற
இந்த நாவல் முற்றிலும் ஆழ்ந்த அநுபவங்களே.
அவற்றில் சில குறிப்புகளைக் கீழ் காண்க.

தாம்பூல யுக்தி
வைத்தியரின் பிடுங்கல்
உடுப்புகளின் சுமை
நேரில்வரின் அலக்ஷியம்
விசேஷ விருந்தாளி
குழந்தையின் முத்தம்
நண்பர்களிடம் கடன்
என் இனிய இல்லம்
பழகிய அன்பி னுள்ளம்
அறிவின் பலம்
வெட்கமறியாத கட்டை
என் வீட்டு நினைவு
உன்வீட்டுக் கலகங்கள்
தவிக்கும் நெஞ்சு
ஒருநாட் பொழுது
உடனே தூக்கம் வா
நிமிஷத்திற்கு ஒருகுணம்
வெளியிற்போகும்வேளை
புன்னகைக்கு எதிரிடை
தன் குற்றம் மறைப்பு
ஊரிலிருந்து வந்தவன்
புஸ்தகக்கடை மோசம்
பழயபுத்தி போகாமை
இருவித உபசரிப்புகள்
கை நழுவும் கபடங்கள்
ஜீவனார்த்த விசாரம்
கல்லாமனைவியின் கலகம்
வலிமை பெறும் வழி
தமிழில் பேச நாணுகை
புசிக்கும்போது போதல்
ஆலயம் போவதேன்?
மதியாதார் தலைவாசல்
உன் தவறுதலை நினை
குழந்தையின் எச்சில்!

தெவிட்டாத இன்பம்
துக்க மனச் சுமை
ஐம்புலனை வென்றவன்
சத்தியமும் ஞானமும்
சாந்தமான இன்பம்
யதார்த்த சுகத்து வழி
இயற்கையின் நெறி
மோசக்கார நண்பன்
பெருமையான நேசன்
பூர்வ சொத்து பாக்கியம்
மன்மத வர்ணனை
காதலற்ற வீரம்
நஞ்சுச்சொல்லின் நாசம்
40 குடும்ப அநுபவங்கள்
பிறபாஷைப் பதங்கள்
கல்வியும் கருணையும்
புது வருட சுகம்
ஸ்ரீரங்கத்து வேடிக்கை
மனைவி வந்ததும், தாய்
எல்லாம் நன்மைக்கே!
கெட்டிக்காரன் புருகு
திடீரென்று புது சக்தி
நடுநிலை—சரி—தப்பு
புருட அடிமைகளின் கதி
வேற்றூரில் விசாரிப்பு
ருதுவான பெண்மணி
இரவல் திருடர்கள்
தாசிகளின் வீச்சு வலை
மனைவியின்மீது நினைவு
படித்த வகுப்பார்
அவரவர்தம் இயல்பு
கூட்டத்தின் தீர்மானம்
வழக்கம் வரும் விதம்
மனிதப் பாற்சாலை!

விசாரத்தின் விபரீதம்
திண்ணைப்பேச்சுகள்
இளமையில் வறுமை
தாயகம் சென்ற மனைவி
கடைசிகால நோய்
பிரீதி, பின் துவேஷம்
சூழ்வினையின் வேலை!
தெய்வத்தின் திறமைகள்
மூவகை சக்தி விவரம்
நானே! நலனே! நட்பே!
நாயக ரஞ்சித மதுரம்
நிதானித்து யோசித்தல்
செல்வம் செல்லும் வழி
சந்தேகமெனும் பேய்!
ஆத்திரத்தில் அறியாமை
நம்பவேண்டியவர்கள்
பிறரை நிதானிப்பது
மனைவியிடம் புகார்!
திடீரெனச் சந்தித்தல்
உறவும் பிரிவும் பகையும்
இனம்இனத்தைச்சேரும்
பெண்களின் விடுதலை
வீட்டுத்தலைவனின்கவலை
இல்லறத்து மர்மங்கள்
அழகின் அரிய மர்மங்கள்
சடிகார அநுபவங்கள்
உழுதவனின் கணக்கு!
நெஞ்சே உண்டு துணை!
செவ்வாய் வெறும்வாய்
வரவேண்டிய பாக்கி
வந்தனங்களின் தந்திரம்
பெண்மை—ஆண்மை
நொந்துபோன நெஞ்சு
ஆசை அறுபது நாள்!

இன்னும் இதுபோன்ற ஆயிரக்கணக்கான அநுபவஞானங்களும், லோக ரகசியங்களும் இந்த நாவல் முற்றிலும் பரவிப் பெருகி நிறைந்திருக்கின்றன. உடனே இந்த நாவலைப்பெற விரும்புங்கள். விலை ரூ. 3.

## “விச்சித்திரத் துப்பறியும் கண்”

### என்ற அபூர்வ நாவலிலுள்ள விஷயங்களின் விவரங்களைப் படித்தீர்களா?

பிரபஞ்சத்தின் இயல்புகள், மோசங்கள், வாழ்க்கையின் சிக்குகள், பிணைப்புகள், தைப்புகள், நொந்துபோன நெஞ்சின் ஏமாற்றங்கள், பெருமூச்சுகள், துரோகங்கள், பழிபடு பாவங்கள், விழிநீர் பெருக்குகள், பாசாங்கு பந்தத்துவங்கள், சுயாலங்கள், போலி அன்புகள், பொய்க் காதல்கள், பெண் துரோகங்கள், நம்பி விடும் பேதமைகள்—இன்னும் அநேக அநுபவ ஞானங்களையும், உலக நடவடிக்கைகளையும் அறிவதற்கு இந்த நாவலில் தோன்றும் சம்பவங்கள் பெரியதோர் அளவுகோல். யாவும் கற்கண்டுத் துண்டுகளே. தமிழ் உலகிற்கே இது ஒரு பெரும் புதுமையான பெரிய நாவல். உடனே எழுதுங்கள்.

### முடிவுரை.

இப்பிரகடன பத்திரிகையைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கின்றோம். பாரிஜாத புஷ்பமானது பார்க்க ரமணீயமாயும், பூஜா யோக்கியமாயும், ஸகலருக்கும் பிரியகரமாயும், ஸுவாஸனை பொருந்தியதாயும் இருந்து, உத்கிருஷ்டமான பெயரை யடைந்திருப்பது போல, இந்த **“விச்சித்திரத் துப்பறியும் கண்”** என்ற அபூர்வ நாவலும், அந்த பாரிஜாத புஷ்பத்தின் அழகிய வர்ணனையைப் போலவே அதி சிலாக்கியமாய் இருக்கும்.

பாரிஜாத புஷ்பம் உதிருவதுபோல் இந்த **“விச்சித்திரத் துப்பறியும் கண்”**ணிலுள்ள ஒவ்வொரு அத்தியாயங்களும், பிரதி வாக்கியங்களும், ஸதா ஆநந்தத்தையே தந்துகொண்டிருக்கும். ஸ்திரீ வித்யாபிமானிகளும், இன்னுமுள்ள விவேகிகளாகிய கனவான்களும் இந்த அபூர்வ நாவலைப் படித்தபிறகு தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லலாம். எங்களால் வெளியிடப்படும் இந்த நாவல் புஸ்தகத்தின் பெருமையை நாங்களே சொல்லிக் கொள்வதானது ஆத்மஸ்துதியைப் போன்றதாகும்.

**சீக்கிரம் புஸ்தகம் செலவாய்விடுமாதலின் இந்த நல்ல ஸமயத்தைத் தவிர விடாமல் உடனே இன்றைக்கே எழுதிக்கொள்ளக் கோருகிறோம்.**

**விலை ரூபா 3. வி. பி. செலவு அணா 10.**

விலாஸம்:—
எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு, பத்திராசிரியர்,
617, மேல அடையவளஞ்சான் வீதி, ஸ்ரீரங்கம். (SRIRANGAM.)

“ஆநந்த குணபோதினி பிரஸ்”, 302, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஓம் பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைப் பெருக்கி ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் உயரிய செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.” (திருக்குறள்.)

கமலம் - 2. Vol. II. } சென்னை: பிரபவஹு மார்கழிமீ 1உ 1927-ம்வரு டிசம்பர்மீ 16உ { இதழ்—21. No. 21

## ஆநந்த தர்பணம்

“மூவர்க்கு முதல்வா போற்றி” என்று சிவபிரானை ஒரு பெரியவர் ஸ்தோத்திரம் செய்திருக்கின்றார். இதற்குக் காரணம் ஸம்ஹார கர்த்தாவாகிய பரமேசுவரனே திரிமூர்த்திகளில் முதன்மையானவர் என்பதே. சிருஷ்டியினால் உலகத்தில் பிரஜாவிருத்தியும், இரக்ஷிப்பினால் ஆயுள் விர்த்தியும் உண்டாகின்றன. பிரமனால் படைக்கப்படும் மனிதர்களில் பலர் துஷ்டர்களா யிருக்கின்றனர். அவர்களுடைய ஹிம்ஸையைப் பொறுக்கமுடியாமல் ஓலமிடும் சிஷ்டர்களை நாராயணமூர்த்தி காப்பாற்றுகிறார். வாஸுதேவனுடைய பொறுமையே பொறுமை. அவரை சிசுபாலன் வெகுவாய்த் தூஷித்து அவமானப்படுத்தினான். முதல் தூஷணை முடிந்த க்ஷணமே பகவான் சிசுபாலனுடைய சிரத்தைக் கரத்தால் கொய்தாரோ? ஏன் அப்படிச் செய்யவில்லை? இன்னும் என்ன செய்கிறான் பார்ப்போமென்று பொறுமையா யிருந்தார். அந்தக் கருணாநிதியின் சாந்த குணத்தைக் கண்டு துஷ்டனான சிசுபாலன் வாயை மூடிக்கொள்ளாமல் மேன்மேலும் நிந்திக்கத் தொடங்கினான். உடனே கண்ணன் இனி பொறுப்பதிற் பயனில்லையென்று தம்முடைய சக்கரத்தைப் பிரயோகித்துப் பரம துஷ்டனாகிய சிசுபாலனுடைய தலையை அறுத்தெறிந்தார். பகவானாகிய சிவமூர்த்தியின் காரியம் வேறு மாதிரி. பல ஜனங்கட்கு இடுக்கண் விளை[illegible] திரிபுராதிகளை ஒரு நொடியில் தமது கண்ணைத் திறந்து எரித்து[illegible]விட்டார். அவருடைய ஸம்ஹாரத்தால் உலகத்திலுள்ள துஷ்டர்கள் தொலைந்தனர். நல்லவர்கட்கு ஜயகாலம் நேர்ந்தது. பரமேசுவரனுடைய கருணை மிகவும் கொண்டாடத்

தருந்தது. அர்ச்சுனனுடைய வில்லடிகளெல்லாம் அவருக்கு இன்பமயிருந்தன. அந்தனை அடிகளையும் பட்டுக்கொண்டு அந்த அர்ச்சுனனுக்கே பாசுபதாஸ்திரமும் கொடுத்து மகிழ்வித்தார். பக்தர்களிடம் இப்படி இனி துஷ்டர்களிடமோ? அவர் கொடியவர்களை ஹதம் செய்கிறவர். மூன்றாவது கண்ணைத் திறந்து பார்த்தால் போதுமானது. அத்தனை வல்லமை பொருந்தியவராதலின் சிவ மூர்த்தியை "மூவர்க்கு முதல்வா" என்று பாடியிருக்கிறார்கள். நாமும் சிவ கடாக்ஷத்திற் குரியவராகவேண்டி அவருடைய திருவடிகளைத் தியானம் செய்யக்கடவோம்.

***

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து" என்றபடி இந்த மார்கழி மாதத்தில் அனைவரும் உதயத்தில் நீராடிப் பகவானை வணங்கும் பாக்கியம் பெறுவர். மற்ற மாதங்களிலும் மார்கழி மாதம் தெய்வத்தின் பிரபை வீசப்பெற்றது. ஸ்ரீரங்கத்தில் வைகுந்த ஏகாதசி உத்ஸவமும், சிதம்பரத்தில் ஆருத்திரா தரிசனமும் இந்த மாதத்திலே தான் வருகின்றன. இந்தப் புண்ணிய ஸ்தலங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் எத்தகைய நாஸ்திகர்களையும் ஆஸ்திகராக்கவல்லது. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விசேஷத்திற்குப் பெயர்பெற்றது. அதில் மார்கழி மாதம் பகவதாராதனைக்குப் பக்குவமாய்ப் பரிமளிப்பது. ஸதா காலமும் சலனப்பட்டு நிற்கும் மனத்தை ஒரு வழிப்படுத்தி ஒடுக்கி ஈசனின் பாதாரவிந்தங்களைச் சிந்திக்கும்படி திருப்புவதற்கு இந்த மாதம் அதி உத்கிருஷ்டமானது. எனவே, நாம் இந்த மாதத்தின் இருபத்தொன்பது நாட்களையும் பகவத் தியானத்திலேயே செலுத்தக் கடவோம்.

***

"மனது அறிந்த தீமை." மனதுக்குத் தெரிந்து, துரோகம் என அறிந்திருந்தும் செய்யும் தீமை மன்னிக்கத் தகாததாகும். அறியாமற் செய்யும் தோஷங்கட்கு பகவத் தியானத்தினால் பரிகாரம் சித்திக்கும். நாம் நடக்கும் பொழுது எத்தனையோ சிற்றெறும்புகள் மிதிபட்டுத் துன்புறுகின்றன; இறக்கின்றன. இதுபோன்ற அறியாமற் செய்தவற்றைப் பகவத் ஸ்தோத்திரத்தால் பரிகரிக்கலாம். பால் வாங்கிச்சென்ற ஒரு குழந்தை கால் இடறித் தானும் விழுந்து பாலையும் கொட்டிவிட்டுத் தாயிடம் வந்து அழுகிறது. தாய் அதற்கு சினங்கொள்ளாமல் குழந்தையின் பயந்ததன்மையை நோக்கி 'போனால் போகிறது' என்று சமாதானம் செய்கிறாள். அதுபோல், தான் அறியாமற் செய்த தோஷங்கட்குப் பகவானை வேண்டி அவற்றை நிவர்த்திக்கும்படி கெஞ்சும் உண்மைப் பக்தனைப் பரந்தாமன் மன்னித்துப் பிரீதியுடன் ஏற்றுக் கொள்கிறார்.

***

"அம்சம், அம்சி." உலகில் அம்சமானது அம்சியையே நாடிக்கொண்டிருக்கும் என்பது இயல்பு. காரியம் அம்சமாம்; காரணம் அம்சியாம். [illegible] அம்ஸங்களென்றும், அவைகளின் அம்சி பிருதிவி [illegible] மழை துளி முதலியன அம்ஸங்களென்றும், அவைகளின் அம்சி பூமி[illegible] ஜலம் என்றும், தீபஜ்வாலை முதலியன அம்சங்களென்றும், அவைகளின் [illegible]ம்சி பெரிதாகிய அக்னிமண்டலம், (ஆதித்த லோகம், அக்னிலோகம் [illegible]லியது) என்றும், மூச்சுக்காற்று அம்சமென்றும்,

16583



அதன் அம்சி வெளியிலுள்ள வாயு என்றும் அறியத்தக்கது. இவ்விதமே பிரபஞ்ச சிருஷ்டியும் ஜீவர்களும் அம்சமென்றும், அவற்றைப் படைத்துக்கும் பகவான் அம்சி அதாவது ஆதிமூலர் என்றும் அறிந்துகொள்கிறோம்.

***

"அம்சம் அம்சியை நாடும்" என்பது இயற்கையில் அமைந்த நியமம். மண் கல் முதலியவற்றை ஆகாயத்தை நோக்கி எறிந்தாலும் அதன் அம்சியுள்ள இடமான பூமியை நோக்கியே கீழ் விழுகிறது. மழைத்துளியும் பூமியினின்று மேகங்களால் உயரக் கொண்டுபோகப்பட்டிருப்பினும், அது மீண்டும் பூமிக்கே திரும்பி அம்சியான ஜலபாகத்தையே திரும்ப அடைகிறது. இவ்விதமே தீபத்தின் ஜ்வாலையை நாம் எப்படி வளைத்தாலும் தன் அம்சியிருக்கும் இடமான ஆகாசத்தை நோக்கி மேல் பார்த்தபடியேதான் போகிறது; கீழ் நோக்குவதில்லை. மூச்சை எவ்வளவு அடக்கினும் அது வெளியிலுள்ள அம்சியான வாயுவையே சேர்ந்துகொள்வதற்கு வெளியில் வந்துவிடுகிறது. மேற்சொல்லியவற்றால் எந்த வஸ்து எதையே நாடுகிறதோ அந்த வஸ்துவுக்கு அதுவே அம்சி என்ற நியமம் தெளிவாகக்கூடும். இவ்விதமே அம்சமான ஜீவாத்மாவும் அது பல உலக மாய்கைகளில் உழன்றாலும் முடிவில் அம்சியாகிய பகவானையே — பரமாத்மாவையே சரணமாக அடைகின்றது.

***

"ஜன்ம வாஸனை" வாஸனை என்பது நல்லது கெட்டது என இரு வகை. அது பூர்வ ஜன்மத்திலிருந்து இந்த ஜன்மத்திற்கும் தொடர்வதினாலேயே ஜன்ம வாசனையென்றும் சொல்லப்படுகிறது. இந்த வாசனையானது ஸங்கற்பம், காமம் இதன் மூலமாக எதைச் செய்யவும் ஏவுகின்றது. ஒரு பெண்மணியை சாதாரணமாகவே கண்கள் பார்த்தாலும், அது நல்ல வாசனையைக் கொண்டிருந்தால் பரஸ்திரீயைக் காணலாகாதென்று ஒதுங்கிக் கொள்கின்றது. அந்தப் பார்வையி லிருந்தும் விலகுகிறது. கெட்ட வாசனையைப் பெற்ற கண்களோ அச்சுந்தரியை விரும்பி அவளைச் சுகிக்க நாடுகின்றது. இவ்விதமாக வாஸனையானது முதலில் ஸங்கல்பத்தை அதாவது ஒரு எண்ணத்தை உதிக்கவைத்து அதன்பின் காமமாகிய விருப்பத்தையும் ஏவுகின்றது. பூர்வ ஜன்மத்தில் நமக்குக் கெட்ட வாசனை இருப்பின், அதை இந்த ஜன்மத்தில் ஆசாரியரது உபதேசங்களாலும் பகவத் பக்தியாலும் திருத்திக்கொண்டு உத்தம வாசனையையும் உத்தம நோக்கையும் பின்பற்றிச்சென்று நாம் உய்வதற்குப் பிரயத்தனப் படவேண்டும்.

***

"மனம் எனும் தோணி பற்றி, மதியெனும் கோலை யூன்றி" சேர்வழி தெரிந்து மனத்தை யதில் நாட்டி பகவத் பக்தியில் லயப்படவேண்டும். "மனம் என்பதே மகத்" எனப்படுகிறது. ஈசுவரத் தியானத்திற்கு. மனதின் துணையே பிரதானம். மனதே பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஹேது; மனது பஞ்ச பூதங்களின் அம்சமாதலால் அது பிரபஞ்சத்தையே நாடிக்கொண்டிருக்கும். அந்த நாட்டம் உள்ளவரையில் கர்மம் ஏற்படும். கர்மமுள்ளவரையில் ஸ்வர்க்க நரகங்களில் ஸுகதுக்கானுபவமும், ஜன்மமும்

இருந்துகொண்டே யிருக்கும். மனதில் வாஸனை யென்று ஒன்றுள்ளது. அது எப்பொழுதும் நல்ல காரியங்களிலோ, அல்லது கெட்ட காரியங்களிலோ ஏவிக்கொண்டே யிருக்கின்றது. இந்த வாஸனையையே நாம் மேலே குறிப்பிட்டது. இந்த மனத்தின் பிரபஞ்ச வியாபாரம் ஒழிந்து அதை ஒரே நிலையில் நிற்கவைத்து அந்த ஒரு நிலைச் சித்தத்தோடும் பகவானைத் தியானிக்கப் பக்குவப்பட்டு, எல்லாவற்றையும் பகவானுக்கே அர்ப்பணம் செய்து, தனக்கென ஒன்றும் இல்லாமல், தன் செயல் என எதையும் எண்ணாமல், யாவுமே பகவத் ஸங்கல்பமெனக்கொண்டு பகவத் ஸ்மரணையையே பரம ஸாதகமாகப் பின்பற்றுவாருக்குத் தான் ஸ்வர்க்க நரகங்கள் ஒழிந்து பகவானுடன் லயிப்பதாகிய பரம ஸாயுஜ்யபதவி கிடைக்கும். இவ்வுண்மைகளையுணர்ந்து நம் மனத்தை விரதம், உபவாசம், நித்திய பூஜை முதலியவற்றால் வசப்படுத்தி பகவானைத் துதித்து அவரது அருட் பேற்றினை அடையக்கடவோம்.

கிடைத்ததில் திருப்தி.

இனி விதியில்லை யென்ற போது மனம் அடங்கிவிடுகிறது. வேறு பொடிகிடைக்காத சமயம் காரமற்ற பொடியே உயர்ந்ததாய் விடுகிறது. இவ்விதமே விவாகத்திற்குமுன் அந்த இந்த பெண் வேண்டாமெனக் குற்றம் பேசுகிறான். விவாக முடிச்சு விழுந்த பிறகோ வந்த பெண் எப்படியிருந்தாலும் மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டு விடுகிறான் இது உண்மைதானே?

அதற்குத் தனிக் கௌரவம்.

---

விசேஷ காலங்களில் நீங்களே ஒருவருக்கு ஒன்றைச் செய்கிறதைவிட, உங்கள் பெரியோர்கள் மூலம் அதைக் கொடுப்பித்தால் அதற்கு விசேஷ மதிப்புண்டு. பெரியோரை முன் நிறுத்தி அவர்கள் மூலம் செய்யும் எந்த விசேஷங்களும் செலவுத் தொகை கொஞ்சமா யிருப்பினும் சிறப்பாகவும் கௌரவமாகவும் பரிமளிக்கும். அனுபவமில்லாத சிறியோர் எவ்வளவு பணம் செலவழித்துச் செய்யினும் அது சோபிப்பதில்லை. மருமகள் தானே செய்வதைவிட மாமியின் மூலம் செய்விப்பது அதிக மதிப்புக்கிடமல்லவா? தானே செய்வதைவிடத் தன் பெற்றோரைக் கொண்டு செய்விப்பது மேன்மையல்லவா?

ஆநந்த குணபோதினி

பிரபவ ௵ மார்கழி ௴ 1௳

# 42-வது காங்கிரஸ் மகா சபை

இவ்வருஷம் டிஸம்பர்மாதம் 26-ந்தேதியில் சென்னையில் கூடும் காங்கிரஸ் மகா சபைக்கு நாம் அனைவரும் சென்று ஆதரிக்கக் கடவோம். எல்லோருக்கும் பிரஸங்கங்கள் நன்றாகக் கேட்கும்படியாகச் செய்ய தொனியை அதிகப்படுத்திக் காட்டக்கூடிய "லவுட்ஸ்பீக்கர்" என்ற யந்திரத்தை அமைக்கவும் ஏற்பாடா யிருக்கிறது. காங்கிரஸ் மகா சபையையொட்டி வேறு பல மகா சபைகளும் வழக்கம்போல்கூடும். இவ்வருஷத்தில் சென்னைக்கு மிக்க கௌரவம் கிடைக்கின்றது. இதற்கு முன் 1887, 1894, 1898, 1903, 1914-இவ்வருஷங்களில் சென்னையிற் கூடியிருக்கின்றது. இப்பொழுது நடைபெறுவது ஆறாவது தடவையாகும். 1903-ம் வருஷத்திய சென்னைக் காங்கிரஸ் நன்றாக நடைபெறவில்லை. விடாது பொழிந்த பெரும் மழையைக் காங்கிரஸ் பந்தல் தாங்கக்கூடவில்லை. மழையில் நனைந்து கொண்டு பிரஸங்கங்களைக் கேட்டனர். காங்கிரஸ் பந்தல் முற்றிலும் மழை ஜலம் பிரவாகமாயோடிற்று. ஸபாநாயகரான ஸ்ரீ லால்மோஹனகோஸ் மெலிந்த குரலிற் பேசினார். அந்த மழையின் சப்தமும் இடியின் அதிர்ச்சியும் தான் கேட்டதே யன்றி, பிரஸங்கம் ஸமீபத்திலிருந்தவர்களுக்குக் கூட நன்றாய்க் கேட்கவில்லை. மழையின் கொடுமையால் காங்கிரஸ் டிக்கட் பெற்றிருந்தவர்கள்கூடப் போக முடியவில்லை. முதல் நாள் காங்கிரஸுக்கு வந்தவர்களிற் பலர் மறுதினம் வரவில்லை. 1908-ம் வருஷத்தில் சூரத்தில் நடவாது போன காங்கிரஸுக்குப் பதில் ஒரு 'சிறு காங்கிரஸ் கூட்டத்தை'ச் சென்னையில் நடத்தினர். அது மிதவாதிகளின் கூட்டமாயிருந்தது. காங்கிரஸை ஆரம்ப முதல் நேசித்தவர்களில் வெகு பேர் இந்தக் கூட்டத்திற்கு வரவில்லை. மிதவாத உடன்படிக்கையில் கையொப்பமிட்டவர் மட்டுமே வரலாமென்றும் ஓர் நிபந்தனை. பழய கட்சி, புதுக்கக்ஷி என்ற பிரிவினையின் ஆரவாரம் அப்பொழுது அதிகம். ஆயினும் சூரத் நகரில் காங்கிரஸ் நடைபெறாது நின்றுபோனபின்பு பழய கக்ஷியாராகிய மிதவாதிகள் இக் காங்கிரஸ் கூட்டத்தை நடத்தி வைத்து அதற்கு உயிர் கொடுத்திராவிடில் பிறகு காங்கிரஸ் தடைபட்டுப் போயிருக்கும். அவ்வருஷத்

தில் புதிய கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ திலகர் முதலாயினோர் நாகப்பூரில் காங்கிரஸ் மகா சபையை நடத்தப் பிரயத்தனம் செய்துவந்தனர். பழைய கட்சியினரோ சென்னையில் நடத்தத் தீவிரமான ஏற்பாடுகளைச் செய்தனர். இரண்டு பக்கங்களிலும் காங்கிரஸ்! எது நடைபெறுமோ, எவ்விதம் முடியுமோவென்று பிரமிப்பாயிருந்தது. கலகங்கள் நேரக் கூடுமென்று கருதி நாகப்பூர் காங்கிரஸைக் கவர்ன்மெண்டார் தடுத்துவிட்டனர். கடைசியில் மிதவாதிகளான பழைய கட்சியினரே வெற்றி பெற்று சென்னையில் சிறு காங்கிரஸ் கூட்டத்தை வெகு குதூகலத்துடனும் சிறப்புடனும் நடத்தினர். இக்கூட்டம் காங்கிரஸ் எண்ணிக்கையுடன் சேர்க்கப்படாத ஒரு தனிக்கூட்டமாகும். அப்பொழுது இருந்த தலைவர்களில் வெகு பேர் இப்பொழுது இல்லை.

காங்கிரஸ் மகா சபையின் ஆதி உற்பவ சரித்திரம் மிக்க அதிசயமும் அபூர்வமுமானது. அது எவ்விதம் எவரது முதன் முயற்சியால் ஆரம்பமாயிற்றென்று கண்டறியக்கூடவில்லை. 1885-ம் வருஷத்தில் பம்பாய் நகரில் கிறிஸ்மஸ் விழாவின்போது ஒரு ராஜீய மகா சபையைக் கூட்டுவதென்றுமட்டும் தீர்மானமாகி அவ்விதமே நடைபெற்றதாய்ச் சொல்லப்படுகிறது. இதற்கு மேல் அதிக விவரம் தெரியக்கூடவில்லை. இம்மகா சபையின் ஸ்தாபனத்திற்கு ஏ. ஓ. ஹ்யூம் என்ற ஆங்கிலப் பெரியோர் தாய்தந்தைபோன்றும் தலைமை பெற்று விளங்கினார் என்று மட்டும் அறிகிறோம்.

முதல் காங்கிரஸுக்குக் கூடாரங்கள், பந்தல்கள் ஏதுமில்லை. ஒரு விசாலமான கட்டிடத்தில் கூடிற்று. சபையின் நிகழ்ச்சிகளைக் கவனிக்க உத்தியோகஸ்தர்களும் வந்திருந்தனர். காங்கிரஸின் முதல் தீர்மானத்தை "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயர் பிரேரேபித்தார். அக்கிராஸனரின் பிரஸங்கமும் மிகச் சிறியதே. இப்போதைப்போல் நீண்டு பெருகிய உபன்யாஸமல்ல. முதல் காங்கிரஸுக்கு சுமார் நூறு பிரதிநிதிகளே வந்திருந்தனர்.

காங்கிரஸின் ஆரம்பத்தில் முஸ்லிம் பிரமுகர்கள் அதில் சேர்வது தங்களின் இராஜபக்திக்குக் குறைவென்று கருதி ஒதுங்கியிருந்தனர். ஆயினும் 1887-ம் வருஷத்திய சென்னைக் காங்கிரஸில் முஸ்லிம் பிரமுகரும், பிறகு ஹைகோர்ட் ஜட்ஜி ஆனவருமான ஸ்ரீ பத்ருதீன் தியாப்ஜி அக்கிராஸனம் வகித்து, முஸ்லிம்களும் காங்கிரஸை ஆதரிக்க வேண்டியது அவசியம் என்று வற்புறுத்தினார். ஹிந்து—முஸ்லிம் ஐக்கியத்தின் முதற் காலை நாட்டினவர் இவரே.

1886-ம் வருஷத்திய இரண்டாவது காங்கிரஸின் அக்கிராஸனத்தை வகித்த ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி அதன்பின் இருபது வருஷங்களாக இந்தியாவின் விடுதலைக்கு உழைத்துப் பயன் ஏதுங்காணாமல் சிந்தைநொந்து 1906-ம் வருஷக் காங்கிரஸுக்கு அக்ராஸனாதிபதியாய் அமர்கிறார். அமர்ந்து, தமது ஏமாற்றத்தை விளக்கி ஸ்வராஜ்யமே இந்தியாவின் மீட்சி என்றும், பாரத மக்கள் கோரவேண்டியது ஸ்வராஜ்யமே என்றும் உபதேசித்து அருள்கின்றார். காங்கிரஸில் 'ஸ்வராஜ்யம்' என்ற பதத்தைப் புக வைத்தவர் நமது தாதா தான். இந்த ஸ்வராஜ்ய பதத்தை உபயோகித்ததற்காகப் பம்பாயில் இரண்டொரு பத்திரிகைகளின் மீது இராஜத்துவேஷ வழக்கும் நடந்து, பின் 'ஸ்வராஜ்யம்' என்ற பதம் குற்றமில்லாதது என்றும் தீர்ப்பாயிற்று. அது ஒரு காலம்! 1886-ம் வருஷத்திய அக்ராஸனத்தின்போது ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி பிரிட்டிஷ் பார்லிமெண்டின் முதலாவது இந்திய அங்கத்தினராய் விளங்கினார். 1906-ம் வருஷ அக்ராஸனத்திலோ அவர் பார்லிமெண்ட் தேர்தலில் தோல்வியுற்று இந்தியாவுக்குத் திரும்பியவராவர். பிரிட்டிஷ் பார்லிமெண்டு அவரை ஏற்காவிடினும், இந்தியப் பார்லிமெண்டான காங்கிரஸ் அவரைப் பிரேமபூர்வமாய் ஏற்று அவ்வருஷ அக்கிராஸன பதவியை அவருக்கு ஸமர்ப்பித்தது.



1888-ம் வருஷத்திய அலகாபாத் காங்கிரஸுக்கு மூன்று இடங்களைத் தெரிந்தெடுத்தும், ஸ்தல அதிகாரிகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஆக்ஷேபம் கூறி மறுத்துவிட, பின் அங்கிருந்த ஒரு காலியிடத்தின் சொந்தக்காரரான ஒரு நவாபை அவர் வசிக்கும் லக்ஷ்மணபுரிக்கு ரகசியமாய்ச் சென்று வாடகைக்குப் பேசிக்கொண்டு வந்து அந்த ஸ்தலத்தில் காங்கிரஸை நிறைவேற்றினர். இந்தக் காங்கிரஸில் தான் ஸ்ரீ லஜபதிராய் முதன்முதலாகத் தோன்றுகிறார்.

1890-ம் வருஷக் காங்கிரஸின்போது உத்தியோகஸ்தர்கள் போகக்கூடாதென்று அரசினர் தடுத்துவிட்டனர். பிறகு, உபாத்யாயர்கள்கூடப் போகக்கூடாதென்று ஆக்ஷேபிக்கப்பட்டது. இப்பொழுது அந்தப் பீடைகளெல்லாம் விலகிப் போயின. லண்டனில் காங்கிரஸைக் கூட்டவேண்டுமென்று 1890, 1891-ம் வருஷங்களில் தீர்மானங்கள் நிறைவேறிற்றாயினும் அது சித்தி பெறவில்லை.

1904-ம் வருஷத்தை எவரும் மறக்கக்கூடாது. அந்த வருஷமுதல் இந்த 23—வருஷங்களாக எவ்வளவோ அடக்கு முறைகளும் சட்டங்களும் தோன்றியுள்ளன. இவ்வளவுக்கும் சிதையாது தேசக்கிளர்ச்சி மேன்மேலோங்கி வந்திருப்பதே பாரத ஜாதியினரின் விழிப்புக்குப் போதிய திருஷ்டாந்தமாகும். 1904-ம் வருஷக் காங்கிரஸில் வங்காளப் பிரிவினையின் கண்டனமானது மஹா உக்கிரகமாகும். 1905-ம் வருஷக் காங்கிரஸிலும் இந்தப் பிரிவினையை ஸ்ரீ சுரேந்திரநாத பானர்ஜி கண்டித்து, 'வந்தே மாதரம்' என்றால் தண்டனை விதிக்கப்படுகிறதென்றும், வங்காளச் சிறுவர்கள் சிறையில் வருந்துகின்றனரென்றும் பேசினார். இந்த வருஷத்தில் தான் 'வந்தே மாதரம்' என்ற பாரத கீதம் தேசமெங்கணும் வியாபிக்கலா

யிற்று. அதற்கு முன்பு "மிஸ்டர்" என்று பெயருக்கு முன் வழங்கி வந்த ஆங்கில பதத்தை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக இவ்வருஷமுதல் ஸ்ரீ என்றும், ஸ்ரீயுத என்றும், ஸ்ரீஜுத் என்றும் தேசிய முறையில் திருத்தப்படலானது.

1906-ம் வருஷக் காங்கிரஸின்போது பழய—புதிய கட்சிகளின் ஆரவாரம் வெகு பெரிது. பழய கட்சிக்கு பிரோஸ்ஷா மேத்தா என்ற பம்பாய் கனவான் தலைவராக இருந்தார். புதிய கட்சிக்கோ நமது திலகர் பெருமான் தலைவர். எந்தக் கக்ஷியிலிருந்து காங்கிரஸுக்கு அக்கிராசனரைத் தெரிந்தெடுப்பதென்று பெரும் குழப்பமாயிருந்தது. அந்த ஸமயம் ஸ்ரீதாதாபாய் நவுரோஜி லண்டனில் இருந்தார். அவரை இரு கக்ஷியாரும் விரும்பி அவர் பொது மனுஷ்யரென்று கருதி அக்ராஸனராகத் தெரிந்தெடுத்தனர். அவர் அக்ராஸனம் வகித்துச் செய்த ஸ்வாராஜ்ய பிரஸங்கம் காங்கிரஸுக்கே புதியதாகும். 'இந்தியாவில் ஏற்பட்டுள்ள அதிகார வர்க்க ஆக்ஷி இங்கிலாந்தில் அமுலில் இருந்தால், அதற்கு அவ்விடத்திய ஜனங்கள் ஸம்மதிப்பார்களா' என்றும், 'பேசாதிருந்தால் திருப்தி யுற்றோரெனவும், பேசினால்—கேட்டால் கிளர்ச்சி செய்பவர்களெனவும் கூறுகிறார்க' ளென்றும் ஸ்ரீ தாதாபாய் புகன்றார்.

பழய கட்சியினரான மிதவாதிகள் 1906-ம் வருஷக் காங்கிரஸின் அக்ராஸனாதிபத்யத்துக்கு ஸ்ரீ தாதாவை விரும்பி யழைத்தனராயினும், அவரது உபன்யாஸமும், அதன்படி நிறைவேறிய காங்கிரஸ் தீர்மானங்களும், புதிய கட்சியினரின் சார்பிலேயே இருக்கக் கண்டு ஏமாற்றமுற்றனர். எனவே, 1907-ம் வருஷக் காங்கிரஸில், 1906-ம் வருஷத்தில் நிறைவேறிய தீர்மானங்களை ஒதுக்கிவிட்டுக் காங்கிரஸை நடத்தப் பழய கட்சியினர் ரகசியமாக ஏற்பாடுகள் செய்தனராம். புதியகட்சித் தலைவராகிய ஸ்ரீ திலகர் இதை எப்படிச் சகிப்பார்? அவ்வருஷத்தில் பழய கட்சியினரான மிதவாதிகட்கே பலம் அதிகமா யிருந்தது. காங்கிரஸ் எவ்விதம் முடியுமோவென்று கலங்கி நின்றனர். பழயகட்சித் தலைவரான ஸ்ரீ பிரோஸ்ஷா மேத்தாவின் வகையார் புதிய கட்சியினர் எதாவது குழப்பம் செய்யின், அவர்களை நன்றாய்ப் புடைக்கும்படி தடிகளுடன் பல குண்டோதரர்களை ஏற்படுத்தி யிருந்தனரென்றும் ஒரு பிரஸ்தாபமுண்டு. இது எவ்விதமிருப்பினும் கடைசியில் புடைக்கப்பட்டதென்னவோ உண்மை!

பிறகு 1907-ம் வருஷக் காங்கிரஸ் சூரத்திற் கூடிற்று. 1906-ம் வருஷக் காங்கிரஸின் தீர்மானங்கள் கைவிடப்பட மாட்டாதென்று ஸ்ரீ கோக்கலே புதியகட்சியினரை சமாதானம் செய்தார். ஆயினும் மிதவாதியான ஸ்ரீ கோக்கலேயைப் புதிய கட்சியினர் நம்பவில்லை. ஸ்ரீ ராஷ்விகாரிகோஷ் ஒரு நிமிஷத்திற்குள் அக்கிராஸனராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இது தெரிந்தெடுக்கப்படும் ஒழுங்குக்கு விரோதமாய் இருப்பதை ஸ்ரீ திலகர் ஆக்ஷேபித்தார். அதற்குள் அக்ராஸனர் தமது தலைமைப் பிரஸங்கத்தைப் படிக்க ஆரம்பித்தார். ஸ்ரீ திலகருக்கு இது பொறுக்கவில்லை. தமது ஆக்ஷேபனைக்கு விடை கூறித்தான் ஆகவேண்டுமென்று காங்கிரஸ் மேடையின்மீது ஏறி ஸபையினரைப் பார்த்துப் பேசத் தொடங்கினார். அக்ராஸனரும் தமது பிரஸங்கத்தைப் படிப்பதை நிறுத்தவில்லை. தலைவரைத் தெரிந்தெடுத்த பிறகு ஸ்ரீ திலகரின் ஆக்ஷேபமும் திருத்தப் பிரேரணையும் செல்லுபடியாகாதென்று கூறவே, திலகர் ஆத்திரத்துடன் அதை மறுத்தார். உடனே சபையில் குழப்பம் தோன்றிவிட்டது. காங்கிரஸ் மேடையில் செருப்பு எறியப்பட்டது. நாற்காலிகள் வீசி எறியப்பட்டன. குண்டாந் தடிகளுடன் பலர் தோன்றிக் கண்டபடி புடைத்தனர். அந்த ஸமயம் மிதவாதிகளால் போலீஸார் அழைக்கப்பட்டனரென்று சொல்லப்படுகிறது. காங்கிரஸில் போலீஸ் பிரவேஸம் இதுவே முதல் தடவை. இதற்கு முன்னுமில்லை, பின்னும் நேராது. ஸ்ரீ திலகரை அவரது கட்சியினர் சூழ்ந்துகொண்டு அவருக்கு அடிகள் விழாமல் வெளியில் அழைத்துச் சென்றனர். காங்கிரஸில் பெரும் பிளவு நேர்ந்ததுடன் அவ்வருஷத்திய காங்கிரஸ் நடைபெறாமலே போயிற்று!

1908-ம் வருஷத்தில் சூரத்தில் முன்பு நடவாதுபோன காங்கிரஸுக்குப் பதிலாக ஒரு சிறு காங்கிரஸ் கூட்டம் சென்னையிற் கூட்டப்பட்டதை மேலே குறிப்பிட்டிருக்கிறோம்.

அதன்பின் ஸ்ரீ திலகர் இராஜத் துவேஷக் குற்றத்திற்காகத் தண்டனைபெற்று பர்மாவுக்கு அனுப்பப்பட்டார். காலம் செல்லச் செல்ல, பழய—புதிய கக்ஷிகள் என்ற பெயர் ஒழிந்து யாவரும் தேசியவாதிகளாயினர். அபிப்பிராய பேதங்களில் மட்டும் மிதக் கட்சி—அமிதக் கட்சியின் தொனி இருந்துவந்தது. அதன் பின்னர் 1910-ம் வருஷத்திய காங்கிரஸில், வங்காள மாகாணத் துண்டிப்பு நிவர்த்திக்கப்பட்டதைப்பற்றிய குதூகலத்தைக் காண்கின்றோம். அதற்குப் பிறகு மகாத்மா தோன்றுகிறார். ஸத்தியாக்கிரகம், பஹிஷ்காரம் முதலியவற்றைக் காங்கிரஸில் நிறைவேற்றுகிறார். மிதவாதிகளின் வசம் ஒரு காலத்திலிருந்த காங்கிரஸ் வேறு புதுக்கொள்கைகளை ஏற்றுப் புதுமை பெறுகின்றது. தேசமெங்கனும் புதிய கிளர்ச்சி! அதன்பின் 1924-ம் வருஷத்தில் மஹாத்மாவே காங்கிரஸ் அக்கிராஸனராகவும் அமர்கின்றார். உத்ஸாகம்! கோலாகலம்!!

மஹாத்மா சிறை புகுந்த பின்பு ஸ்ரீ தேசபந்து தாஸரால் ஸ்வராஜ்யக் கக்ஷி உதயம் பெறுகிறது. நாடெங்கும் அதற்கு வெற்றி! கடைசியாக, ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸய்யங்காரின் காங்கிரஸ் அக்ராஸனம் 1926-ம் வருஷத்தில் அஸ்ஸாமில் வருகின்றது. இந்த 1927-ம் வரு

க்ஷத்திய காங்கிரஸ் டாக்டர் அன்ஸாரி அவர்களது அக்ராஸனத்தின் கீழ் சென்னையில் நடைபெறப் போகின்றது. இதுவே காங்கிரஸ் மகா சபையின் சுருக்கமான வரலாறு ஆகும்.

மகத்துவமிக்க காங்கிரஸானது நம்மை ஒரே ராஜீய சிந்தனைக்காரர்களாக்கி ஒன்றுபடுத்தியதுடன், ஒரே ஜனசமூகமாக உருவாகும்படியும் பக்குவப்படுத்தி யிருக்கின்றது. நாம் பாரத ஜாதியினராவோம். காங்கிரஸ் தான் நமது விடுதலைத் தெய்வம். என்றைக்காவது ஒரு காலம் நாம் விடுதலை பெறுவதுண்டாயின், (உண்டு) அது காங்கிரஸ் தேவியினுல்தான் சித்திக்கக்கூடும். விடுதலை தெய்வத்தினிடமும், விடுதலை வாழ்க்கையை விரும்பும் புது ஆவியினிடத்தும் நாம் மனப்பூர்வமான பக்தியைக் காட்டக்கடவோம். நாம் கண்கள் பெற்றதின் பாக்கியமாக இவ்வருஷச் சென்னைக் காங்கிரஸுக்கும் சென்று தரிசிக்கக்கடவோம். இவ்வருஷக் காங்கிரஸ் நன்கு நிறைவேறுவதாக. வந்தே மாதரம்!

## போலி கௌரவ நினைவு.

உன் சொந்த வேலையைச் செய்வது கேவலமென்று எண்ணற்க. உன் சொந்த மூட்டையைத் தூக்கிச் செல்வது கௌரவக் குறைவல்ல. உன் காரியார்த்தம் நீ நடந்து செல்வது இழிவல்ல. ஒரு வண்டியில் சென்ருல்தான் கௌரவம் என்பது மூடத்தனம். எவ்வளவு சிக்கனமோ அவ்வளவுக்கும் நீ புத்திசாலி தான். எவ்வளவு அதிகம் செலவிடுகிருயோ அத்தனைக்கும் நீ மதி கெட்டவனே. அப்பப்பா! இப்படி நடக்க என்னுல் முடியாதென்று நல்ல வாலிபத்தில் சொல்லாதே. இளமைப்போதில் நெற்றி வியர்வை சிந்த நன்ருக உழைத்துத் திடப்படு. உழைப்பவனுக்கே தான் கௌரவம். உழைப்பற்ற அலங்காரம் உப்பில்லாச் சோறு போலாம்.

அந்த சாமானை இரவல் தாமுடியாதென்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டு, பிறகு அவனிடமே போய் ஒரு சாமான் இரவல் கேட்கிருன். இப்படியும் சிலர் புத்தி!

# 42-காங்கிரஸ் மகா சபைகளின் விவரம்.

| எண். | வருஷம். | கூடிய இடங்கள். | அக்கிராஸனதிபதிகள். |
|---|---|---|---|
| 1 | 1885 | பம்பாய் | ஸ்ரீ உமேச சந்திர பானர்ஜி. |
| 2 | 1886 | கல்கத்தா | ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி. |
| 3 | 1887 | சென்னை | ஸ்ரீ பத்ருதீன் தியாப்ஜி. |
| 4 | 1888 | அலகபாத் | ஸ்ரீ ஜார்ஜ் யூல். |
| 5 | 1889 | பம்பாய் | ஸ்ரீ ஸர். வில்லியம் வெட்டர்பர்ன். |
| 6 | 1890 | கல்கத்தா | பிரோஸ்ஷா மேர்வான்ஜி மேத்தா. |
| 7 | 1891 | நாகபுரி | ஸ்ரீ அநந்தாசார்லு. |
| 8 | 1892 | அலகபாத் | ஸ்ரீ உமேச சந்திர பானர்ஜி. II |
| 9 | 1893 | லாகூர் | ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி. II |
| 10 | 1894 | சென்னை | ஸ்ரீ ஆல்ப்ரெட் வெப். |
| 11 | 1895 | புனு | ஸ்ரீ சுரேந்திரநாத பானர்ஜி. |
| 12 | 1896 | கல்கத்தா | ஸ்ரீ முகம்மது ரஹிம் துல்லா ஸயானி. |
| 13 | 1897 | அமராவதி | ஸ்ரீ சங்கரன் நாயர். |
| 14 | 1898 | சென்னை | ஸ்ரீ ஆநந்த மோஹன வஸு. |
| 15 | 1899 | லக்னே | ஸ்ரீ ராமேச சந்திர தத்தர். |
| 16 | 1900 | லாகூர் | ஸ்ரீ சந்த்ர வர்க்கார். |
| 17 | 1901 | கல்கத்தா | ஸ்ரீ தீன்ஷா எதுல்ஜி வாச்சா. |
| 18 | 1902 | ஆமதாபாத் | ஸ்ரீ சுரேந்திரநாத பானர்ஜி. II |
| 19 | 1903 | சென்னை | ஸ்ரீ லால் மோகன் கோஷ். |
| 20 | 1904 | பம்பாய் | ஸ்ரீ ஸர். ஹென்றி காட்டன். |
| 21 | 1905 | காசி | ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே. |
| 22 | 1906 | கல்கத்தா | ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி. III |
| 23 | 1907 | சூரத் | ஸ்ரீ ராஷ்விகாரி கோஷ். |
| | | | ☞ 1907-ம் வருஷத்தில் நடைபெறமற் போன காங்கிரஸுக்குப் பதிலாக, 1908-ம் வருஷத்தில் சென்னையில் ஸ்ரீ ராஷ்விகாரிகோஷின் தலைமையின் கீழ் ஒரு மகா ஸபை கூடிற்று. |
| 24 | 1909 | லாகூர் | ஸ்ரீ பண்டித மாளவியா. |
| 25 | 1910 | அலகாபாத் | ஸ்ரீ ஸர். வில்லியம் வெட்டர்பர்ன். II |
| 26 | 1911 | கல்கத்தா | ஸ்ரீ பண்டித விஷான் நாராயணதார். |
| 27 | 1912 | பங்கிப்பூர் | ஸ்ரீ ஆர். என். முதோல்கார். |
| 28 | 1913 | காராச்சி | ஸ்ரீ நவாப் ஸையத் மகமத் பகதூர். |
| 29 | 1914 | சென்னை | ஸ்ரீ பூபேந்திரநாத வஸு. |
| 30 | 1915 | பம்பாய் | ஸ்ரீ சத்யேந்திர பிரஸன்னு. |

| எண். | வருஷம். | கூடிய இடங்கள். | அக்கிராஸனாதிபதிகள். |
|---|---|---|---|
| 31 | 1916 | லக்ஷ்மணபுரி | ஸ்ரீ அம்பிகாசரண பாபு. |
| 32 | 1917 | கல்கத்தா | ஸ்ரீ அன்னிபிஸண்டு. |
| | | | ☞ 29—8—1918-ல் விசேஷக் காங்கிரஸ் கூட்டம் ஒன்று கூடிற்று. |
| 33 | 1918 | டில்லி | ஸ்ரீ பண்டித மாளவியா. II |
| 34 | 1919 | அமிருதசரஸ் | ஸ்ரீ பண்டித மோதிலால் நேரு. |
| | | | ☞ 1920-ம் ஹு செப்டம்பர் மாதத்தில் ஸ்ரீ லஜபதிராயின் தலைமையின் கீழ் ஒரு விசேஷக் காங்கிரஸ் கூட்டம் நடைபெற்றது. |
| 35 | 1920 | நாகபுரி | ஸ்ரீ விஜயராகவாச்சாரியார். |
| 36 | 1921 | அகமதாபாத் | ஸ்ரீ அஜ்மல்கான். |
| 37 | 1922 | கயா | ஸ்ரீ தேசபந்து தாஸ். |
| 38 | 1923 | காக்கிநாடா | ஸ்ரீ மகம்மதலி. |
| 39 | 1924 | பெல்காம் | மகாத்மா காந்தி. |
| 40 | 1925 | கான்பூர் | ஸ்ரீமதி ஸரோஜினி தேவி. |
| 41 | 1926 | அஸ்ஸாம் | ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார். |
| 42 | 1927 | சென்னை | டாக்டர் அன்ஸாரி. |

# பத்திராசிரியரின் விஞ்ஞாபனம்

நமது பத்திரிகாபிமானிகளின் கருணையையும், அன்னார்தம் ஆதரணையையும், இது சமயம் நாம் பெரிதும் ஆசிக்கின்றோம். இந்த இரண்டாம் வால்யம் பூர்த்தி பெறுதற்கு மூன்று மாதங்களே இருக்கின்றன. இனி ஆரம்பம் பெறும் மூன்றாவது வருஷத்தில் நமது பத்திரிகையை இன்னும் ஸர்வ சிலாக்கியமான முறையில் அதிகமான பக்கங்களுடன் அத்யந்த ஸ்வாரஸ்யமாய் நடத்தி நமது நண்பர்களை ஆநந்தபரிதர்களாகச் செய்வதென்று தீர்மானித்திருக்கின்றோம். அதற்கு நமது அபிமானிகளின் ஆதரணை முக்கியமாக வேண்டியிருக்கின்றது.

இப்பொழுதே நமது பத்திரிகாபிமானிகளில் அநேகர் இதன் அபிவிருத்தியைக் கருதி வேண்டியவரையில் உழைத்து வருகிறார்களென்பது வெளிப்படை. ஆயினும் இனி வர இருக்கும் மூன்றாவது வருஷத்தில் இப்பத்திரிகையை முன்னிலும் பதின்மடங்கதிகமாய் விர்த்திக்குக் கொண்டுவரவேண்டியது அவ்வுத்தம சிரேஷ்டர்களின் கடமை யென்பதை விநயபூர்வமாய் விஞ்ஞாபனம் செய்துகொள்கின்றோம். நமது அன்பர்கள் தங்களால் இயன்றவரை பிரயாசை எடுத்துக்கொண்டு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து உபகரிக்க வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.



இரண்டு சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்போர் நம்மால் நவீனமாய் இப்பொழுது இயற்றப்பட்ட எட்டு அணா விலையுள்ள "பதினெட்டாம் பாஷை" என்ற அரிய நூலைப் பரிசாக அடையப் பெறுவர். அவ்விதமே நான்கு சந்தாதாரர்களைச் சேர்த்து உதவுவோர்க்கு நாம் இயற்றிய ஒரு ரூபாய் விலையுள்ள "ஆயிரம் தலைவாங்கிய அதிசய சிந்தாமணி" யை வெகுமதியாகத் தரச் சித்தமாயுள்ளோம். அல்லது இவ்விலைக்குப் பெறுமதியாயுள்ள நமது காரியாலயத்துப் பிரசுரங்களில் வேறு எந்தப் புஸ்தகங்களையாயினும் பெற்றுக்கொள்ளலாம்.

நமது நேச ரத்நங்கள் நமக்குச் செய்யும் இந்தப் பரோபகாரமானது இன்னும் நம்மைப் பூரிப்புடனும் புது ஊக்கத்துடனும் உழைத்துப் பத்திரிகையை மேன்மேலும் உயர்தரமுடையதாக ஆக்குவதற்கு மிக்க உதவியாயிருக்கும். தமிழ் நாட்டில் அநுபவ விநோத ஞான கலா விலாஸங்களில் "ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகையானது அதற்கு நிகரான பத்திரிகை வேறெதுவும் இல்லை யென்ற பிரவித்த கீர்த்தியைப் பெற்றிருக்கின்றது. பல்லாயிரம் சந்தாதாரர்கள் இதனை ஆதரித்துப் பாராட்டி வருகின்றனர். ஈன்ற அன்னை தனது மக்களுக்கு எவ்வளவு பூஷணங்களை இட்டு அழகு பார்ப்பினும், இன்னும் அதிகமான ஆபரணலங்காரம் செய்வதற்குச் சக்தியில்லையே யென்ற சிந்தையே பெரிதும் மேலோங்கி நிற்கும். அதுபோலவே, இப்பத்திரிகையின் ஆசிரியரும் இப்பத்திரிகையின் பக்கங்களைப் பெருக்கி, இன்னும் அதிகமான அரிய விஷயங்களைச் சேர்த்துக் கையொப்ப நேயர்களைப் பூரிக்கும்படி செய்வதற்கு ஸமயம் எப்போது வாய்க்குமோ வென்று அதிக ஆவலுடன் எதிர்பார்ப்பவரா யுள்ளார். அதற்குத் தூண்டுதலாக நமது அபிமானிகள் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்து உதவுவது அதிக உத்தமமான கைங்கரியமாகும். அது வழி நடப்பவர்களுக்கு வாகனம் கிடைத்தது போலாகுமாதலின், நமது நண்பர்களிடமிருந்து பத்திரிகையின் விருத்திக்காக இவ்வுபகாரத்தை அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

பத்திராசிரியர்.

## கடிதங்களின் முக்கியம்.

எவ்வளவுதான் அன்பு பெருகிடினும், பரஸ்பரம் கடிதங்கள் எழுதிக் கொள்வது சுருங்கி விடின் வெகு தூரத்திற்கு மனோ விகல்பத்தை விளைத்து விடும். நேரில் வருங்காலையில் பல்லிளித்துக் கட்டித் தழுவிப் பரவசப்படுத்தலாமென்று நினைப்பதில் கபட புத்தி பெருகுமே யன்றி உண்மையான உள்ளன்பு நன்கு ஊன்றி விருத்திகொள்ள இடம் தராது. அன்பின் பெருக்கும் சுருக்கமும் கடிதங்களால் அறியப்படும். கடிதம் அன்பை நிறுத்துக் காட்டும் ஒரு தராசு போல்வதாம்.

# பிரபஞ்ச விலாஸம்

1. வாழைப்பழத்தில் ஊசி சொருகுதல் :—“நான் அவனுக்கு முப்பது ரூபாய் கொடுக்கவேண்டும். இரண்டு மாதமாகிறது. அவன் முகத்தில் விழிக்க வெட்கமா யிருக்கிறது” என்று தனக்குக் கொடுக்கவேண்டிய கடனைப் பல மாதங்களாகக்கொடாத கடன்காரனின் முன்பாகச் சொல்லுகிறான். இவ்வார்த்தைகள் எவ்வாறு சென்று தைக்கும் ?

2. பெண் சக்தி :—பெண் சக்தி எதையும் செய்யவைத்து விடுகிறது. ஒரு வேலையில் இஷ்டமில்லாதோர் கூட பெண் சக்தியில் தாக்குண்டு அதைச் செய்யத்துணிந்து விடுகின்றனர் ! இன்னும் முன்பின் அறியாதோரும் தாமே வலியவந்து அவர்கள் சொல்லுங் காரியங்களைக் கவனிக்கின்றனர். உலக வசியம் பெண்களிடமே இருக்கிறது போலும் !

3. இது ஏன்?:—ஒரு பொருளை ஒருவன் மற்றொருவனுக்குக்கொடுக்க, அவன் ‘வேண்டாம், வேண்டாம்’ என்று மறுக்க, இவன் ‘பரவாயில்லை, எடுத்துக்கொண்டு போங்கள்’ என்பது ஒருபுறமாக; வேறுபுறம் ஒரு சாமானைத் தனக்கு வேண்டு மென்று ஒருவன் கேட்க, சாமானுக் குடையவன் ‘அது அபூர்வமாய் ஒன்றுதானிருக்கிறது, ஆதலால் கொடுக்க முடியாது’ என்று கண்டிதமாய்ச் சொல்லி விடுகிறான். இது ஏன் ? [ஒன்று அன்பால்; மற்றொன்று:-இந்த அன்பு கெட்ட நாய்க்கு ஏன் தர வேண்டுமென்ற நினைப்பால். ப-ர்]

4. பிள்ளைகளின் தன்மை :—வெந்நீரில் தான் குளியென்றால், நான் மாட்டேன், குளிர்ந்த நீரில் தான் குளிப்பே னென்பது ஒரு சமயம். வேறோர் சமயம் குளிர்ந்த நீரில் குளியென்றால் ‘முடியாது வெந்நீர் தான் வேண்டும்’ என்கிறது. சாப்பிடும் நேரத்தில் சாதம் வேண்டாம் என்கிறது. கூடாத நேரத்தில் சாதம் வேண்டு மென்று புரண்டுருண்டு அழுது பிடிவாதம் செய்கிறது. குழந்தைகளின் குணமே ஒரு விநோதமும் இனிப்புமானது !

5. பசப்பு வார்த்தை :—‘ஐயோ ! நான் அத்தனை நேரம் சும்மாதானே குந்திக்கிடந்தேன். கூப்பிட்டிருந்தால் வந்து அந்த வேலையைச் செய்திருப்பேனே’ என்கிறான் இந்த அம்மான். ‘போகிறது இப்பொழுது தான் அந்த வேலையைச் செய்ததா’ என்கிறான் அந்த அம்மான். ‘இப்பொழுது நான் அங்கே போகவேண்டும். நாளைக்கு ஆகட்டும் செய்கிறேன்’—என்கிறான் இந்தப் பசப்புக்காரக் கிழவியம்மான் ! காரியத்திற்கு உதவாவிடினும் வாய் இனிக்கப் பேசுவது சிலர் குணம்.

6. அது அதிர்ஷ்டம் :—மிகு அழகுடையவனிடம் வெறுக்கத்தக்க பல இழி குணங்கள் மலிந்து காணப்படுகின்றன. சற்குணமுள்ளவன் முகமோ பார்க்கவும் சகிக்காத நிலைமையில் விகாரமாய் இருக்கிறது. குணமும் அழகும் சேர்ந்து பரிமளிப்பது ஒரு தனி அதிர்ஷ்டம்.

7. ஒரு திருப்தி :—ஒருவனது துஷ்டத்தனத்தை மற்றவன் எடுத்துக்கூற, அவனோ ‘நான் சிறுவயதில் செய்த அவ்வளவு குறும்பு இப்பொழுது இல்லை’ என்று சமாதானஞ் சொல்லுகிறான். அந்தமட்டில் அவன் மகிழ்ந்து திருப்தியுங் கொள்ளுகிறான்!

8. உயிர் போய்விட வில்லையே? ஒருவனுக்கு நேர்ந்த அபாயகரவியாதியினால் அவனது தாய் மனைவி முதலியோர் வருந்திப் பிரலாபிக்க, அதைக் கண்ட அவன் ‘இப்பொழுது ஏன் கத்துகிறீர்கள்? உயிரா போய்விட்டது?’ என்று எரிந்து விழுகிறான். இப்படிப்பட்ட வெடுவெடுப்புக்காரர்கள்கூட உலகில் ஒரு சிலர் அபூர்வமாய்க் காணப்படுகின்றனர்.



9. பிரம்ம சிருஷ்டியும் அதிர்ஷ்ட அமைப்பும் :—ஒன்று காக்கையினும் கருத்த நிறம்; முகமே குரங்கின் வடிவு; ஆபரணங்களோ வெகு வெகு விலை யேறப்பெற்றவை. ஆடையோ பளபளா பட்டு; இவை யெல்லாம் சேர்ந்து பார்வைக்கு மகா முறண்பட்ட தோற்றம். மற்றொன்று எலுமிச்சம்பழ நிறம் ; முகமோ சந்திரனின் பிரதிபிம்பம்; பலநூறு ஓட்டையுள்ள கந்தைத்துணி ஆடை; அதைக் கட்டிக்கொண்டு மண் சுமக்கும் வேலை. ஆ ! இது அவரவர்களின் அதிர்ஷ்டம்-விதி யமைப்பு. கடவுளின் விநோதச் செயல்கள் வெகு வெகு அற்புதம் !

10. ஈச்வரனார் அமைப்பு :—பள்ளியில் ஒன்றாகப் படித்தவர்களில் ஒருவன் மாடு மேய்க்கிறான்; ஒருவன் வண்டி யோட்டுகிறான்; ஒருவன் வீணே சோம்பேரியாய்த் திரிகிறான்; ஒருவன் மேலே கல்விகற்க வழிவகையின்றி விழி கலங்கி ஏங்குகிறான்; ஒருவன் கிடைத்த கல்வியைக்கொண்டு ஒரு தொழிலைத் தொட்டுக் கொண்டு காலக்ஷேபம் செய்கிறான்; ஒருவன் கல்வி ரஸத்தை வாரிப் பருகிக்கொண்டே ஆநந்த வாழ்வில் செல்லுகிறான். ஈச்வரனார் அமைப்பு அது.

11. பட்டால் தான் தெரியும்:—ஒருவன் செய்து கொண்டு வரும் வேலையின் பளுவு கஷ்டம்மற்றவனுக்குத் தெரிகிறதில்லை. “அது அவ்வளவு சிரமமுடையதா ?” என்றுங் கூறிவிடுகிறான். அதே வேலையை இவன் செய்ய ஏற்படும்பொழுதுதான் அந்தப் பாரம் தெரிகிறது! ‘அடேயப்பா! என்ன கஷ்டம்’ என்று சலிப்போடு சொல்லுகிறான். எதிலும் அவனவன் பட்டு அநுபவித்தால்தான் கஷ்ட சுகம் கண்டறிய வியலும்.

12. இவன் அறிந்தானா ? —‘நான் பிறர் செலவிலேயே அவ்விடத்திற்குப் போய் வந்துவிட்டேன்’ என்று பெருமை பேசிக் கொள்கிறான். இவனது கருமித்தனத்தை இவன் நண்பர்கள் உணர்ந்து இவனை இழிவாக மதிக்கிறார்களென்பதை இவன் அறிந்தானா?

13. சிபார்சு இருக்கிறது :—அவன் படிப்பில் மிகக் கெட்டிக்காரன்தான்; எந்த வேலையாயினும் புத்திநுட்பங்கொண்டு செய்யக்கூடியவன்தான். ஆயினு மென்ன ? ஒரு வேலையும் கிடைக்காமல் திண்டாடுகிறான்; திகைக்கிறான். ஒன்றுந் தெரியாதவனோ — அசமந்த ஆசாமியோ உயர்பதவியொன்றில் அமர்ந்து சுகிக்கிறான். இதற்குக் காரணம் தெரிகிறதா?—[இந்த நாளில் படிப்பினால் மட்டுமல்ல, சிபாரிசு இருந்தால்தான் உத்தியோகம் கிடைக்கிறது. ப-ர்.]

14. வெளிப்படுத்திவிடுகிறது :—‘நேற்றுண்டான சொந்தக்காரர்களுக்கு மாத்திரம் கடிதம் போட்டான் நாங்களென்ன அவ்வளவு தூரம் சட்டைகெட்டா போய்விட்டோம்’ என்று வருந்துவது ஒரு புறமாக, “அவன் கடிதம் போடாமலிருந்ததே நல்லதாய்ப் போய்விட்டது. அவ்விடத்திற்குப் போக வேண்டிய தொந்திரவும் நீங்கி ரூபாயும் மிச்சமாயிற்று” என்பது மற்றொருபுறமாக, இவ்வண்ணம் நினையாத தவறாதவொன்று அன்புள்ள உள்ளத்தையும், அது இல்லாத சிந்தையையும் வெளிக்குக் காட்டிவிடுகிறது.

15. அவனுள்ளவரையில்தான்:— அவ்வீட்டுத் தலைவன் மண்டையுள்ள வரையில்தான் அவ்வீட்டில் இவனுக்குச் செல்வாக்குண்டு. அவ்வீட்டாருக்கு இவன் பேரில் வெறுப்பேயாயினும் தலைவனின் முகத்திற்குப் பயந்து பேசாமலிருந்து விடுகின்றனர். வீட்டுக்காரன் மாண்டு மறைந்தொழிந்ததுதான் தாமதம். உடனே கலக மனஸ்தாபங்களோடு இவனும் அவ்வீட்டாரும் வேறு வேருய்விடுகின்றனர். ["அவனோடு போயிற்று அந்த வீட்டின் உறவு" என்று பல இடங்களில் சொல்லக் கூடியதாய்விடுகிறதுண்டு தான். ஆனால் அவன் உயிருடனிருக்கையிலேயே மனம் மாறிவிட்டானுனல், அப்போதுங் கூட அவ்வீட்டை ஒதுக்கித் தன்னை நேர்த்து அங்குள்ளவர்களும் அன்னிய மனிதர்கள் போலாய் விடுகிருர்கள். ப-ர்.]

T.S.குழந்தைவேல் முதலியார்

> உன் சக்திக்கு மீறியே நீ ஒரு வேலை செய்யினும் அதை ஒரு சாமானியமாக நினைத்துச் செய்வதுபோல் வெளியில் காண்பித்துக் கொள். நீ வெகு சிரமப் பட்டுத் தூக்கும் ஒரு பாரத்தைக்கூட வெளிக்கு ஒரு அல்ப பளுவாக நினைத்து எடுப்பது போலவும் பாவனை செய். கையில் இல்லாமல் கடன்பட்டுச் செலவிட்டாலும் கையிலிருந்து செலவிடுவதாகவே காட்டு. அப்போது தான் மதிப்பு.

### செலவிடுவதில் நன்மை இருக்கட்டும்

அரையணு, ஒரு அணு செலவிட்டு நீ எழுதும் கடிதத்தில் அதைப் பெறுகிறவர் சந்தோஷப்படக்கூடிய சமாசாரம் இருக்கப் பார். அவ்விதம் எழுத முடியாதபோது கடிதம் வரைவதையே அந்த சமயத்துக்கு நிறுத்திவிடு. நமது காசு செலவிட்டு எழுதியும் பிறர் நம்மீது ஏன் நிஷ்டூரப்படவேண்டும்? அதைவிட மௌனமாயிருந்துவிட்டுச் சந்தித்த நாளில் சம்பாஷித்துக் கொள். கடிதத்தில் மட்டும் இனிக்க இனிக்க எழுதிச் செய்கையில் அவ்வாறில்லாத வஞ்சகனுக்கும், ஒப்பாரி நேசந்தினனுக்கும் ஏனோ வீண் கடிதங்கள்? ஏனோ வீண் தபால் செலவு? கடிதங்களை நிறுத்திவிட்டு நேரில் வந்தால் மட்டும் பேசுவதென்பதோடு மௌனமாய் ஒதுங்கி நின்று கொள்.

விவேகம் விநோதம் விசித்திரம் விகடம்
விகடப்பிரதாபன்
REGISTERED TRADE MARK
அநுபவம் அற்புதம் ஆச்சரியம் ஆநந்தம்

## விகடனிடம்

# தேவதாஸிகளின் முறையீடு!



விடிந்து தெருவில் கோலம் போடுவதற்கு முன்னே சுற்றிக் கொண்டார்களப்பா விகடனை மோகனுங்கிகள்! விகடன் அப்போது பாதி நித்திரையில் விழிப்பும் துயிலுமாயிருந்தேன். வந்த சுந்தர சோபிதத் தோகை மின்னுர்கள் என்னை எழுப்பாமல் எழுப்புதற்குத் தங்களின் கீத ராக பாகங்களைத் தொடங்கிக் கொண்டார்கள்! "ஆசையாகி வந்தேன் மன்னவா" என்றொருத்தியும், "எப்போதினிக் காண்பனே" என்று ஒருத்தியும், தாள சாலாா ஜாலமேமிரா ச-ர-ஸ-த-மா-ரா-" என்று ஒருத்தியும், இன்னும் என்னென்னவோ மயக்குக் குலுக்குக் கீதகானவரிசைகளையெல்லாம் விதம்விதமாய்ப் பாடினுர்கள்! விகடன் இன்னும் தூங்கினுல் சித்திராங்கிகள் கழுத்தையே பிசைந்து விடுவார்களென்று கண்விழித்துக்கொண்டு, எங்கு இவ்வளவு காலைவேளையில் வந்தீர்கள், வந்த காரணமென்ன வெனவும், உடனே அவர்களுக்கு ஆத்திரம் பொங்கிக்கொண்டது!

***

என்னடா ஏதடா விகடா! எதற்கு நாங்கள் வந்திருப்போமென்று உனக்குத் தெரியாதாடா? நாங்கள் இப்போது என்னதவிப்பு தவிக்கிறோமென்பதை நீ அறியாயா? தலைக்கு மேல் வெள்ளம் வந்து விட்டிருக்கிறதே! எங்களுடைய சோபன வாழ்வில் மண்மாரி பெய்யும் போலிருக்கிறதே! ஹா! எவ்வளவு தினறுகிறோம் தெரியுமா? இதையெல்லாம் எண்ணிப் பாராமல் ஏதும் தெரியாத மாதிரியில் எங்களையே என்ன சேதி யென்று கேட்க வருகிற உன் சமர்த்து தான் என்ன சமர்த்தடா என்று விகடன் கன்னத்தில் குத்தத் தொடங்கிக் கொண்டார்கள்! விகடனும் எனது கன்னத்தைத் தடவிக்கொண்டு, வாய்க்குள் பற்கள் ஆடாமல் பத்திரமாய் இருக்கிறதாவென்பதையும் கவனித்தபடியே, பரிமளாங்கிகளே! வந்த இடத்தில் செய்யும் மரியாதை இவ்விதம்தானு?-வந்ததும் 'என்னடா விகடா' என்று 'டா'

பிரயோகத்தில் வார்த்தைகளை ஆரம்பித்துக் கொண்டீர்களே! அதற்கும் மேலாக இப்போது விகடன் கன்னத்தில் புடைக்கவும் தொடங்கிக் கொண்டீர்களே! உங்கள் வந்தன வழிபாடுகள் இப்படித்தானா என்றேன்.

* * *

அதற்கு அவர்கள், விகடா! அது எங்களுக்கு வழக்கமாய்ப் போன சங்கதி; எங்களிடம் வருவாருக்கெல்லாம் நாங்கள் "டா" பட்டம் தந்து அழைப்பது சாதாரணம். அது அவர்களுக்கு - அவ்வளவுக்காவது அப்படி நாங்கள் அழைத்தோமே என்று அதை ஒரு பாக்கியப் பிரஸாதமாய்ச் செவி குளிரக்கேட்டு ஆநந்திப்பார்கள். நாங்கள் முகத்தில் என்ன குத்து குத்தினாலும், அந்த சமயம் எங்களின் கைகளும் விரல்களும் அவர்கள்மேற் படுவதால் அந்த ஸ்பரிச இன்பவுணர்ச்சியில் ஒரு ரம்யப்பட்டுப்போய், அவ்வளவுக்குத் தங்கள் மேல் எங்கள் கைகள் பட்டது எளிதில் கிடைக்கத் தக்கதோ வென்று பூரிப்பார்கள். நீயோ எங்களைக்கண்டதும் ஒதுங்கிப் போகிற விகட ராஜ சித்தனாகையால் உனக்கு இதுவெல்லாம் புதிதாகத்தான் படுமாக்கும் என்றார்கள்.

* * *

சரி, நீங்கள் வந்த சங்கதியைத் தொடங்குங்கள் என்றேன். ஸ்ரீமதி டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மாள் கொண்டுவந்திருக்கும் மசோதா ஒரு பெருத்த அநியாய விபரீதம்; 'பொட்டுக் கட்டுதல்' என்பது மதச் சார்பான சங்கதி; புராதனகாலந்தொட்டுத் தலை முறை தலைமுறையாய் நடந்து வரும் மகத்தான புண்ணியச் சடங்கு; நாங்கள் எல்லாம் அந்த வகையில் பகவானுக்குத் தேவிகளாகிப் பரம பக்தைகளாய் அவருடைய பணிவிடைகளிற் கலந்து நிற்கிறோம்; நாங்கள் இறந்தால் கோயிலிலிருந்து சகல மரியாதைகளும் கொள்ளியும் கூட வருகின்றது. எவ்வளவோ வைபவத்தில் நாங்கள் என்றைக்குமே நித்தியசுமங்கலிகளாய் விளங்கி உன்னத வாழ்வில் இருக்கிறோம். உலகத்திலே பெண்களாய்ப் பிறப்பவர்களுக்குச் சில காலமே சுமங்கலி வாழ்வு, பல காலம் அமங்கலி வாழ்வு, எங்களுக்கோ என்றைக்கும் மங்கள வாழ்வு; அமங்களத்வமே எங்களிடம் இல்லை; இதனால் சகுன பலன்களில் எங்களையும் சேர்த்து நாங்கள் ஒருவர் முன் எதிர்ப்படுவது நற்சகுனமென்று திட்டம் செய்திருக்கிறார்கள். எங்களுக்குள்ள அந்தஸ்து, கௌரவம், மதிப்பு, மேன்மை, சிலாக்கியங்கள் எல்லாம் மனிதர்களிடம் பொட்டுக் கட்டிக்கொண்டு உதைகளும் திட்டுகளும், குத்துகளும் பட்டுக் கண்ணீர் வடிக்கும் குடும்பத்துப் பெண்களுக்கு வருமா? சபைகளில் எங்களுக்கல்லவோ முதல் தாம்பூலம்! நாங்கள் போகாத சபைகளுண்டா? எங்களை விரும்பாத சங்கீத கோஷ்டிகளுண்டா? எந்த சபைக்கோ, எந்த கல்யாண வீடுகளுக்கோ, கோயில்களுக்கோ நாங்கள்போய் நின்றதுமே அங்கு ஒரு புது சோபிதமும் அழகும் உண்டாய்விடுகின்றது. அதற்குமுன்பு வெற்று இடம்போல் காணப்பட்டதானது நாங்கள் வந்ததும் அந்த இடமே நிறைந்து போனதுபோல் மங்களமாய் வெகு ஜனக் கூட்டத்துடன் ஜ்வலிக்கத் தொடங்கி விடுகின்றது! எங்களில் எவ்வளவோ பண்டிதைமணிகள் இருக்கிறார்கள்! எவ்வளவோ சங்கீத ஸாஹித்ய நிபுணைகள் இருக்கிறார்கள்! பரத நாட்டிய வித்தை என்ன சாமான்யமா? பூர்வம் அரசர்களாலும் இந்திராதி தேவர்களாலும் ஆதரிக்கப்பட்டுவந்த அந்த மகோன்னத கலா ஞானத்தை



அழிந்து போகாமல் நாங்களல்லவா காப்பாற்றி வைத்திருக்கிறோம்! இன்னும் இக்காலத்துப் பெண்கள் புது புதுவித உடைகளும் சேலைகளும் நூதன நூதனமான திலகங்களும் அணிந்து குலுக்குகிறார்களே, அவற்றையெல்லாம் நாங்களல்லவா முதலில் காண்பித்துக்கொடுத்தோம்! எங்களை விரும்பாத ராஜா எது? மந்திரி எது? உத்தியோகஸ்தர்கள் எது? பிரபுக்கள் எது? அரசன் முதல் ஆண்டிவரையிலும் எங்களைக் கண்டால் ஒரு தனி மரியாதை செய்து கௌரவிக்கிறார்கள்! நாங்கள் அந்த தனித்த காலத்திற்கு அருமருந்தாய்த் துணையிருந்து ஆடவர்களுக்கு சாந்தியைத் தருவதாலல்லவோ உலகத்து நங்கையர்களும் புருஷபலவந்தமின்றித் தங்களின் கருச் சிதையாமல் மக்களைப் பெற்றெடுத்து மகிழக்கூடுமானதாய் இருக்கிறது! இவ்விதம் நாங்கள் உலகத்துக்கே தேவைப்பட்ட ஒரு முக்கிய வகுப்பினராய், பிரபஞ்ச சேவையே ஒரு பரம பாக்கியமென மதிப்போராய், மங்களத்திரவியமாய் நித்திய கன்னிகளாய் எத்தனையோ உயர்வும் பிரதாபமும் பெற்று விளங்கிக் கொண்டிருக்க, இத்தகைய எங்களின் கழுத்துகளுக்கு தெய்வத் திருமங்கிலியங்கள் ஏறுதிருக்குமாறு இப்போது டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மாள் "பொட்டுக் கட்டுதலைத் தடுக்கும் மசோதா" கொண்டுவந்திருப்பது எவ்வளவு பெரிய அநீதி? எவ்வளவு பாதகமான செய்கை? எவ்வளவு கேவலப்படுத்தும் சங்கதி? எவ்வளவு அவமதிப்பான மிதிப்பு இது? இது தெய்வத்திற்கு அடுக்குமா? பழைய ராஜாக்களின் புண்ணிய அரசாட்சி இந்த நாளையிலே இருந்திருந்தால் இந்த டாக்டர் ஸ்ரீமதியம்மாள் இப்படி மசோதா கொண்டுவர முடியுமா? அநாதி காலமாய் இருந்துவரும் மத சுதந்திரங்களையும், மதச் சார்பான பாத்தியதைகளையும் காப்பது இப்படித்தானா? ஜன ஸமூகத்தில் திருத்த வேண்டியவைகள் எவ்வளவோ கிடக்க, நாங்கள் தானா இந்த ஸ்ரீமதியின் கண்ணுக்கு அகப்பட்டோம்? இது ஊர்க்குருவி மேல் பாணம் தொடுக்கும்சங்கதியல்லவோ? கேவலம் தூர்த்த ஸ்திரீகளான விபசாரிகளால் நடத்தப்படும் செய்கைகளை, தனிப்பட்ட ஒரு கௌரவத்துடன் பரம்பரையாய்ப் புராதன காலமுதற்கொண்டிருந்துவரும் ஒரு பெரும் வகுப்பாரை அந்த விபசாரிகளின் நடத்தையுடன் சமப்படுத்திப் பேசுவதும் இழிவுபடுத்துவதும் தர்மமாகுமா? வெள்ளைக்காரத் துரைகள் வெகு நீதி நியாயம் பொருந்தியவர்களாயிற்றே. விகடா! இவற்றையெல்லாம் நீ எடுத்துக்காட்டி டாக்டர் முத்து லக்ஷ்மி அம்மாளின் மசோதா உச்சிக்குப் போய் நிறைவேறி விடாதபடி தடுக்கப் பார்க்கவேண்டும். அதற்காகவேதான் விகடா உன்னைக்கண்டு கேட்டுக்கொள்ள, இவ்வளவு அதிகாலையில் உன்னிடத்திற்கு வந்தோம் என்றார்கள்.

* * *

விகடனும் இரக்கமாய் ஒருசிரிப்பு சிரித்துவிட்டு என் பதிலைச்சொல்ல ஆரம்பித்துக் கொண்டேன். மேனி மினுக்கி மோஹினிகளே! மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா? வாய் சமர்த்தில் தீராங்கனைகளான உங்களை வெல்லுவதென்பது என்ன இலேசா? எத்தனையோ பிரதாபம் படைத்தவர்களையெல்லாம் நீங்கள் ஒடித்து மூலையிற் கிடத்துகிறவர்களாயிற்றே, நீங்கள் சொல்லிய உங்களின் தேவ ஊழியப் பிரபாவம் சரிதான், அந்த வகையில்

---

ஒருவர் மீது மனக்கலப்புள்ளவர்கள் அவர்கள் உண்மையாகவே தன்னைப் பார்க்க வந்திருந்த போதிலும், ஒப்புக்கு வந்ததாகவே நினைக்கிறார்கள்.

பொட்டுக் கட்டிக்கொண்டு ஈசனின் தேவிகளாய் பகவந் நாமமே துணையாய்ப் பரம பக்தைகளாகி பகவத் சேவையையன்றி உலகையேஅறியாத பக்குவரீதியில் மனம் கலந்து பரிசுத்தைகளாய் இருந்திருந்தால் பொட்டு கட்டுதலைத் தடுக்கவென்று ஒரு நாளும் ஒரு மசோதாவும் புறப்பட்டிராது. ஆனால் உள்ள உண்மைச் சங்கதியோ அப்படியில்லை. என்னதான் சமர்த்தான பேச்சு பேசி உங்களைத் தேவதாசிகளின் பரம்பரையென உயர்த்திக் கொண்டாலும், நீங்கள் விபசாரிகளென்று பழிக்கிற தூர்த்த ஸ்திரீகளின் தொழிலையே நீங்களும் ஒரு நித்ய ஜீவனமாகச் செய்து வருகிறீர்கள். அதற்காகத்தான் நீங்கள் சிங்காரித்துக் கொள்வதும், கண்வலை வீசுவதும், மயக்குவதும், மாய்மாலங்கள் செய்வதுமான எல்லா சங்கதிகளும்! நீங்கள் இப்படி ஊராருக்கெல்லாம் விலைபடும் விலைமாதர்களாய் விபசாரிகளாய் இருந்துகொண்டு, மற்றொரு பக்கம் நாங்கள் ஈசனின் தேவிகள், இதோ எங்கள் கழுத்தில் பொட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறோமென்று சொல்லவருவதற்கு விகடன் வயிறு குலுங்கச் சிரிக்க வேண்டியதுதான்! நீங்கள் பொட்டுக்கட்டிக்கொள்ளும் 'சாமி'க்கு வாயும் கண்ணும் பேசப் பார்க்க இருந்தால், அவரின் மனைவிகளான நீங்கள் ஊராருக்கெல்லாம் ஆசை நாயகிகளாய் விட்டிருப்பதைப் பார்த்துச் சும்மா இருப்பாரா? ஒரு பிச்சைக்காரன்கூடத் தன் மனைவி இன்னொருவர் முகம் பார்க்கச் சகியானே. கோயில் சாமிக்குக் கேட்க வாயில்லையென்றே நீங்கள் இப்படி பொட்டு கட்டிக் கொண்டு விபசாரத்தை வளர்க்கிறீர்கள்? இப்படி நீங்கள் ஊருக்கெல்லாம் உங்கள் உடம்பை விற்றுக்கொண்டு தேவனுக்குப் பொட்டுக் கட்டிக் கொள்வதிலே என்ன அர்த்தம் இருக்கிறது? என்ன மகிமை இருக்கிறது? தாலி கட்டியவனின் தொந்தரை யில்லாதிருக்க—நீங்கள் அசையாத கோவில் சாமியைத் தெரிந்து கொண்டீர்களாக்கும்! மனிதர்களுக்கு மனைவிகளானால், பிறகு மணாளன் மரிக்க அதனால் விதவைகளாக வேண்டுமேயென்று நினைத்து, என்றும் சாவேயில்லாத தெய்வத்திற்கு சுபத்தினிகளாகிக் கால முழுதுக்கும் நித்திய சுமங்கலிகளாயிருக்க இந்தப் பொட்டுக் கட்டும் தந்திரத்தை மேற்கொண்டீர்கள் போலும்! இதெல்லாம்என்ன, ஒரு மயக்காய், மூடத்தனமான செய்கையாய், விபசாரத்தை இந்தப் பொட்டுக்கட்டும் வழியில் நடத்தும் தன்மையாய் ஒரு அசங்கித கசுமாலக் குப்பையாய்த் தானே கிடக்கிறது! இந்த நாறி அழுகுஞ் சங்கதியை நீங்கள் எப்படித்தான் உயர்த்திச் சொல்லிக்கொள்கிறீர்களோ? பன்றி சேற்றில்புரண்டாலும் அதைப் பெரிய ஸ்வர்க்கமாய் நினைக்குமாம்! அப்படித்தான் இருக்கிறது உங்களின் ஈனச் செயல்களை நீங்கள் மஹா மேலுக்கு உயர்த்திப் பேசிக்கொள்வது!

* * *

உங்களிடத்தில் விகடனுக்கு அச்சமுமில்லை, ஆசையுமில்லை. ஆதலின் உன் சங்கதியை உடைத்தே சொல்லி விடுகிறேன். உங்களுடன் சேருவது இருட்டில் பிணத்துடன் சேருவதுபோலாம். மேகங்கள் உங்களிடமானதில், மழையே யில்லை! நற்சகுனங்களில் உங்களையும் சேர்த்திருப்ப

“உனக்கு என்ன அப்பா கவலை, நீ மகாராஜன்” என்கிறான். அவன் படுகிற கவலையை இவன் கண்டானோ? மூட்டையின் பாரம் சுமக்கிறவனுக்கே தான் தெரியும்.



தாகப் பெருமை பேசினீர்களே! கள் குடத்தைக்கூட நல்ல சகுனங்களில் ஒன்றாகத்தான் சொல்லி யிருக்கிறார்கள். ஏன் அப்படியெனில், வெறுங் குடத்தைவிட நிறைந்த குடம் மேல் என்று தான். அதுபோல நீங்கள்ஸதா மேனியை மினுக்கி மங்களமாய் நிற்பதில், அந்த சுந்தரமானது உங்கள் முன் எதிர்ப்படுகிறவனுக்கு ஒரு சந்தோஷத்தைக் கொடுத்து, அவன் போகிற காரியத்தையும் அந்த சந்தோஷப் பூரிப்பானதுசோர்வின்றி உற்சாகமாய் நிறைவேற்றி வைக்கும் என்ற கருத்தைக் கொண்டுதான். அவ்வளவே யல்லாது உங்களை உயர்த்திச் சிலாகித்த தன்மையல்ல.

* * *

இன்னும் உங்களைக் கௌரவிப்பது—நீங்கள் உலகை மயக்குவதற்கென்று கற்றுள்ள உங்களின் சங்கீதம், நாட்டியம் இந்த வித்தைகளுக்காக இருக்கலாம். அந்த கௌரவம் அந்தவித்தைகளுக்கே தவிர உங்களுக்குச் சேராது. இன்னும் உங்களிடம் நெருங்கிப் பேசினால் தன் மனைவி மக்களை மறக்க நேருமோ வென்று ஒவ்வொரு உத்தம ஆடவனும் நடுங்காமலில்லை. அந்த நடுக்கத்துடனே ஒரு அழகுக்காக உங்களைக் கல்யாண சுபங்களுக்கு அழைத்ததே யன்றி உங்கள்நடத்தையைச் சிலாகித்தல்ல. நீங்கள் என்னதான் ஜெகன்மோகினிகளாய் பட்டுபட்டாவளிகளுடன் ஸர்வாபரண பூஷிதைகளாய் விளங்கினாலும், பெண் ஜன்மத்துக்கு அழகு செய்யும் 'கற்பு' எனும் மாணிக்கம் உங்களிடம் இன்மையால் உங்கள் அலங்காரமெல்லாம் சவத்திற்கும் துர்நடத்தைக்கும் செய்த அலங்காரங்கள் தான். ஒரு குடும்ப ஸ்திரீயின் வீட்டு வாயிலை மிதிக்க உங்களுக்கு யோக்கியதையுண்டா? நீங்கள் அந்த வாசற்படி ஏறி வரத்தான் அவர்கள் ஒப்புவார்களா? ஆ! நீங்கள் நற்குடும்பங்களைப் பாழாக்கும் கள்ளிகளல்லவா?

* * *

இன்னும் குல ஸ்திரீகளுக்கு சிங்காரிப்பையெல்லாம் நீங்கள் கற்றுக்கொடுத்ததாய்ப் பெருமை பேசுகிறீர்கள். நீங்கள் இப்படித் தளுக்கிக் குலுக்கி ஒய்யாரம் காட்டப்போக, அதிலே குடும்பத்து ஆடவர்கள் எங்கே மயங்கிப் போகிறார்களோவென்று குடும்ப மாதர்கள் உங்களுக்கும் மேலாகத் தங்களை அழகுபடுத்திக் காட்டவேண்டியவர்களாகி விட்டிருப்பதால் குடும்பச் செலவுகள் அதிகரித்துப் போய் கடன் பட்டு வருகிறது. அத்துடன் அதிக சிங்காரிப்பில் குல ஸ்திரீக்கும் பரஸ்திரீக்கும்வித்தியாசம் கூட சில சமயங்களில் தெரியாமற் போகிறது. பிள்ளைப் பேற்றுக்குப் பெண்களுக்கு உதவி செய்வதாகச் சொல்வதும் ஒரு சமர்த்துப் பேச்சு தான். அந்தக் காலத்தில்தான் நீங்கள் எங்கு தங்களின் பர்த்தாக்களை மயக்கிக் குடும்பச் சொத்தைப் பறித்து ஒட்டாண்டியாக்கி விடுகிறீர்களோவென்று உத்தமப் பெண்கள் நடுங்கி அஞ்சவேண்டி யிருக்கிறது. ஆகவே, இவ்வகையிலும் உங்களைச் சேர்ந்த பெண்வகுப்புக்கும் நீங்கள் எமன்களாய் முடிகிறீர்கள். பின் என்ன நன்மைக்குத்தான் நீங்கள் இருக்கிறீர்கள் என்று பார்த்தால் எந்த நன்மைக்குமே காணோம்! ஜனஸமூகத்திற்கே ஒரு பெரும் பழிப்பாய், பரிசுத்த ஆலயங்களை மகாத்மா சொன்னதுபோல் விபசார விடுதிகளாக்குவோராய் அநர்த்தத்திற்கே

வித்தைக்குச் சத்துரு விசனமும் தரித்திரமுமானால், உயிர் வாழ்க்கைக்குச் சத்துரு அறிவில்லாப் பெண்டீர் என்று ஏன் சொல்லக் கூடாது?

ஆணிவேராக முடிகிறீர்கள். பின்னும் “நாவார வேணும்விதம் சொல்லுவார், உன்னை நான் பிரிந்தால் சாவே னென்றே யிருந்தொக்க உண்பார், கைதான் வறண்டால் போய்வாரு மென்றே நடுத்தலைக்கே குட்டு” வார் என்றும், “ விட்டு உய்யடா உய்யடா உய் ” என்றும் வெகு கேவலமாகப் பேசி யிருக்கிறார்கள். தேவதாசிகளென்ற உங்கள் வமிஷப் பூண்டு நெடுங் காலத்திற்கு முன்னேயே அற்றுப்போய், ஊர் பெண்களை ஸ்வீகரித்துப் பொட்டுக் கட்டி விபசரிக்கவிட்டு நல்லபெண்களையும் பாழ்படுத்துகிறீர்கள். இந்த வகையில் பொட்டுக்கட்டுதலை நிறுத்தினால் பரிசுத்த ஆலயங்களைப்பிடித்த துர்நாற்ற அபாக்கியம் பாதியாவது ஒழியாதாவென்று டாக்டர் ஸ்ரீமதி அம்மான் மசோதா கொண்டு வந்திருக்கிறாரே யொழிய விபசாரமே நிறுத்தப்பட்டுப் போகுமென்று கொண்டுவரவில்லை. ஆகவே, எப்படியாவது மசோதா நிறைவேறட்டுமென்றே விகடனும் தெய்வத்தைப் பன்முறையும் வேண்டுகிறேன் என்றேன்.

***

விகடன் பேச்சை முடித்ததும் பெரிய சண்டைக்குத் தொடங்கிக் கொண்டார்கள். விகடா! நீ என்ன பேசினும், நாங்கள் உலகத்திற்குத் தேவைப்பட்டவர்களே. ஆடவர்கள் முதன் முதலில் கற்பது எங்களிடமே தான்! அதெல்லாம் இருக்கட்டுமடா விகடா, உன் அதனப் பிரஸங்கத்தை அப்படி ஒரு பக்கம் ஒதுக்கிவை; இப்போது டாக்டர் அம்மாளின் மசோதா நிறைவேறாதிருக்க வழிவகை என்ன, அதைத் தெரிந்து சொல் என்றார்கள். விகடனும் நெடுக யோசித்தேன். பொல்லாத அடக்குமுறை மசோதாக்களானாலும் எதிர்த்தாலும் உடனே நிறைவேறிப்போம். மற்றபடி நல்ல கருத்துள்ள மசோதாக்கள், ஜனஸமூக நன்மைக்கான பிரேரணைகள் என்றால் அவைகளெல்லாம் விக்கினமின்றி நிறைவேறுவது வெகு கஷ்டமென்று அநுபவத்தில் விகடன் தெரிந்து வைத்திருக்கிற சங்கதி. ஸ்ரீ கோகலேயின் இலவசக் கல்வி மசோதா நிறைவேறவில்லை; விபசாரத் தடுப்பு மசோதா பூர்த்தியாய் சித்திபெறவில்லை; விதவா விவாகம் செய்யலா மென்ற சட்டம் நெடுங் காலத்துக்குமுன் ஏற்பட்டும் அநுஷ்டானத்தில் 100-க்கு 99-க்குப் பலிக்கவே யில்லை; உள்ரகசியச் சங்கதியும் அநுபவமும் இப்படி யிருப்பதால், டாக்டர் ஸ்ரீமதியாரின் மசோதாவும் மதச்சார்பானதென்ற சாக்குப் போக்கில் எங்கே தள்ளப்பட்டு போகுமோ வென்று ஒரு பக்கம் கலக்கமாகத் தான் இருக்கிறதென்றேன். உடனே மோகனாங்கிகள், விகடா! உன் சந்தேகத்தின்படியே மசோதா தள்ளுண்டு போகட்டும். எங்கள் பர்த்தாக்களான கோயில் சாமிகள் எங்கள் பக்கமே நிற்கும்; நீயே பார்—ஒரு பந்தயம் என்று கூறி விகடனை ஒரு முறைப்பு முறைத்துப் பார்த்துவிட்டு சொல்லாமலே எழுந்து போய் விட்டார்கள். இந்த நயவஞ்சக மேக ரோக நாரிகள் எவ்வளவு கௌரவம் கொண்டாடிக் கொள்ளுகிறார்களப்பா! காலையிற் பிடித்த சனியன் ஒருவாறு ஒழியவே, விகடனும் இந்த நல்ல மசோதாவின் முடிவு எப்படியாகின்றதோ வென்று எதிர்பார்த்துக் கொண்டு நிற்கின்றேன். ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!

---

இவனது ஆத்திரம் அவனைத் திட்டச் செய்கிறது. ஆத்திரமில்லாத அவனோ இவனைப் பார்த்துச் சிரிக்கிறான்! சிரிக்க சிரிக்க ஆத்திரக்காரனுக்குக் கோபம் மீறுகிறது.

# பிரபஞ்ச நவீனங்கள்

(All Rights Reserved.)

1. லண்டன் பட்டணத்தில் குறைந்தது ஆறாயிரம் மோடார் பஸ்கள் ஓடுகின்றனவாம். ட்ராம்வே வழிகளின் மொத்த நீளம் மூன்னூற்றைம்பத்தாறு மைல்களாம்.

2. சில மாதங்களுக்கு முன் யார்க் கோமகனும், கோமகளும் ஆஸ்ட்ரேலியா கண்டத்தின் தேசீய சபையைத் திறப்பதற்குச் சுற்றுப் பிரயாணம் செய்தபொழுது ‘மோரீசு’ என்று ஸாதாரணமாய் வழங்கும் மோரிஷஸ் தீவின் வழியாய்ச் சென்றார்கள். அவர்கள் வருகையின் ஞாபகார்த்தமாக அவர்களுக்கு அம் மோரிஷஸ் தீவின் பூகோளப் படம் ஒன்று ஸமர்ப்பிக்கப்பட்டது. அப்படம் முழுமையும் வெள்ளியால் செய்யப்பட்டு, சர்க்கரை செய்யும் சாலைகளை யெல்லாம் காண்பிக்க அவ்விடங்களுக்கு நேராக வைரங்களையும் தீபஸ்தம்பங்கள் இருக்குமிட மெல்லாம் சிகப்புக்களையும் பதிய வைத்துமிருந்ததாம்.

3. பஸிபிக் மஹா சமுத்திரத்தின் விஸ்தீரணம் ஏழுகோடி சதுர மைல்களாம். அதாவது, இவ்வுலகிலுள்ள எல்லா கண்டங்கள் தீவுகள் இவைகளின் மொத்த விஸ்தீரணத்தை விடப் பெரியதாம்.

4. பஸிபிக் மஹா ஸமுத்திரத்தில் தென் கடல் தீவுகள் என்று சில தீவுகள் இருக்கின்றன. அவைகளில் உலகில் பெரிய நண்டுகள் வசிக்கின்றனவாம். இவைகள் சாதாரணமாய்த் தேங்காய்களில் கண்களைப் பொத்தல் செய்து அவற்றின் வழியாய் உள்ளிருக்கும் இளநீரையும், தேங்காய் வழுக்கையையும் தன் நகங்களால் எடுத்துச் சாப்பிடுமாம். தேங்காய்கள் முற்றினதாய் இருந்தால் அவைகளைத் தூக்கி பூமியில் இரண்டடி அடித்துப் பிளந்து உள்ளிருப்பவைகளைத் தின்னுமாம்.

5. இடி மழை பெய்யும்பொழுது இடிகள் பூமியில் சில சமயங்களில் விழுந்து சேதம் உண்டுபண்ணுவதை நாம் அறிகிறோம். இந்த இடி விழுவதினால் ஏற்படும் அபாயம் பட்டணங்களை விட ஐந்து பங்கு கிராமாந்திரங்களில் ஜாஸ்தியாம். ரயிலில் செல்லும்பொழுது இடி விழும் அபாயத்தைவிட, கப்பலில் செல்லும்பொழுது அபாயம் இருபது பங்கு ஜாஸ்தியாம்.

6. பெரிய ரஸ்தாக்களில் தார் போடுவது இச்சென்னை ராஜதானியில் இப்பொழுதுதான் அதுவும் பிரதான நகரத்தில் தான் ஆரம்பமாயிருக்கிறது. சீமையில் அதாவது ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் அநேகமாய் எல்லா சாலைகளிலும் தார் என்று சொல்லப்படும் ஆஸ்பால்ட் போட்டுத் தான் செம்மையிடுகிறார்கள். இவ்வளவு ஆஸ்பால்ட்டும் ட்ரினிடாட் (Trinidad) என்னும் பட்டணத்திற்கு அருகில் உள்ள ஆஸ்பால்ட் ஏரியிலிருந்து வருகிறதாம். அந்த ஏரி மொத்தம் நூற்றுப்பத்து ஏகரா விஸ்தீரணமாம். எப்போதுமே கொதித்துக்கொண்டிருக்கிற சுடுகையான (Tar) தாராம். இந்த ஏரியைக் கண்டு பிடித்தது முதற்கொண்டு இதுவரையில் நாற்பது லக்ஷம் டன் நிறையுள்ள தாரை எடுத்து இருக்கிறார்களாம். எவ்வ

---

ரயில்வண்டி மட்டும் போதாது. பெண்களுடன் புறப்பட்டால் வாடகை வண்டியும் வேண்டும்.

ளவு எடுத்தும் ஏரியின் ஆழம் குறையவே யில்லையாம். பகலில் எவ்வளவு எடுக்கிறார்களோ அவ்வளவு இரவில் ஊறிவிடுகிறதாம். இதுவும் கடவுளின் திருவிளையாடல்களில் ஒன்றே.

7. ஐரோப்பா கண்டத்தில் பிரான்ஸ் தேசத்தில் நேய் என்னும் நகரத்தில் மூன்று பெண்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்கு முறையே 12, 13, 14 வயதாம். அவர்களிடம் ஆச்சரியம் என்னவென்றால், நம்மாதிரி அவர்களுக்கு சாதாரணமாய்க் கண்கள் இருந்தும் அவர்கள் தங்கள் கண்களை மூடிக்கொண்டு எதிரிலிருக்கும் புஸ்தகங்களை வாசிக்கவும், ஊசிகளுக்கு நூல் சோர்க்கவும், எதிரிலிருக்கும் வர்ணங்களைச் சொல்லவும் முடிகிறதாம். இந்த ஆச்சரியத்தை வைத்திய சாஸ்திர நிபுணர் 'ஜான் லபாடி' பரீக்ஷை செய்து பார்த்து, நெற்றியின் நரம்புகள் கண்களின் வேலைகளைச் செய்து மூளைக்கு அவ்விஷயங்களைத் தெரிவிக்கின்றன என்கிறார். இதுவும் ஒரு கலியுக அதிசயமே!

8. வைத்தியங்களில் அநேக விதங்கள் உள்ளன. அவைகளில் நக வைத்தியம் என்று ஒன்று உண்டு. அதாவது, ஒரு வியாதிக்காரனுடைய நகங்களைப் பரீக்ஷை செய்து பார்த்தால் அவனுக்கு சமீபத்தில் என்ன வியாதிகள் வந்தன என்று நிச்சயமாய்க் கண்டு கொள்ளலாம். நகங்களில் குறுக்குக் கோடுகள் இருந்தால் 'நியுமோனிய ஜுரம்' வந்து அதனால் அவன் குடல் மிகவும் பலஹீன ஸ்திதியிலிருக்கிறது என்றும், நகங்களின் ஓரத்தில் வெள்ளை கோடுகள் இருந்தால் 'டைபாய்ட்' என்கிற பித்தவாத ஜுரம் பட்டவன் என்றும், நகங்கள் பிளவுபட்டிருந்தால், 'மூடக்கம்மை' அல்லது 'டிங்கி ஜுரம்' கண்டவன் என்றும், நகங்களில் வெள்ளைக் கோடுகள் இருந்தால் பாண்டு ரோகத்தால் அவஸ்தைப்படுகிறவனென்றும், இம்மாதிரி இன்னும் அநேக பூர்வ வியாதிகளை நகங்கள் வழியாக வைத்திய நிபுணர்கள் அறிந்து கொள்கிறார்களாம்.

9. நமது தேசத்தில் ஒரிஸ்ஸா நாட்டில் மலைப்பிரதேசங்களில் காட்டு ஜாதிகளில் ஒரு நூதன வழக்கம் பண்டைக்காலம் தொட்டு நடந்து வருகிறது. கொலை, சோரம், திருட்டு முதலிய குற்றங்களைப் பஞ்சாயத்து கூடி "ஜலத்தால்" தீர்மானிக்கிறார்களாம். புல்பாணி என்று பெயர் கொண்ட புண்ணிய தீர்த்தம் இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒன்று உண்டாம். இம்மாதிரி வழக்குகள் ஏற்பட்ட சமயத்தில் இந்தப் புண்ணிய குளத்தைச் சுற்றி அந்தக் கிராமத் தலைவர்கள் உட்கார்ந்து கொண்டு இருக்கும்பொழுது இவர்களின் மதாசாரியன் ஒருவன் உடனே சூரியபகவானை ஸ்தோத்திரம் செய்துவிட்டு, அக்குளத்தில் இருக்கும் புண்ய ஜலத்திற்கு அடிப்பாகத்திலுள்ள யக்ஷிணி தேவதைகள் காரிய ஹானி செய்யாமலிருப்பதற்காக அவைகளுக்கு ஒரு கோழியைப் பலி செய்வானாம். உடனே பிரஸ்தாப வழக்கில் சம்பந்தப்பட்ட வாதி, பிரதிவாதிகள் இருவரும் அங்கு கூடியிருக்கும் மஹா ஜனங்களுக்கு நமஸ்காரம் செய்து குளத்தில் இறங்கி மார்பு மட்டுள்ள ஆழத்தில் நின்று கொண்டு இருவரும் கடவுளை பிரார்த்தித்துக்கொண்டு ஜலத்தில் முழுகுவார்களாம். இவர்களில் எவன் முதலில் ஜலத்திற்குள்ளிருந்து தலையை வெளியில் தூக்குகிறானோ அவனைக் குற்றவாளி என்று அங்கு கூடியிருப்பவர்கள் தீர்மானம் செய்துவிடுகிறார்களாம். இவ்வழக்கம் அவர்கள் மனதில் நன்றாய் ஊன்றியிருப்பதால், குற்றம் செய்தவன் ஜலத்திற்கு உள்ளிருக்கும் தேவதைகள் தன்னைப் பிடித்து ஜலத்திற்குள்ளே இழுத்துவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தினாலே தானாகவே முதலில் தலையை வெளியில் தூக்கி விடுவானாம்!

சங்கதை சங்கீத்து முடியாமல் ரோஷத்தோடு அவ்வேலையினின்றும் நீங்கி விட்டான். பிறகோ?—அவ்வேலைக்கே ஏங்கி நிற்கிறான்!



10. அமெரிக்கா கண்டத்தில் சிகாகோ, ந்யுயார்க் முதலிய நகரங்கள் மிகவும் உயரமான வீடுகளுக்குப் பெயர் பெற்றவை. நமது தஞ்சை நகரத்தில் இந்த ஆங்கிலேய ராஜ்யத்திற்கு முன்னாலேயே கட்டப்பட்ட எழு மாடி அரண்மனை நமக்கு இன்னும் அதிசயமாய் இருக்கிறது. மேற்சொன்ன இரண்டு நகரங்களிலும் பதினைந்து மாடிகள், இருபது மாடிகள் என்றால் மிகவும் சாதாரணம். இப்பொழுது உலகத்திற்குள் உயரமான கட்டிடம் நியுயார்க் பட்டணத்தில் இருக்கிறது. அதற்கு 'உல்வர்த்து பில்டிங்க்' என்று பெயர். அது அறுபது மாடியும் தரை மட்டத்திலிருந்து எழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டு அடி உயரமுமாம். அதாவது திருச்சினப்பள்ளி உச்சிப் பிள்ளையார் மலையைப்போல் மூன்று பங்கு உயரமாம். இப்பொழுது இக்கட்டிடத்தை விட இன்னும் நானூற்றுப் பதினாறு அடி உயரமாக அதாவது மொத்தம் தரை மட்டத்திலிருந்து ஆயிரத்து இருநூற்றெட்டு அடி உயரமுள்ள ஒரு புதிய கட்டிடம் கட்டுவதாகத் தீர்மானித்திருக்கிறார்களாம். இதற்கு 'லார்கின் கோபுரம்' என்று பெயராம். நூற்றுப்பத்து மாடிகளாம். இக்கட்டிடத்தைக் கட்ட எண்பது லக்ஷம் செங்கல்களும், நாற்பதினாயிரம் டன்கள் நிறையுள்ள இரும்பும் உபயோகப்படுத்தப் போகிறார்களாம். கீழ் விஸ்தீரணம் ஐம்பதினாயிரம் சதுர அடிகளாம். இந்தக் கட்டிடத்தைக் கட்ட மொத்தம் ஐந்து கோடி ரூபாய்கள் செலவழியுமாம். இந்தியாவிலோ, வெகு பேருக்கு இருக்க வீடில்லை. இருபது ரூபாய் உத்தியோகம் கிடைத்தால் போதுமென்று அதைத் தொட்டுக் கொண்டு திருப்திபட்டுப் போகிறோம்!

11. உலகத்தில் எல்லா வேகங்களையும் விட மனோவேகம் மிகவும் பெரிதென்பர். அதைத் தவிர, அதாவது இவ்வுலகத்திலுள்ள வேகங்களைச் சற்று கவனித்துப் பார்ப்போம். நமது பெற்றோர்கள் காலத்தில் நானூறு ரூபாய் விலையுள்ள ஜோடி மாடுகள் மணிக்குப் பதினைந்து மைல் வீதம் சென்றது என்றால் அக்காலத்து ஜனங்களுக்கு ஆச்சரியம். இக்காலத்து வேகங்களைக் கேட்டாலோ நம்மையெல்லாம் பைத்திய ஆஸ்பத்திரியில் நம்முன்னோர்கள் அடைத்துவிடுவார்கள். பிரான்ஸ் தேசத்தில் பென்னெட்டு என்னும் துரை ஆகாய விமானத்தில் ஒரு மணிக்கு இருநூற்று எழுபத்தி எட்டரை மைல்கள் விகிதம் பறந்திருக்கிறார். ப்ளாரிடா தேசத்தில் டெய்டோனா பட்டணத்து ஸமுத்திரக் கரையில் மேஜர் ஸிக்ரேவ் என்னும் துரை ஸன்பீம் என்னும் மோட்டார்காரில் மணிக்கு இருநூற்று நாலு மைல் விகிதம் சென்றிருக்கிறார். அதே ப்ளாரிடா தேசத்தில் 'ப்ளாண்ட் ஸிஸ்டம்' என்னும் ரயில்வண்டித் தொடர் மணிக்கு நூற்றிருபது மைல் விகிதம் செல்கிறது. இங்கிலாந்து தேசத்து "மேபில் இலை" என்னும் மோட்டார் படகு மணிக்கு எண்பது மைல் விகிதம் செல்கிறது.

S. A. ஸ்ரீநிவாஸ சர்மா.

# பிரபஞ்ச தரிசனம்



ஒருவன் பரிசுத்தமாகவும், சுசிலனுகவும் இருக்கிறான் என்றால் 'அன்புடையவனுய் இருக்கிறன்' என்பது அதன் பொருள். ஆத்ம கோடிகளிடத்தில் அன்பைச் செலுத்துபவனே பரிசுத்தனுவான்; அன்பற்றவனே அசுத்தக் களஞ்சியம். அவனைத் தொட்டாலும் தீட்டு உண்டாகிவிடும். அவனைத் தீண்டிய தோஷ நிவர்த்திக்காகத் தக்ஷணமே ஸ்நானம் செய்யாவிடில் நமது ஹிருதயமே கெட்டுப்போய் விடும். அன்பு ஒன்றுதான் துதிக்கத் தகுந்த பரமோத்கிருஷ்டமான அபூர்வ வஸ்து. அன்பு மிகுந்த ஒருவன், எவரையும் தீண்டக்கூடாதென்றுள்ள நமது உபவாச நாளில் நம்மிடம் வந்தாலுங்கூட அவனைத் தொடுவதில் தீட்டு என்பது கிடையாது. உபவாச பரிசுத்தம் கெட்டு விட்டதென்பதும் இல்லை. நமது அன்பான உள்ளத்தோடு அவனுடைய அன்புமயமான உள்ளத்தையும் உடலையும் தொட்டுக்கொள்வதில் எவ்வாற்றாலும் பரிசுத்தத்திற்குப் பங்கமேற்படாது. அங்கும் அன்பு! இங்கும் அன்பு! இதன் நடுவில் தொட்டுக் கொள்ளக்கூடாதென்ற 'தீட்டு' என்பது எது? கபட குணம் என்பது எது? வேற்றுமை என்பது எது? அன்னியஸ்தன் என்பது எது?

***

தீட்டு, எச்சில், அசங்கிதம் என்பனவெல்லாம் அன்பின் முன் நிற்க முடியுமோ? தனது அன்புக் குழந்தையின் எச்சில் ஒரு எச்சிலாகத் தாய்க்குத் தோன்றுமோ? அக்குழந்தையின் மலஜலாதிகளில் அசங்கிதம் காணப்படுமோ? இல்லை.—ஏன் இல்லை? அது அன்பால். அன்பின் காரணமாக எதுவும் விகல்பமாய் மனதுக்குத் தோற்றுவதில்லை. அவ்வித உயர்தர அன்பு இயற்கையிலேயே "பரிசுத்தம்" என்ற பெயரைப் பெற்றிருக்கையில் இந்தத் தீட்டு போன்ற அல்ப விஷயங்களையெல்லாம் லக்ஷியம் செய்யுமோ? அன்பானவர்களை அன்போடும் தொடுகையில் ஈச்வராம்ஸமான அருள் உதிக்குமேயன்றி, அங்கு பாவம்—பேதம்—தீட்டு—பரிசுத்தக் குறைவு எதுவுமே அணுகிடாது. அன்போடு அன்பு ஒன்றுபடும்போது உள்ளம் பரிசுத்தத்தில் உயருகின்றது. / அதனினும் சிறந்த பரிசுத்தம் வேறு எது? தெருவில் மண்வைத்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தை தன் தாயைக் கண்டதும் ஓடிவருகிறது. உடனே அன்புப் பெருக்குடன் அக்குழந்தையைத் தாயானவள் தூக்கி

அண்ணன் வீட்டிற்குத் தம்பி வந்தால் அண்ணன் அப்போது காபியுடன் தம்பி முன் நிற்கிறான். தம்பி வீட்டிற்கு அண்ணன் வந்தாலோ அப்போது தம்பியின் உபசாரணை!



எடுத்து முத்தமிடுகிறாள். அக்குழந்தையின் தேகமெங்கும் ஒட்டிய மண் அத்தாயின் மீதும் படுகிறது. அதனால் அவள் அசுத்தமடைந்தவளாகிறாளோ? இல்லை; அன்பிலே உயர்தரமுடையவளாகிறாள். அவள் ஹிருதயம் அந்த அன்பால் பரிசுத்தமுள்ளதாகிறது. ஆகவே, அன்புக்கு பேதம்—தீண்டாமை எதுவுமே இல்லையென்று தெரிந்துகொள்கிறோம்.

***

இவ்வித அன்பின் பரிசுத்தம் இன்றி, நித்தம் நித்தம் நீராடி வெகு சுத்தமுள்ளவர்கள்போல் காணப்பினும், அன்பு கலவாத அந்தப் பரிசுத்தம் கடவுளின் முன்னிலையில் அவருக்குப் பிரியமான பரிசுத்தமாக ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. நீராடுவதால் தேகத்தின் மேல்புறம் மட்டும் மலினம் நீங்கிச் சுத்தப்படலாம்; அவ்வளவே. ஆனால் உள்ளிருக்கும் மனத்தின் அழுக்கு நீங்கப்பெறுமோ?—அது சுத்தப்படுமோ? தூயதன்மைகொண்டு களங்கமற்றுப் பிரகாசிக்க அதற்குத் திறன் எது? ஆகவே, அன்பு இருந்தால்தான் ஒருவன் பரிசுத்தப்பட முடியும். அவன் நீராடிச்சுத்தம் செய்துகொண்டவனை விட மேலானவனுகக் கருதப்படக் கூடும். இவ்வாறாய அன்பின் ஒரு பெருந் தனி மகத்துவத்தை யுணரப் பெருத நெஞ்சு ஒரு கல் நெஞ்சு, கேடுகெட்ட நெஞ்சு, பொல்லாத நெஞ்சு, துஷ்டத்தனமான நெஞ்சு, துரோக நெஞ்சு, வேற்றுமைப்பட்ட நெஞ்சு, வேண்டுமென்றே நாசமுறுகிற நெஞ்சு, நரகக் குழியில் விழுந்துவிடப்போகிற நெஞ்சாகவே அது முடிந்துவிட நேரும். அவ்வித தீய நெஞ்சுக்குக் கடவுளின் சாபம் நிச்சயமாக உண்டு. இவ்விதம் சாபம் பெறுகிற வழியில் அன்பற்றுப்போய் அசுத்தமடைந்து வழி தவறுவதற்கா பெறுதற்கரிய இந்த மானிட ஜென்மத்தை எடுத்தது? அவரவரது சொந்தப் பிழைபாடுகள் அவரவருக்குத் தெரியுமல்லவோ? கக்ஷிப் பிரதிகக்ஷிகள் ஏனோ? துவேஷ சிந்தை எதற்கோ? அன்பற்ற தன்மை நன்றாமோ? அவரவரே யுன்னித் திருந்துக. சித்தத் தெளிவுகொண்டு, வேற்றுமையை விடுத்து, அன்பின் பெருக்கிற் கலந்து அனைவருமே ஒன்றுபடுவோம்—ஒன்றுவோம்—இவ்வருஷம் சென்னையிற் கூடும் காங்கிரஸ் மகாசபைக்கு ஏக மனத்துடன் செல்வோம்—உளமகிழ்வோம்—வாரீர்.

***

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வழக்கம். ஒவ்வொன்றில் பிரீதி. ஸர் மேஜர் எட்வர்ட் நிக்கல்ஸன் என்பவர் பலவிதமான பாம்புகளைப் பிடித்து அவற்றின் குண பேதங்களை அறிய முயல்வதில் மிக்க அவா வுடையவராய் இருந்தார். காங்கிரஸ் மகாசபையின் ஆதித் துணைவர்களுள் ஒருவரான மிஸ்டர் ஹியூமுக்குப் பக்ஷி சாஸ்திரத்தில் வெகு பிரீதி. பலவிதமான பக்ஷிகளை வளர்த்து அதன் ஸ்வபாவ குணங்களை அறிவது அவர் வழக்கம். இப்படியே சிலருக்குப் பழய காலத்து நாணயங்களைச் சேர்ப்பது பழக்கம். வேறு சிலருக்கு ஒரு புஸ்தகத்தையேனும் விலைகொடுத்துப் பெறுமல் இனமாகவும் இரவல் வழியிலும் அப்பிக்கொண்டுவந்து நிறைத்துக் கொள்வது வழக்கம். இந்தியாவில் பூர்வீக வேந்தர்களுக்கோ, அழகிலும் யௌவன காந்தியிலும் விசேஷித்த பல தேசத்து சுந்தரிகளைத் தமது

உயர்தரக் கல்வி கற்றென்ன? வயிற்றின் கொடுமை கூலி வேலைக்கும் துணிய வைத்து விடுகிறது. கம்பரும் வயிற்றின் கொடுமையால் மண் சுவர் கட்டும் வேலை செய்தவர் தான்.

அந்தப்புரத்திலே சேர்த்துச் சுகிப்பது வழக்கம். வித்வான்களுக்கோ ஒவ்வொரு புஸ்தகமாக ஆராய்வது வழக்கம். பொடி போடுகிறவர்களுக்கோ ஒவ்வொருவரிடமும் இருக்கிற பொடி மட்டையின் காரத்தை யறிவது வழக்கம். பி. ஏ. படித்தவர்களுக்கோ "உள்ள ஆஸ்தியைச் செலவிட்டுப் படிந்து வேலைக்குஉழலும் வாலிபர்களில் யாரொருவன்" என்று பிறரிடம் வருந்திச் சொல்வது வழக்கம். தற்போது நம் நாட்டின் முக்கிய வழக்கம் எதுவென்றாலோ காரியத்திற்கு வராத வாய்ப் பேச்சுகளிலேயே காலத்தைக் கழிப்பது தான். பின்னும் சிலருக்கு ஒழிந்த நேரத்தை வீண் போக்குவதே வழக்கமாக இருக்கிறது.

***

"ஆநந்தகதா கல்பகம்" ஆசிரியருக்கு ஒரு அன்பர் பின்வருமாறு எழுதுகிறார்:—"உலக அநுபவமுதிர்ந்த தங்கட்கு வரையுங்கால் மிக்க ஜாக்கிரதையுடன் எழுதுதல் அவசியமென்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் தங்களுடைய இறகு முனைக்குத் தப்பிய குற்றவாளிகள் வெகு சிலரே என்பது எனது அபிப்பிராயம். தாங்கள் சூசனையாகக் கூறும் அநுபவங்களில், அவ்வித குணங்களையுடைய ஒருவன் தாங்கள் எழுதியவற்றை வாசிப்பானாயின் மிக மனம் வருந்தாமலிரான்"— என்கிறார். பிறர் வருந்தவேண்டுமென்று அந்நூலின் ஆசிரியர் எதையும் குறிப்பிட வரவில்லை. ஆனால் எவரும் திருந்தவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடனேயே அவர் தமது ஆசிரியத் தொழிலை நடத்திச் செல்லுகிறார். "ஆநந்த கதா கல்பக"த்திற்குக் கூறிய இந்த பதில், அதே அநுபவச் சாயலில் அமைந்துள்ள "ஆநந்த குணபோதினி"க்கும், அதில் வெளிவரும் அநுபவங்கட்கும் கூடப் பொருந்தும் என்பதற்கே இக்குறிப்பை இங்கு தரலானது.

***

ஆதியில் நாலு வர்ணங்கள் தோன்றியபோது அவை குணகர்ம வித்தியாஸங்களால் ஏற்பட்டன. பல தொழில்களை ஒருவனே செய்வதானால் சாத்தியமாகாதென்று பிரம்ம-க்ஷத்திரிய- வைசிய - சூத்திரர்களெனப் பிரித்து முறையே நாலு தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. இப்படித் தொழில்களின்படி ஏற்பட்ட வர்ண பேதங்கள், பிறப்பின்படிக்கும் ஸ்தலபேதங்களின்படிக்கும் அமைந்துவிட்டபடியால் ஆதியிலிருந்த நாலு வர்ணங்கள் இப்பொழுது நாற்பதாயிரமாய்ப் பெருகிவிட்டன. இவ்விதம் பெருகிவிட்ட ஜாதி பேதங்களால் ஸமூகத்திற்கு எவ்வித நன்மையேனும் உண்டாயினவா? இந்தப் பேதங்களால் தொழில்கள் திறமையாகச் செய்யப்பட்டு அபிவிர்த்தியாகின்றன வென்பதுமில்லை. தற்கால நாகரீகத்தின் பலனாக நினைத்தவன் நினைத்த தொழில்களைச் செய்கிறான். பிராமணன் தோற்கிடங்கும் வைக்கிறான். க்ஷத்திரியன் போர்த்தொழிலை மறந்துவிட்டான். வைசியன் வாணிபத்தையும் வியவசாயத்தையும் விட்டு உத்தியோகம் செய்கிறான். சேவையே தொழிலாயிருந்த சூத்திரன் இப்போது எஜமானாகவும், அவன்கீழ் பிராமணன் சேவகனாகவும் ஆய்விட்டான். ஆகையால் ஜாதி பேதமானது தொழில் பேதத்தை

ஒருவன் பட்ட நஷ்டத்தில் இவர்களுக்குக் கவலை யில்லாவிடினும், வெகு கவலைப் பட்டவர்கள்போல் வந்து ஒப்புக்கு விசாரித்து வெகு துக்க அபிநயம் புரிவார்கள்.



அஸ்திவாரமாகக் கொண்டதென்பது சிதறிப்போயிற்று. இது போய்விட்டபடியால் வேறு என்ன நன்மையைச் செய்வதற்காக ஜாதி வித்தியாசப் பெருக்கானது ஹிந்து ஸமூகத்தில் நிலைத்திருக்கின்றதோ? ஹிந்து ஸமூகம் இப்போது 21-கோடி ஜனங்கள் கொண்டது. பிரம்ம-க்ஷத்திரிய-வைசியர்கள் ஆகிய மூன்று வகுப்பாரும் தனித்தனி சுமார் இரண்டு கோடி உள்ளார். பாக்கி பதினைந்து கோடியும் சூத்திரர். இந்த 15-கோடியில் பலகோடி தீண்டாதவர்களென்று ஒதுக்கப்பட்டவர்கள். இப்படி ஸமூகம் பிளவுபட்டு, ஒன்று சேர்ந்து தேச நன்மைக்கு உரிய அரும் பெரும் காரியங்களைச் செய்யச் சக்தியற்ற ஸமூகம் அடங்கிய தேசம் இந்த உலகத்தில் வேறு எங்குமே இல்லை.

### தனியே உண்ணும் புத்தி!

தினமும் தான் தனியாக வேறேயாய் உண்கிறீர்கள். விசேஷ நாட்களிலாவது பந்து மித்திரர்களோடு கூடி ஒருமிக்கப் புசித்து ஆநந்திக்கலாகாதா? அன்றைக்குக்கூடவா தனி அறையில் வேறேயாக உண்ணவேண்டும்? இதில் என்ன கௌரவமோ? பந்தியில் பரிமாறப்படாத சில பிரத்தியேக வஸ்துக்களை விரும்பி இவ்விதம் செய்கிறீர்களா? நீங்களென்ன மிருக ஜாதியைச் சேர்ந்த மனித வர்க்கமா? காகம்கூட உறவு கலந்து உண்ணுகிறதே?

கடவுள் படைத்த உலகில் ஏற்றத் தாழ்வென்பது இருக்க முடியாது. இதனைச் சைத்தான் உலகமாக்காமல் தெய்வலோக மாக்குவோமாக. நமது வாழ்க்கை தூய்மையானதாக இருக்கட்டும். நாம் திரிகரணசுத்தி யுடையவர்களாக இருப்போமாக.

(மஹாத்மா.)

கடவுளின் சோதனை அவரையே முற்றிலும் நம்பிய பேர்களுக்குத்தான். ஒரு கவளம் அன்னத்திற்குக் கண்ணீர் விடுவோரும் அவர்களே!

கொதிக்கும் ஜலத்தில் அழுக்குத் துணிகளை அமுக்கி அதன் மேல் அரை மூடி எலுமிச்சம் பழத்தைப் போட்டுக் கொதிக்கவைத்துத் துணிகளை எடுத்துத் துவைத்தால் துணிகளெல்லாம் சுத்த வெள்ளையாய் விடும்.

பெற்றோர்— பிள்ளைகள் முகம் ஒத்திருப்பது போல், ஸதிபதிகளின் முகமும் எப்படியோ ஒன்றுபோல் பொருந்திப்போய், பார்த்தவர்களுக்கு அவர்கள் தம்பதிகள் என்று தெரிவித்து விடுகிறது.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு.

(382-ம் பக்கத் தொடர்ச்சி)

### 82. மட்டில்லாமல் கொடுத்தாலும் திட்டு கேட்கலாகாது.

79, 80-வது பழமொழிகளின் கருத்தையே இதற்கும் குறிப்பிடலாம். எவ்வளவுதான் கொடையாளிகளா யிருந்தபோதிலும் அன்பும் பிரியமுமான சொற்களுடன் அதைக் கொடுக்கவேண்டும். "இந்தா தொலைத்துக்கொள்" "உன் இழவுக்குக் கொடுக்கிறேன்" என்று வைதுகொண்டே தருவதில் என்ன லாபம்? உள்ள பொருளும் பணமும் தன் கைவிட்டுப் போவதுடன், அதைப் பெற்றவர்களும் அதற்காக நன்றியறிதல் காட்டாதவராகி வருத்தமும் கொண்டு விலகுவார்கள். ஆதலின் அன்புதான் முக்கிய மென்றபடி.

### 83. பூமி அதிராத புண்ணியவான்.

அவ்வளவு சாந்தமான தன்மையுள்ளவன், குணமுள்ளவன் என்றபடி. தான் நடக்கும்பொழுதுகூட வேகமாய் நடந்தால் எறும்பு முதலிய பிராணிகள் எங்கு நசுங்குமோ என்று அவ்வளவில் பயந்து நடக்கப்பட்ட புண்ணியவான் ஜனங்களிடமும் தன்னைச் சேர்ந்தவர்களிடமும் எவ்வளவு அன்பாயிருக்கக் கூடும்? இம்மாதிரியான புண்ணியாத்மாக்களைக் குடும்பத்தின் தலைவர்களாகப் பெற்றுள்ள வீடு எவ்வளவு கௌரவமும் புகழும் கொண்டு ஓங்கி நிற்கக்கூடும்? அந்த வீட்டில் சண்டை சச்சரவு ஏது? எல்லோருக்குமே அவன் பிரியமானவன். யாவருக்குமே வணங்கி நடக்கப்பட்டவன். சிறு குழந்தைகளின் அதிகார வார்த்தைகளுக்கும் உட்பட்டுக்கிடப்பான். இத்தகையோரே "அன்பு" என்பதின் கிரீடமாவார். அவர்கள் மற்றவர்களுக்குத் தருவதும் அன்பு. மற்றவர்களிடமிருந்து அவர்கள் பெறுவதும் அன்பு. ஆகையால் இம்மாதிரியான பெயரும் கீர்த்தியும் நமக்குக் கிடைக்கும்படி நாம் நடக்கவேண்டும்.

### 84. பாடக்காலி வாழ்ந்தால் பத்தெட்டு ஜனம் பிழைக்கும்.

இது நல்ல எஜமானியிடமுள்ள உத்தம குணத்தை எடுத்துக்காட்டுகிற பழமொழியாகும். அந்த எஜமானிமட்டும் ஆயுளோடு இருந்தால் அவளுடைய அன்பு என்ற நிழலின் கீழ் பத்தெட்டு ஜனங்கள் பிழைப்பார்கள் என்று சொன்னபடி. சிற்சில குடும்பங்களில் இவ்வித உத்தமகுணம் படைத்த லக்ஷ்மிகள் இருந்துகொண்டு அந்தக் குடும்பத்திற்கே ஒரு கௌரவத்தையும் மதிப்பையும் கொடுக்கிறார்கள். அவர்களை முன்னிட்டு அந்த வீட்டிற்கு எவரும் போகவா இருக்கும்படி ஆகிவிடுகிறது. அந்த லக்ஷ்மிகள் காட்டும் அன்போ ஒரு தனி அன்பு. ஒருவரிடத்தில் பிரீதி, மற்றவர்களிடத்தில் கடுகடுப்பு என்பதே இல்லை. எல்லோரிடமும் பரம விஸ்வாசமாகவே காணப்படுகிறார்கள். வீடு நிறைந்திருக்கிற அத்தனை பேர்களுக்கும் ஒரு பெரும் ஆதாரவாய் இருந்து



கொண்டு அன்பின் தலைமை ஸ்தானத்தை வகிக்கிறார்கள். வீட்டின் தலைவர் ஒரு மாதிரியான மனுஷ்யராக இருந்தாலும், இந்த லக்ஷ்மியின் உத்தமமான ஸ்வபாவத்தைத் தடுக்க மனம் வராமல் ஜாடையாய் ஒதுங்கிப்போய் விடுகிறார். தனது பர்த்தாவுக்கு அந்த மனிதர்கள் பிடிக்காவிட்டாலும் கூட, தான் மட்டும் அவர்களிடம் பிரீதியாய் இருந்துகொண்டு அவர்களுக்கு வேண்டியவற்றை அன்புடன் செய்கிறாள். பசி யென்று வந்தவர்களுக்கு வெகு அன்பாய் உபசரிக்கிறாள். இந்த உபசரிப்பின் தினுசிலே அவர்கள் இன்னொரு தினத்துக்கும் இருந்துபோகக்கூடியதான மனதுள்ளவர்களாகிறார்கள். அந்த லக்ஷ்மி இருக்கிறவரை நமக்கு எவ்வித குறைவுமில்லை, நமக்கு என்ன நேர்ந்தாலும் அந்த லக்ஷ்மியின் ஆதரவு நமது கண்ணைத் துடைத்து ஆறுதல் படுத்திவிடும் என்று நினைப்பவர்களாகிறார்கள். கடவுளும் இத்தகைய லக்ஷ்மி தேவதைகளுக்குச் செலவுக்குத் தாராளமாய் உதவும்படி வீட்டின் வருமானத்தைப் பெருக்குகிறார். அந்த லக்ஷ்மியின் பாக்கியவசத்தால் தொட்டதெல்லாம் விருத்தியாகிறது. "அவளால் வந்த வாழ்வல்லவா அவனுக்கு; அவள் வரப்போய்த் தான் அவனும் அவள் அதிர்ஷ்டத்தால் இவ்வளவு பெருமைக்கும் செல்வத்துக்கும் உரியவனானான்" என்று வீட்டுக்காரனைப் பார்த்துச் சொல்வோருமாகிறார்கள். இப்படிப்பட்ட லக்ஷ்மிகள் வீட்டில் இருந்தால் அந்த வீட்டுக்கு என்ன குறைவு? அந்த வீட்டை அண்டி ஜீவிப்பவர்களுக்குதான் என்ன குறைவு? அந்த வீட்டுக்கு வருகிறவர்களுக்குத் தான் என்ன குறைவு? அந்த லக்ஷ்மியின் முகத்தில் பிரகாசிக்கிற ஒரு தேஜஸே எல்லோரையும் க்ஷேமப்படுத்தப் போதும். ஆனால் ஒரு விஷயம்; நல்லதாக உள்ள எதற்கும் ஒரு சோதனை உண்டல்லவா? நல்ல பொருள்தானே காணாமற் போய்விடுகிறது. இத்தகைய லக்ஷ்மிகளில் வெகு பேருக்கு ஆயுளைச் சொற்பமாகவே ஆண்டவன் வைத்து விடுவது சகிக்க முடியாத ஒரு பொல்லாப்பு. எவ்வளவோ வீடுகளில் எத்தனையோ லக்ஷ்மிகள் இருந்திருந்து பிறகு திடீரென்று மறைந்துபோய்விட்டதைக் கண்டிருக்கிறோம். அவர்களுக்குப் பிறகு அந்த வீட்டின் மங்கள வாழ்வு மறைந்து போய்விடுகிறது. அத்துடனல்ல, இந்த லக்ஷ்மிகள் பெற்றெடுத்த குழந்தைகள் பிறகு வருகிற மாற்றாந்தாயால் வெகு பாடுபட்டுப் போகிறார்கள். சிலருக்கு இந்த லக்ஷ்மியுடன் எல்லா வாழ்வும் போய்விடுகிறது. அந்த லக்ஷ்மிகளுக்குப் பிறகு அவர்கள் இருந்த வீட்டையும் விற்றுத் தொலைக்கும்படி கஷ்டகாலம் சூழ்ந்துகொள்கிறது. "அவள் இருந்தபோது அந்த வீட்டைக் கட்டினான். அவள் போனதும் அது விற்கும்படியாகி, அவளால் வந்ததெல்லாம் அவளோடு வாரிக் கொண்டுபோய் விட்டது" என்று உலகத்தார் சொல்லுவதும் உண்டல்லவா? சில வீடுகளில் இவ்வித லக்ஷ்மிகள் நீண்டகால வாழ்வு வாழ்பவர்களாயிருந்து கிழவிகளாகவும் ஆகி, எல்லோரும் அவர்களைச் சுற்றிப் பிராணனுக்குப் பிராணனாய் நிற்க, அந்த வீட்டுக்கே ஒரு பெரிய பலமாகவும் ஆதாரவாகவும் இருந்து பரிமளப்படுத்துகிறார்கள். இது அபூர்வமாய்க் காணும் விஷயம். இவ்விதமான லக்ஷ்மிகள் இருந்தால் பத்தெட்டு அல்ல; ஆயிரத்தெட்டு ஜனங்கள் ஏன் அவர்களை அண்டிப் பிழைக்கக்கூடாது? இதைத்தான் இந்தப் பழமொழி அழகாய் விவரித்திருக்கிறது. பின்னும் ஒரு சங்கதி; சில வீடுகளில் எஜமானிகள் எளிய ஜனங்களான வேலைக்காரன், வேலைக்காரி இவர்களின் கூலிகளைக் குறைத்து அவர் வருந்தச் செய்வது வழக்கம். இது வெகு கெட்ட குணம். அப்படி ஒரு

பொழுதும் இருக்கவேகூடாது. இதே நியாயத்தை உத்தேசித்து கண்வ மகரிஷி தனது குழந்தை சகுந்தலையை அவள் புருஷன் வீட்டிற்கு அனுப்பும்போது "பூயிஷ்டம் பவ தக்ஷிணா பரிஜனே" என்றார். அதாவது "வேலைக்காரர்களிடத்திலும், வேலைக்காரிகளிடத்திலும், வெகு தயவாயும் அன்பாயுமிரு" என்று சொல்லி யனுப்பினார். அவர் அன்பு என்றுமட்டும் சொல்லி நிற்காமல் 'வெகு அன்பாயிரு' என்று சொன்ன ஸூக்ஷ்மத்தை நமது வாசகர்கள் நன்றாய்க் கவனிக்க வேண்டும். அக்காலத்திலும் வேலைக்காரர்களிடம் எஜமானனும், எஜமானியும் அன்பாயிருத்தல் வேண்டுமென்பது ரிஷிகளால் ஒப்புக்கொள்ளபட்ட தர்மமாகும். (தொடரும்.)

## தன் கைப்படக் கடிதம்.

தன்னிடத்துப் பிராண அன்பை வைத்துள்ளவர்களுக்கும், தன்னை நம்பியவர்களுக்கும் தன் கைப்படக் கடிதம் (ஸ்வஹஸ்த லிகிதம்) எழுதுவதே உன்னதம். அதையே அன்பினர் எதிர்பார்ப்பர். மற்றவர் எழுத—அடியில் கையொப்பமட்டும் இட்டிருப்பின், கடிதம் எழுதவும் இயலாத படுக்கையிற் கிடக்கின்றாரோ வென்று கலங்கி வாடுவர். தந்தியோ—கடிதமோ உடனே தந்து ஏன் வேறொருவர் எழுத நேர்ந்தது என ஆத்திரத்துடன் விசாரிக்கவும் தொடங்கி விடுவார்கள். அன்பு உள்ளம் தவித்துப் போம். இத்தகைய அன்பினரிடம் சிலர் மனம் மாறிப் போய் வேறொருவரைக்கொண்டு கடிதம் எழுதச்செய்து அடியில் கையொப்பமிடுகிறார்கள். அதைச் சகியாமல் அந்த அன்பர்கள் கேட்டால், நான் எவருக்கும் என் கைப்படக் கடிதம் எழுதுவதில்லை என்கிறார்கள். அதற்கு முன்பு தம் கைப்பட எழுதிவிட்டு, இப்போது அன்புக் குறைவால் இப்படிச் சொல்வது தர்மமா? அது மாறிவிட்ட மனதின் கோரச் செய்கையோ—யாதோ!

---

பெரிய மனுஷ்யனுடைய கீர்த்தி அவன் எதிரில் தான். அவன் இருக்கும் இடத்தில் தான். அவனை விட்டுச் சிறிது தூரத்தில் போனாலோ அவனைப்பற்றித் தாழ்த்தியான சொல்தான். அவனது பல குணக்குறைவுகளும் வெளிப்படும். என்ன வெளிப்படினும் அவனது செல்வாக்கும் ஆடம்பரமும்—அவ்வளவையும் மிதித்துக்கொண்டு தலைக்குமேல் நிற்பதால், அதையே உலகமும் மதிப்பதில், மற்ற 'உள் சங்கதிகள்' வெளிவராமலே போய்விடுகின்றன. இவ்விதம் சிலர் உண்டு. எனினும், தூரத்திலும் ஸமீபத்திலும் ஒரேவித புகழ்தாங்கி நிற்போரும் ஞாலமீது இல்லாமலில்லை.

# நட்பு

(333-ம் பக்கத் தொடர்ச்சி.)

முதலாவதாக, நல்லோர் சகவாசம், அதைப் பெற்றவருக்கு நல்ல பெயரும், பெருமையும் பயக்கிறது.

முதற்பயன் சகவாசம்
பெயர், பெருமை.

"பாலோ டாய நீர் பாலாகு மல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்—தேரில்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து"

என்பதின் உண்மையை உறுதிப்படுத்தவும் வேண்டுமோ?

இரண்டாம் பயன்
கவலையைக் குறைத்து
இன்பத்தைப்
பெருக்கல்.

இரண்டாவதாக, கோடானுகோடி மனிதர் நிறைந்த இப்பரந்த உலகினில், மனிதனின் தனிமையை—மிக்க வருத்தந் தருந் தனிமையை---நீக்குபவன் நண்பனே. பேச்சுக்கும் வீச்சுக்கும், இன்பத்திற்கும், துன்பத்திற்கும், பலத்திற்கும், பயத்திற்கும் துணை நிற்பவன் அவனே. மனக்கவலை பலக்குறைவு என்றபடி நம் மனத்தி லடைப்பட்டு நமது மனநோய்க்கும் பலவீனத்துக்கும் காரணமாயிருக்கும் விஷயங்களை நண்பனிடம் வெளியிட்டால் அதன் மூலமாய் மனது ஒருவித ஆறுதலடையவும், அவனது சமாதான வார்த்தைகளால் கவலை குறையவும் இடமேற்படும். அவ்வாறு சொல்லிக்கொள்ளுவதில், இன்னும் இரு நன்மைகள் பயக்கும். நெருங்கிய உடன்பிறந்தோன் நம் செல்வத்தையும் சுகத்தையும் பங்கிட்டுக் கொள்ளுகிறான்; ஆனால் நண்பனோ, வறுமையையும் துயரையும் பங்கிட்டுக்கொண்டு செல்வத்தையும் சுகத்தையும் இருமடங்காக்கும் பெருமை பெறுகிறான். எனவே, நட்பினாற் பெறப்படும் நலம் மிக நெருங்கிய உறவினாலும் பெறவியலாது என்பது இனிது புலப்படுகின்றதல்லவா? எவ்வளவு உறவினரைப் பெற்றிருப்பினும் உண்மை நண்பன் ஒருவனைப் பெற்றிருத்தலுக்குச் சமமாகாது என்பதைக் கூறவும் வேண்டுமா?

***

மூன்றாம் பயன்:
அறிவு தெளிந்து
நுட்பம் பெறுதல்.

அநேகவிதமாய் யோசிப்பதினால் முன்னது பின்னதாகக் கலங்கியிருக்கும் எண்ணங்களை வெளியிட்டாலன்றி, அவை ஒழுங்குபெற்று நன்றாய் வார்த்தையி லமைவனவாகா. அவைகளைத் தானாகவே வெளியிட்டுக் கொள்ளலாமெனினும், அது நல்லறிவுடைய நண்பனொருவனிடம் வெளியிடுதலைப்போல் அவ்வளவு பலன் கொடுக்காது. எங்ஙனமெனில், அந்நல்லறிவுடைய நண்பனது ஆக்ஷேப சமாதானங்களால், எண்ணங்களை நன்றாய்ச் சீர்தூக்கி ஒதுக்கப்படுவனவற்றை ஒதுக்கவும், சேர்க்கப்படுவனவற்றைச் சேர்க்கவும் அறிவு தெளிவு

பெற்று நட்டமடையும். இந்நன்மை தானே கூறிக்கொள்ளுதலினுற் பெறவியலாது.

***

நண்பனே எதற்கும் சரியானபடி சூழ்ச்சி சொல்லுதற்கு உரியவன். தனக்குத்தானே சூழ்ந்திடல், தன்னைப் புகழும் முகஸ்துதிக்காரனிடத்தில் சூழ்ச்சி செய்வதை யொக்கு மாகையாலும், தன் குற்றம் தனக்குத் தெரியாதாகையாலும் தனது நிலைமையையும் சுற்றுச் சார்புகளையும் நன்குணர்ந்த நண்பனிடம் யோசனை கேட்டுச் செய்தல் காரிய சித்திக்கனுகூலமாம். பிறரிடம் ஏதாவது இரந்துகொள்ளல், அல்லது வேண்டிக்கொள்ளல், தன் திறங்களை யெடுத்தறிவித்தல், ஆதியவைபோன்ற காரியங்களையும், தன்னளவிலே நாணுதலுங் கூசுதலுமான காரியங்களையும், நண்பனுல் செய்வித்துக்கொள்ளுதல் பொருந்தும். சிநேகனுவன்றித் தானே செய்துகொள்ளவியலாத காரியங்கள் எத்தனையோ யிருந்தலின் எக்காலத்தும் எக்காரியத்திலும் உதவி செய்யத்தக்கவன் நண்பனே.

நான்காம் பயன் : காரிய சித்தி.

(தொடரும்)

லக்ஷ்மீ வேங்கடரமணன்.

### கடிதம்எழுதத் தொடங்கியபோதே சொல்லிவிடு !

பணத்துக்காக வந்த மனுஷ்யன் அதை மறைத்துவிட்டு வேறு என்னென்னவோ வார்த்தைகளாடிவிட்டு அப்பால் தனக்குப் பணம் வேண்டுமென்று காகிதத்தில் எழுதத் தொடங்குகிறுன். அப்படி அவன் எழுத ஆரம்பித்ததும், அது பணம் கேட்கவே யென்று நீ தெரிந்து கொள். அக்கடிதத்தை உன்னிடம் தருவதற்கு முன்பே நீ முடியும்—முடியாது என்பதைச் சொல்லிவிடு. அப்போது அவன் பிரமிப்பான்.

---

நீண்ட நாள் ஒரு மனிதன் உயிர்த்திருந்தால்—இன்னுமா இருக்கிறுன் என்று எல்லோரும் பேசுகின்றனர். என் இப்படி? அவன் உயிருடன் ஜீவிக்கவேண்டுமென்று அவன்மீது பிரியம் வைத்திருந்தோரெல்லாம் காலமாய்விட்டு, இப்போது அவனைச் சூழ்ந்திருப்போரெல்லாம் பிரியமற்ற அன்னிய பந்துக்களேயானதால் அவர்களுக்கு அவன் இருப்பது ஒரு சுமைபோலப் படுகிறது. நெருங்கியவரின் கண்முன்னே 100-வருஷமிருந்தாலும் அது போதாதென்றே படும்.




## கசப்பை அதிகப்படுத்தாதே.

என் பிரிய சகோதரியே! உன் நெஞ்சிலுள்ள வருத்தங்களையெல்லாம் அப்படி ஒரு பக்கம் ஒதுக்கி வை. உலகத்தில் யாருக்குத் தான் வருத்தங்கள் இல்லாமலில்லை. வெளிக்கு மாடமாளிகை கூட கோபுரம் தான். ஆனுல் உள்ளுக்கோ அதில் வசிக்கும் ஒவ்வொருவரும் ஒரு தீராக் குறையால் வாடுவோராகவே இருக்கிறுர்கள். கஷ்டப்படுவதற்குத் தான் இந்த உலகத்தில் பெரும்பாலோர் பிறந்ததன்றி, சுகப்படுவதென்பது எங்கோ லக்ஷத்தில் ஒருவருக்கே அந்த சுப லக்ஷணம். நீ உன் வாழ்க்கையை நினைத்துப் பார்! உன் கண்ணீர்த் துளிகளை அளந்து பார்! பிறாது முன் வாழ்க்கையையும், முன்னைய கண்ணீர்களையும் எண்ணிப்பார். இதிலே முடிவில் என்ன ஏற்படுகிறது? இருவர் ஜீவியமும் ஒன்றுகவே, சுக துக்கங்களும் சமானமாகவே பொருந்தி யிருப்பதை அறிந்து கொள்கிறுய். இப்படியே உலகத்தோடும் சொந்த இன்ப துன்பாநுபவங்களை வைத்து ஒத்திட்டுப் பார்ப்பின் எல்லாம் ஏறத்தாழச் சரிசமமாகவே இருக்கும். இந்த நிலையில் உன்னுடைய நிலை ஒரு புதிதல்லவே? எங்கும் உள்ள சங்கதியையே உனது ஜீவியத்திலும் நீ காணக் கிடைக்கும்படியும், பட்டுத் தொலைக்கும்படியும் ஆகிவிட்டிருக்கிறது. இது உனது தலைவிதியாய் நிகழ, இவ்வாறு ஈசன் உனக்கு இட்ட கட்டளையா யிருக்க, எல்லாம் முன் வினைப்பயனின் செய்கையாய் நேர்ந்து வர, இவற்றை யுணர்ந்தும் நீ எதற்காக மனம் துடிப்பதோ? எதற்காக மற்றவர் மீது கசப்பு கொள்கிறுய்! உன் மீது கசப்பு உள்ளவர்களைத் திருத்தி அந்தக் கசப்பை மாற்றப் பார்ப்பது சிலாக்கியமும் சாமர்த்தியமும் ஆகுமே தவிர, பின்னும் அந்தக் கசப்பை வளரச் செய்வது புத்திசாலித்தனமாகுமா? அது உன் விவேகத்திற்குச் சரியா? உன் மீது கணவரோ, மற்றவரோ கொண்டுள்ள கசப்பையும் மன வேற்றுமை... ...மே நிவர்த்திக்கப் பார். அதை அதிகப்... ...புவதி... ...ஒரு பெரிய சங்கதியையும் சொ... ...கிறேன். ஒரு ம... ...யன் அல்லது உன் கணவனுர் ஓடி... ...பாடிச் சுகமா யிருக்கும்போது

16983

எவ்வளவு வேண்டுமானாலும் மனஸ்தாபப்படு, கோபித்துக்கொள். ஆனால் அந்த மனுஷ்யனே அல்லது உன் கணவனே பாயிற் படுத்துக்கொண்டால், அப்போது எல்லாக் கசப்பையும் மனஸ்தாபங்களையும் மறந்து போய் ஒன்று சேர்ந்துகொண்டு விடு. அந்த சமயம் நீ அன்பின் மணியாய், ஒரு நல்ல தாயாய் ஒரு பெரிய உபகாரியாய்ப் பக்கத்திலிருந்து நடந்து கொள். உன்மேல் வருத்தம் — கசப்பு கொண்டவர்களின் மனத்தை மாற்றி உன்னிடத்து இனி அன்பு கூர்ந்திருக்கும்படி செய்து கொள்வதற்கு அதுவே ஒரு அரிய நல்ல தருணமாகும். அவர்களுக்கு ஏதோ படுக்கையில் பல பல பாடு! உனக்கோ அவர்களுக்கு உதவும்படிக் கிடைத்த நல்ல வேலை! அந்த வேலையை நீ கைவிடாதே. நிலையற்ற இவ்வுலகில், ஒரு பிடி சாம்பலாகிற இவ்வுடலில் வீணே கசப்பை அதிகப்படுத்தி ஏற்றாதே. இதை நீ தினமும் மனதில் நினைத்திரு. சகிப்பு மாணிக்கமாய்ப் பெருமையைப் பெறு. என்றைக்கும் சமாதானத்தையே விருத்தி செய். ஸஞ்சலத்தைத் தூரத் தள்ளு. சச்சரவை ஒதுக்கிவிடு. உன் குடும்பம் சமாதானமாய் இருக்கப் பார். "நீ பொம்மைக்கூட்டத்தில் மறைந்துபோகாமல் இந்திபந்தனைகளை ஏற்று தமயந்தி, பார்வதி, சீதை, சாவித்திரி இவர்களைப் போன்றவளாக ஆக முயற்சி செய்." கடைசியில் கூறிய சொல் மகாத்மாவின் வாக்கு.

### சுலபமான எழுத்துக்கள்.

குழந்தைகளுக்கு முதலிலிருந்து படிப்படியாய்க் கற்பிக்கக்கூடிய சுலபமான எழுத்துக்களாவன:—'ட' இது சுலபமாக வரும். அதன் பின்பு 'ப' எழுதுவது கஷ்டமாகாது. அதற்குப் பிறகு 'ய' தொடங்குவது நல்லது. அதன்பின்பு 'ம' பிறகு 'ழ' அப்பால் ர, க, த, ந, ல, வ, அ, ஆ என்று படிப்படியாக ஆரம்பித்துக் கொள்ளலாம். இப்படி ஒரு அனுபவம்.

ஆபீஸ் மானேஜர் ஒரு குள்ள நரி. அவர் தனது சுலபமான வேலையை மகா பிரயாசையான வேலைபோல் வெளியில் விரிக்கிறார். தானே ஆபீஸைத் தலையில் தாங்குவதுபோல் தப்புத்தாளம் கொட்டுகிறார்.

எங்காவது புறப்பட்டால் "நானும் வருகிறேன்" என்று அழுவது; அழைத்துச் சென்றாலோ நடுவழியில் என்னைத் தூக்கு என்பது; பிறகோ உடனே அம்மா இடம் கொண்டுபோ என்பது. இது குழந்தையின் வேலை.

# கவிதா  விலாசம்

## வீட்டுக் குட்டிக் கலகங்கள்.

(346-ம் பக்கத் தொடர்ச்சி.)



மாமி மருமகள் சச்சரவைப் பற்றி யான் எனது சொந்த மொழியிற் கூறுவதைக் காட்டிலும், சிவகங்கை சமஸ்தான வித்துவான் ஸ்ரீமான் வில்லியப்பன் அவர்கள் பாடிய "திருமுக விலாசம்" என்னும் நூலில் எளிய நடையில், மிக அழகாகக் கூறியுள்ளார். அதிற் சிலவற்றை இங்குக் காட்டுகிறேன்.—

தட்டான் ஒருவன், பிறர் நகை செய்வதற்காகக் கொடுத்திருந்த பொன்னைச் செலவு செய்து, தன் மனைவி மக்களுக்கு வேண்டிய துணி மணிகள் வாங்கிக் கொடுத்து மகிழ்வதை, அவனுடைய

—"கிழம்படுதாய்

சாடையிலே பார்த்து மகன் தன்பால் நெருங்கி, இந்த
வாடையிலே நான் கிடந்து வாடையிலே—லேடி யவள்

அஞ்சனமைக் காரி அதி பசப்புக் காரி மகா
பஞ்சரிப்புக் காரி பயில்க்காரி—வஞ்சி அந்த

நாச்சியாளுக்கு மட்டும் நல்கினையே நான் இருக்குங்
காட்சியை நீ கண்ணாரக் காணிலையே—வாய்ச்ச நெடுங்

காலமகவு இல்லாமல் கன்றி உனது அத்தனொடு
சாலவும் யான் ஏகித் தலங்கள் சுற்றி—மேலெனவுங்

கண்ட கண்ட கோவிலுக்குக் காணிக்கைகள் செலுத்தி
அண்டரிய தீர்த்தங்கள் ஆடி வந்தும்—தொண்டர்களாம்

ஆண்டி பரதேசிகளுக்கு அன்னம் படைத்து மிக
நீண்ட அரசுக்கு நிதம் நீர் வார்த்தும்—தேண்டரிய

தீக்ஷை உபதேசம் உற்றும், சேனை விரதம் புரிந்தும்
ஊக்கரிய கர்ப்பம் உறலானேன்—ஆக்கையினில்

பச்சை நரம்பு எய்த மதிபத்துஞ் சுமந்து நிறைந்து
ஒச்ச மறப் பெற்றேன் உனை..................

..............................................நீ
எண்ணுஞ் சிறு பருவத்தே நன்மண முடித்து
கண்ணால் களித்துக் கதி பெறுவான்—எண்ணி எண்ணி

எத்தனையோ பெண் அமைந்தும் என் உளம் ஒப்பாமலும் சொந்-
-தத்தில் இவள் ஞாத்தி மகள் ஆதலால்—மொத்தை இரு

நான்கு வருடம் சமைந்து நாற்றம் எடுத்துக் கிடந்தாள்
நீங்கரிய மூளி நிறங்கெட்டாள்—யான் கருத்துற்று

அன்னே! பெண் பாவம்! இவட்கு ஆகாரம் வேறில்லை, நம்
சொன்னபடி கேட்கும், சுகிர்தம் உண்டாம்— .......பெண்ணீர்

அணைகடந்த நீலிக்கு அழகில்லா தேனும்
குணமிருந்தால் போதுமெனக் கோரித்—துணிபுறவே

வேணுமென்று கொண்டுவந்த வெங்கஞ் சிறுக்கி மகன்
ஆணவமாய் என்னை அவமதித்தான்...............

..............................................தீயர்களும்
ஏச இடங் கொடுத்தாய், என் செய்வாய்? யானும் அதைப்
பேசுவதில் என்ன பெறப்போறேன்—பீசில் உனக்கு

ஆறு மூளந் தான் பெரிதோ? அப்பா! நீ நல்கில் எனக்கு
ஆறும் உளம் தானென்றான்; ஆங்கெழுந்து—சீறி ஒரு

## மாமி மருமகள் சண்டை.

வன்புலிபோல் பாய்ந்து மருமகள் தன் மாமிமுன் நின்று,
என் புகன்றாய்? இன்னம் இயம்புவாய்—முன்னம் இரு

நாலு வருடஞ் சமைந்து நாற்றமெடுத்தாள் என்றும்
மேல் அழகில்லா மூளிவேசை என்றும்—ஞாலமதில்

சீந்துவார் அற்றுத் திரிந்தவளைக் கொண்டு வந்து
வாய்ந்த நடுமனையில் வைத்தன் என்றும்—காந்தனிடம்

சொல்லிப் பரிசளித்த தோஷிக் குரங்கே! உன்
பல்லைப் பிடுங்க ஒரு பல் இலையே—...............

..............................................பங்க முற்ற
வெங்கங் கழுதாய்! விருதா வெறுங் * கழுதாய்!
எங்கெங்கு அழுதாய்? இரப்புணியே!—பொங்கும் பால்

ஊட்டி வளர்த்தாலும் உயிர் தீர் விடம் அளிக்கும்
மோட்டு அரவை ஒத்த முழு நீலி!—நாட்டில் உனை

* கழுது=பிசாசு.



நல்லவர் என்று ஆர் சொல்வார்? நாறச் சவமே! உன்
சில்வானையப் பேர்த்துத் திருப்பட்டா?—வல் இருளில்

பூசல் இடும் பேய்க்கணமே! போழ்வாய்க் கிழட்டு ஓரி!
பேசுவதைப் பாரப்பா! பெப்பெப்பே!—நாசுபட்ட

வாரு கோலால் உடலை வாட்டி யெடுப்பேன் உனக்கு இங்கு
ஆர் சலிகை சொல்வார்? அறையிறேன்—பார்" எனவே

காறி உமிழ்ந்தாள்; இவளும் காறி உமிழ்ந்தாள்; மருகி
தூறி இறைந்தாள்; இவளும் தூறினாள்—மீறி

இடித்தாள் மருமகள்; அங்கு எண்டெழுந்து மாமி
கடித்தாள் ஒரு கரத்தில் கௌவித்,—துடித்து அவளும்

பற்றி மயிரைப் பிடித்தாள், பாழ்ங்கிழவி வௌவால்போல்
தொற்றி மயிரைப் பிடித்துத் தொங்கினாள்—சிற்றிடையில்

துத்தாரிப் பட்டுமெல்ல சோர்ந்து நழுவியந்த
வித்தாரி கால்சறுக்கி வீழ்ந்திட்டாள்—அத்தருணம்

மாலேறிக் கொண்ட மருமகளைப் போட்டமுக்கி
மேலேறிக் கொண்டாள் விசைக்கிழவி—கோலிய மூ-

தாட்டி யானாலும் தயங்கு சமயத்தில் நல்ல
வேட்டை வந்து சாய்த்தால் விடுவாளோ?".

* * *

கைலாயமாகவும், வைகுந்தமாகவும் விளங்கி வந்த ஒவ்வொரு வீடும் இவ்வாறு சீர்கெட்டு நொந்தால் நமக்குதான் நன்மை யுண்டா? அல்லது நம் நாட்டிற்காவது நற்பெயர் உண்டா? இல்லறம் இனிது நடைபெறுவதற்கு உதாரணமாக "இராமாவதாரத்தை"ப் பாருங்கள்! இராமபிரான் காட்டிற்குச் செல்வதற்காகத் தன் தந்தையின் அநுமதி கோரி, அவரை அடைந்த பொழுது, "என் அப்பா! ராமச்சந்திரா! என்று கூறி, தன் அருமருந்தன்ன மகனைப் பிரிய நேருந் துக்கத்தால் அதற்கு மேல் ஒன்றும் பேச முடியாது மூர்ச்சையானார்—என்றால் தந்தைக்கும் தனயனுக்கும் உள்ள விசுவாசத்தையும், அன்பையும் என்னென்று கூறுவது? "எனது நாயகன் இருக்கும் இடம் எதுவாயினும், அது அயோத்தி; ஆகையால் சென்றுவர எனக்கும் உத்திரவு தாருங்கள்" என்று சீதாபிராட்டியார் தனது மாமி கோசலா தேவியின் திருவடிகளில் வீழ்ந்து அநுமதி கேட்கையில், அவ்வம்மையார் தனது மருமகளை வாரி யெடுத்து மார்புறத் தழுவி, "எனது அருமைக் கண்மணி! துன்பம் என்னும் சொல்லையுங் கேட்டிராத செல்வமே! கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில், பூவினும் மெதுவான உனது பாதம் வருந்த எவ்வாறு நடப்பாய்? இதை என்னால் சகிக்க முடியாது; நீ மட்டுமாவது என்னுடன் இருந்தால் இராமனைப் பிரிதலால் வருந் துயரை ஒருவாறு மறப்பேன்; நீ போகவேண்டாம்" என்று கூறிக் "கோ" என்று புலம்புங் காட்-

சியை, ஒவ்வொரு நண்பரும் தத்தம் மனதில் உருவகப்படுத்திக்கொள்ள வேண்டுமே யன்றி எழுத்தால் எழுத இயலாது. "இராமனே தந்தை; பிராட்டியே எனது தாயார்" என்றுகூறி அவர்கள் எங்கு சென்றாலும் விடாது நிழலைப்போல் பின் தொடர்ந்து சென்ற "இராமாநுஜ"னின் சகோதர வாத்ஸல்யம் என்னே! "இராமண்ணாவுக்கு இல்லாத ராஜ்யமா எனக்கு? நன்று! நன்று! அவர் எங்கே இருப்பினும் அழைத்து வந்து முடி சூட்டாத வரை, நான் இந்த அயோத்தியில் கால் வையேன்" என்று மனம் வெறுத்துப் பேசி, "ராகவா! ராகவா!" என்று அழைத்துக்கொண்டே காட்டை நோக்கி ஓடிய பரதாழ்வானைக் காட்டிலும் சிறந்த சகோதர லக்ஷணம் யாரிடத்தில் நாம் கற்க முடியும்?

ஒவ்வொரு குடும்பமும் இவ்வாறு அன்பும், ஆதரவும் பெருகி ஒற்றுமையோடு வாழ்ந்துவரின்; இரவு பகல் என்பதில்லாது, சதா இன்பமாய்த் திகழும் இந்திர உலகந்தான் பெரிதா? சிருஷ்டி கர்த்தாவாகிய நான்முகனார் வாழும் பிரம உலகந்தான் வேண்டற்பாலதா? அல்லது, என்றும் அழியாத, இன்ன தன்மையதென்று சொல்ல முடியாத, ஒரு உலகம் என்பார்களே—பரமபதம், அதுதான் இனிக்குமா?

"அறத்து ஆற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்து ஆற்றில்
போய் பெறுவது எவன்?" (தமிழ் வேதம்)

பெ. இராமாநுஜ ரெட்டியார்.

## தம்பிக்கு ஒரு புத்திமதி.

குழந்தாய்! நீ அக்காவோடு சண்டை போடுகிறாய் அது சரியா? அக்கா வராவிட்டால் நீ ஒண்டியாக அல்லவா இருக்கவேணும். உன் விளையாட்டுக்கு அக்கா எவ்வளவு துணையா யிருக்கிறாள்? அப்படி உன்னோடு இரவும் பகலுமாய் யார் உன் கூடவே இருப்பார்கள்? ஆகையால் அக்கா இடம் பிரியமாயிரு; அக்கா ஏதாவது கேட்டால் தரமாட்டேன் என்று சொல்லாதே. பிரியத்தோடு இந்தா அக்கா என்று கொடு; அக்காவை சந்தோஷப்படுத்தினால் நீயும் சந்தோஷப்படுவாம்; நாளைக்கு அக்கா தான் உனக்குப் பெரிய துணை.

சுறுசுறுப்புள்ளவனாயினும் தனக்கு இஷ்டமில்லாத வேலையில் இது முடியுமோ வென்று வெறுக்கிறான். சோம்பலும் கொட்டாவியும் அவன் முன் கூத்தாடுகின்றது.

கெட்டவனாயினும் பழக்கமான அவன் பிரிந்து விட்டால் மனவருத்தமாகத்தான் இருக்கிறது. அவன் நடத்தை கெட்டதே தவிர, அவன் காட்டிய அன்போ உண்மையான அன்பு.




ஹரித்துவார் மங்கலம் ராஜாளியார் அவர்கள் தமது அழகிய இல்லத்தில், ஸ்ரீமான் ஸ்ரீனிவாசன் அவர்கட்கு சௌபாக்கியவதி—மீனாம்பாளைக் கன்னிகாதானம் செய்து வைத்து, அவளுடைய செல்வ முழுவதையும் அவனுக்கே உரிமையாக்கினர்.

* * *

ராஜாளியார் அவர்கள் ஆதரவினாலே, கலிகாலக் கர்ணனாகிய ஆண்டிப்பட்டி ஜமீன்தார் பெத்தாச்சி செட்டியார் அவர்கள், பூண்டி - வாண்டையார், உக்கடைத் தேவர், பாப்பாநாட்டு ஜமீன்தார் ஆகிய இப்பெரியோர்களின் அருளும் பொருள் துணையும், செல்வாக்கும் கொண்டு தஞ்சையில் 'தமிழ்ச் சங்கம்' ஒன்று மதுரைத் 'தமிழ்ச் சங்கத்'துக்கு அடுத்தபடியாகத் தோற்றுவித்தார் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசன். அதனில் நூற்றுக்கணக்கான ஏழை மாணவர்களுக்கு உண்டி, உடை, இடம் கொடுத்து உதவித் தமிழ் மொழிபயிற்றுவித்தும்; இதுகாறும் வெளிவராத பழைய தமிழ்ச் சுவடிகளை அச்சிடுவித்தும்; நம் தமிழ் பாஷைக்கு நூதனமான பிறமொழிப் புத்தகங்களை மொழிபெயர்த்து உதவியும் இவ்வாறு தமிழ்த் தாய்க்குச் சேவை செய்து வந்தனர் மீனாம்பாளும், அவளுடைய செல்வக் காதலனும்.

* * *

நமது நாகரிகச் செல்வராகிய துரைதாசரின் "காதற்சுவை" வாவாக் கசப்பேறத் தொடங்கியது. சர்க்கார் வேலைகளிலும், உலக வியவகாரங்களிலும் ஈடுபட்டு உழைத்து, அதனால் அலுப்புற்று வீட்டிற்குவரும் பொழுதெல்லாம், தனது ஆசைக் காதலியின், அருமை மனைவியின் அழகிய முகார விந்தத்தைப் பார்ப்பதற்குப் பதிலாக, வெண்மையும், சிவப்பும், கருமையுங் கலந்த, தாடி மீசைகள் நிறைந்த தனது வேலையாட்களின் முகங்களே தென்படும். நமது துரைதாசரைக் காட்டிலும் அதிக வேலையில் ஈடுபட்டு வந்தார் மிஸஸ் சுந்தரம் அவர்கள். அவர் சென்னை பெண்கள் சபையின் உபதலைவர்; குழந்தைகள் பாதுகாப்புச் சபையின் காரியதரிசி; கனம்-பச்சையப்ப முதலியார் தர்மஸ்தாபன நிதியின் 'டிரஸ்டி'; நகர பரிபாலன சபையில் ஒருமெம்பர். சென்னைச் சட்டசபைக்கும் அவர் ஒரு 'அபேக்ஷக'ராக நின்றதில், பாழும் ஆடவர்களின் போட்டியால் தோல்வி பெற நேர்ந்தது; ஆனாலும், அவரா விடுபவர்? 'கௌன்சில்' நடைபெறும் பொழுது, "பார்வையிடுவோ"ராகவாவது சென்று அமர்ந்து கொள்வார். அவர் ஆஜராகாத எத்தகைய கூட்டமும் சென்னையில் கிடையாது. காலை

யில் காங்கரஸ் 'மீட்டிங்க்,' நடுப்பகல் ஜஸ்டிஸ் கூட்டம், பிற்பகல் மிதவாதிகள் சபை, மாலையில் பெண்கள் மகாநாடு, இரவு லேடி—"இசட்"டிற்கு நடக்கும் விருந்து; இவ்வாறாகத் தமது வாழ்நாளைப் "பொது நலத்"திற்கு அர்ப்பணம் செய்து வந்தார் மிஸஸ்-சுந்தரம் அவர்கள். "ஐயோ! 'பிரசவம்' என்னும் பெரிய வேதனையைப் பெண்களுக்குமட்டும் எதற்காக வைத்தான் அந்தப் பாழும் ஆண்டவன்? அதனால் மாதர்கள் பல நாட்கள் (மாதங்கள் என்று மயங்கவேண்டாம்.) வீட்டிலேயே தங்க நேரிடுகிறதே" என்று கடவுளையும் சபிப்பர்.

* * *

ஒருநாள் துரைதாசர் "மோடாரி"ல் சவாரி போய்க்கொண்டிருந்த பொழுது, 'வெறி' கொண்ட குதிரை வண்டியொன்று தலைகால் தெரியாமல் ஓடிவந்து அவருடைய "காரி"ல் முட்டிக்கொண்டது: அதனால் காரின் முன்புறமுள்ள கண்ணாடி தூளாய் விட்டது. ஒரு கண்ணாடித் துண்டு துரைதாசரின் இடது காதிற் பாய்ந்து இரத்தம் வருமாறு செய்துவிட்டது. குதிரை வண்டியின் 'வர்கால்' முறிந்ததோடு, ஏழை வண்டியோட்டிக்கும் பலமான காயம் ஏற்பட்டது. அதனால், ஆயாசமும், ஆத்திரமும் அடைந்த துரைதாசர் சமீபத்தில் நின்ற 'போலீஸ்'காரனை அழைத்து, வண்டிக்காரனைக் கைது செய்யுமாறு உத்திரவிட்டு; தமது பங்களாவிற்குச் சென்றுவிட்டார். அவரோ 'அட்வொகேட் ஜெனரல்.' அவர் மாமனார் போலீஸ் இலாகாத் தலைவர்; அந்த ஏழை வண்டிக்காரன் கதியை நாம் சொல்லவும் வேண்டுமா? தன் வண்டி சேதமாகி, தனக்குப் படுகாயம் ஏற்பட்டதோடு நில்லாது, ஐம்பது ரூபாய் அபராதமும் செலுத்தி வீடு சேர்ந்தான். அன்றன்று அவன் சம்பாதித்து வரும் பணத்தைக் கொண்டுதான் அவனுடைய மனைவி மக்கள் வயிறு வளர்க்க வேண்டும்; அதோடு மீதியும் பிடிக்கவேண்டும். அத்தகையவன் ஐம்பது ரூபாய் அபராதம் செலுத்த நேர்ந்ததற்கு நேயர்கள் தான் 'தீர்ப்பு'க் கூற வேண்டும். அந்தோ! இது பணக்காரர்களின் காலம்!

* * *

துரைதாசர் வீட்டிற்குச் சென்றதும், அவருடைய காதலி விஷயமறிந்து, "அந்த வண்டிக்கார நாயைச் சும்மாவா விட்டீர்கள்?" என்று கர்ஜித்துவிட்டு, அன்று லேடி—"ஜான்கிர்ர்"ருக்கு நடக்கும் விருந்து வைபத்திற்குப் போய்விட்டார். "பொதுஜன சேவை" முக்கியமே யன்றி புருஷன் முக்கியமல்ல; அதற்கெல்லாம் வேலைக்கார நாய்கள் இருக்கின்றன" என்பது அவ்வம்மையாரின் நினைவு போலும்! துரைதாசரின் மனம் தாமரை யிலையில் நீர்த்துளியைப் போல் தத்தளிக்கிறது. அன்றாவது தன் மனைவி தன் பக்கத்திலிருந்து உபசரிப்பாள்; அன்புரையாடுவாள்; அதனால் கையின் வலியை ஒருவாறு மறந்திருக்கலாம், என்று நினைத்திருந்த அவர் பெரிதும் ஏமாற்றமடைந்தார்.

* * *

"எனது ஆருயிர்த் தோழன்; அன்பு நிறைந்த சகோதரன் அப்பொழுது கூறிய மொழிகளைச் சிறிதாவது சிந்தித்துப் பார்த்தேனா? அந்தோ! எனது அருமைத் தாய்தந்தையர்—என்னைப் பெற்று வளர்த்து, எவ்வித துன்பமும் நேராது பாதுகாத்த, என் கண்கண்ட தெய்வங்களாகிய தாய்தந்தையர் நிலைமை எவ்வாறாயிற்றோ? மீனாம்பாள்—செல்வ மீனாம்பாள்! உன் கதி என்ன? யாரையாவது மணந்து கொண்டாயா? முன்பு போலவே கன்னியாக இருக்கின்றாயா? அங்ஙனமானால், 'தலைகிறுக்கு' கொண்டலைந்த இந்த ஏழையை ஏற்றுக்கொள்வாயா? ஏதேது! நீ ஒருப்பட்டாலும் இந்தக் கொடிய மனமுள்ள இந்துக்கள், ஈவு இரக்கமில்லாத இந்துக்கள் சம்மதியார்கள்; நான் கிறிஸ்தவன் ஆனேனே! ஈசா! என்னை யேன் இப்படியெல்லாம் ஆட்டி வைக்கிறாய்?" என்று நினையாதவெல்லாம் நினைத்து, முகத்தைத் துணியால் மறைத்துக் கொண்டு கண்ணீர் பெருக்கினார் துரைதாசர். அவரை ஆற்றுவார் யார்? தேற்றுவார் யார்? சென்னையில் உள்ள பெரிய மனிதர்கள், அதிகாரிகள் யாவருந்தான் வந்து அவரைப் பார்த்துவிட்டுப் போகிறார்கள். அவையெல்லாம் அவருக்கு ஆறுதல் அளிக்குமா? வீட்டுச் சேவகன் அன்று தபாலில் வந்த கடிதங்களை யெல்லாம் கொண்டு வந்து மேஜையின் மீது வைத்தான். துரைதாசர் அவற்றை யெல்லாம் பார்வையிட்டார். அவற்றுள் அச்சடித்த 'தமிழ்க் கடிதம்' ஒன்றைக் கண்டதும் அவர் முகம் சிறிது தெளிவு பெற்றது. யாரிடத்தும் ஒன்றுங் கூறாது, துணைக்கு ஒருவரையும் அழையாது, வீதியில் சென்று கொண்டிருந்த ஓர் ஜட்காவண்டியைக் கூப்பிட்டு, அதில் ஏறிச் சென்றார் நமது நாகரிக புருஷர்.

* * *

தஞ்சையில் "ராஜா சத்திரத்தி"ல் தஞ்சைத் தமிழ்ச் சங்கத்தின் முதலாவது வருட பூர்த்திக் கொண்டாட்டம், சென்னைச் சட்டசபைத் தலைவர், திவான்பகதூர், எல். எல். டி. சுவாமிகண்ணு பிள்ளை அவர்களின் தலைமையில், முதல் நாள் கூட்டங் கூடியது. எண்ணிறந்த தமிழ் அறிஞர்கள், அபிமானிகள் யாவரும் விஜயம் செய்திருந்தனர். அவருள் நமக்கு அறிமுகமான துரைதாசரும் ஒருவர். தன் மனைவியின்மீது வெறுப்புக்கொண்டு கவலையுற்றிருந்த அன்று, துரைதாசர் "அச்சடித்த தமிழ்க் கடிதம் ஒன்று கண்டார்" என முன்பு கூறினோமல்லவா?

* * *

அது இத்தமிழ்ச் சங்கத்தின் முதலாவது வருட நிறைவிழாவின் அழைப்புக் கடிதமே. அதைக் கண்டதும், பெற்றோரைத் தரிசிக்கலாம், பிறந்த ஊரைப் பார்க்கலாம், தோழனோடு குலாவலாம், தனது பிற்கால வாழ்வை எவ்வாறு கழிப்பது என்பதைப்பற்றி ஆராயலாம் என்ற நினைவுகொண்டே உடனே தஞ்சைக்குப் புறப்பட்டார். தன் மனைவி தன்னைப்பற்றி என்ன நினைக்கிறாள் என்பதை அறியும் பொருட்டு யாரிடத்தும் ஒன்றுங்கூறாது வந்தார்.

* * *

தமிழ் அறிஞர்கள் ஒவ்வொருவரும் தமது நாவன்மையைக் காட்டிப் 'பிரசங்கம்' புரிந்தனர். இறுதியாக சபைத்தலைவரவர்கள் எழுந்து, "நம் நாட்டில் பொருள் குவிக்கவேண்டுமென்னும் விருப்பம் இல்லாதவர்கள் ஒருவருமில்லை; அங்ஙனமே அநேகர் பெரிய செல்வவான்களாகவும் விளங்குகின்றனர்; ஆனால், அவர்கள் தம்முடைய பொருளை எங்ஙனம் பயன்படுத்துவது? எவ்வழியில் செலவு செய்வது? என்பதை அறியாதிருக்கிறார்கள். தமிழ்த் தாயின் தவப் புதல்வரும், பாலவனத்தம் ஜமீன்

தாரும் ஆகிய ஸ்ரீமான் - பாண்டித் துரைசாமித் தேவரவர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கம் ஒன்று நிலைநாட்டி, முதலில் அதற்கு வழிகாட்டினார்கள்; இப்பொழுது செல்வச் சீனிவாசன் அவர்கள் வழிகாட்டி யிருக்கிறார்கள்; அவரும் அவர் மனைவி மீனம்பாளும் செய்துவரும் தொண்டினை, தமிழ் நாடு என்றும் மறவாது போற்றக் கடமைப் பட்டுளது." என்று கூறி முடித்தார்.

(தொடரும்.)

பெ. இராமாநுஜ செட்டியார்.

# சென்ற மாதம்

**ஓர் உத்தமியின் பதி பக்தி.**

பாடலீபுரத்திலுள்ள கிராமமொன்றில் 18,19 பிராயமுள்ள பிராமண குலத்துப் பெண் மசானத்தில் தன் கணவனுடன் படுத்து உடன்கட்டை யேற விரும்பினாள். தெய்வச்செயலால் தீ தானே தோன்றிப் பற்றிக்கொண்டு பாதி எரிந்து போனாள். பின் வேதனை தாளாது கணவனது சவத்துடன் கங்கையில் விழுந்தாள். போலீஸார் நதியினின்றும் அப்பெண்ணைக் கரையேற்றி, சிறையில் வைத்தனராயினும் அங்கு அவ்வுத்தமியின் ஆவி பிரிந்துவிட்டது. எவரும் வற்புறுத்தாது நிகழ்ந்த சம்பவம் இது. என்னே கற்பரசியின் மாண்பு!

***

**புனர் விவாக புண்ணியம்**

நவம்பர்மீ 17-ம் தேதியன்று எல்லூரில் கன்னிகா விதந்துவாய்க் கண்ணீருடனும் நின்ற ருக்மணி என்ற யுவதிக்குப் புனர் விவாகம் நடந்தேறியது. ஸ்ரீமான் ஆதிநாராயண செட்டியார் அதைப் பற்றிப் பின்வருமாறு வர்ணிக்கின்றார்:—"ருக்மணி விலையுயர்ந்த நகைகளையும், சரிகை வேலைப்பாடுடன் கூடிய மஞ்சள் நிறமான மணப் புடவையையும் அணிந்து மணப் பலகையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டு,—'தங்களுடைய வீட்டில் வருத்தமே உருவாக வளர்ந்து வந்த பெண்ணோ" என்று சந்தேகிக்கவும் நேரிட்டது. ருக்மணியின் தோற்றமும் அவ்வளவு அதிசயமாக மாறிவிட்டது. மாலையில் ஊர்வலம் நடந்தது. ஊர்வலத்தில் சாரட்டில் தன் கழுத்தில் தாங்க மாட்டாமல் மாலைகளையணிந்து, அதே ஸ்திதியிலிருக்கும் தன்வாழ்க்கைத் துணைவனுடன் தலை குனிந்து உட்கார்ந்து கொண்டே,—தனது திருமணத்தை அங்கீகரிப்பதாக — வீட்டு வாயில்களில் நின்று கொண்டு ஊர்வலத்தைப் பார்த்தபடியே — இதர பெண்கள் கூறும் கூற்றைக் கேட்கும் ருக்மணி மனதில்,—எத்தகைய (இன்ப) எண்ணங்கள் தோன்றக் கூடுமென்பதை வாசகர்கள் சொல்ல முடியுமா?" என்கிறார். இவ்வர்ணனை எவர் மனத்தையும் இரக்க சிந்தையுடன் பூரித்திடச் செய்யுமன்றோ?



**தக்ஷிண ஆந்திர க்ஷத்திரிய இராஜாக்கள் மகாநாடு.**

ஸ்ரீரங்கத்தில் 11—12—27-ல் கூடிய தக்ஷிண ஆந்திர க்ஷத்திரிய இராஜாக்கள் மகாநாட்டில் அக்ராஸனம் வகித்த ராவ் பகதூர் ஸ்ரீமான் ஜே. செல்வரங்க ராஜூகாரு தமது தலைமைப் பிரசங்கத்தில், இராஜாக்கள் விஜயநகர ராஜ்யத்திலிருந்தும் இங்கு வந்து குடியேறிய க்ஷத்திரியர்களென்றும், தனிச்சங்கங்கள் ஸமூக நன்மையை வளர்ப்பனவாகுமென்றும், பிராமணத்துவேசம் பயனற்றதென்றும், உத்தியோகக் கல்வியை நாடாது, கைத்தொழில் விவசாயக் கல்வி பயிலுவிப்பதே மேலென்றும், அதற்கான பள்ளிக்கூடங்கள் தோன்றவேண்டுமென்றும், சட்டசபைப் பிரதிநிதி யாவதான வீண் தடபுடல்களை யொழித்து விட்டு அதற்கு ஆகும் தன விரயத்தை ஸமூக முன்னேற்றத்திற்கு உதவும்படியும், மதுபானம் கூடாதென்றும், ஒரு நாள் விவாகமே சிலாக்கியமென்றும், இன்னும் பல விஷயங்களையும் குறிப்பிட்டுப் பேசினார். ராஜூக்கள் ஸமூகத்திற்கு மட்டுமல்ல, பொதுவாக எல்லா ஸமூகத்தினருக்கும் இந்த போதனைகள் பயன்படத்தக்கனவாகும்.

***

மதராஜ் ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் சதாசிவ ஐயரவர்களும், ஸ்ரீமான் ஸர். பி. இராஜகோபாலாச்சாரியார் அவர்களும் காலமாய் விட்டமைக்கு வருந்துகிறோம். பழம்பெரியோர்கள் மறைந்து கொண்டே வருகின்றனர்.

***

இந்திய அரசியல் கமிஷனில் ஒரு இந்தியப் பிரதிநிதிகூட இல்லாதது இந்தியாவுக்கு நல்ல விழிப்பையும், ஒரு தெய்வீக எழுப்புதலையும் தரவல்லது. 'எதுவும் நன்மைக்கே' என்பது பெரிய சித்தாந்தம்.

***

ஆதி திராவிடர் ஹிந்துக்களே யென்று ஹைகோர்ட்டில் தீர்ப்பான பின்னர் சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் ஆதி திராவிடர்களைச் சேர்த்துக்கொள்ளத் தீர்மானமானது. அவர்கள் ஹிந்துக்களல்லாது வேறென்ன? இதற்கு ஒரு "தீர்ப்பு" கூட வேண்டுமோ?

# பெரியாரின் மொழிகள்

(349-ம் பக்கத் தொடர்ச்சி.)

The man who fears nothing is as powerful as he who is feared by everybody. SCHILLER.

ஒன்றுக்கும் அஞ்சாத மனிதன் எல்லோரும் கண்டு பயப்படக்கூடியவனைப்போல அவ்வளவு பலவானாக இருக்கிறான். சில்லர்.

Come what come may, Time and the hour runs through the roughest day. SHAKESPEARE.

வருவதெல்லாம் வரட்டும்; கடுமையான நாட்களிலும் நேரமும் மணியும் போய்க்கொண்டே இருக்கிறது. ஷேக்ஸ்பியர்.

Why, what's the matter, That you have such a February face, So full of frost, of storm and cloudiness? SHAKESPEARE.

உறைபனியாலும், புயலினாலும், மேகங்களினாலும் நிறைந்திருக்கும் பிப்ரவரி மாதத் தோற்றத்தைப்போல உனது முகம் இருப்பதற்குக் காரணமென்ன? ஷேக்ஸ்பியர்.

Silence is the perfectes herald of joy: I were but little happy if I could say how much. SHAKESPEARE.

மௌனம் சந்தோஷத்தின் பூரணமான அறிகுறி. நான் எவ்வளவு சந்தோஷப் படுகிறேன் என்று வாயால் சொல்லக்கூடுமானால், நான் கொஞ்சம் சந்தோஷம்தான் உள்ளவன். —ஷேக்ஸ்பியர்

Better a little chiding than a great deal of heartbreak.

SHAKESPEARE.

ஹிருதயம் பிளக்கும்படியாய்ச் சொல்வதை விட, ஜாடையாய்க் கொஞ்சம் வைதல் மேலானது.

—ஷேக்ஸ்பியர்

Errors, like straws, upou the surface blow,
He who would search for pearls, must dive below.

DRYDEN.

குற்றங்கள் வைக்கோல் துரும்புகளைப்போல் மேலே வீசுகின்றன. முத்துகளைத் தேட விரும்புவோன் அதிக ஆழத்தில் முழுகவேண்டும்.

—ட்ரைடன்.

It is not so much the being exempt from faults, as the having overcome them, that is an advantage to us.

ALEXANDER POPE.

குற்றமில்லாததைக் காட்டிலும், குற்றங்களை ஜெயித்து வருவதுதான் நல்லது.

—அலெக்ஸாண்டர் போப்

P. E. பாஷியம் நாயுடு.

## ஆங்கில—தமிழ்க் கடிதங்கள்

(All Rights Reserved.)

### Letter VIII

**The Father's Answer.**

*My dear Child,*

My reason for not sending to you sooner was, that I had been on a journey to your uncle at Lalgudy, where I was detained longer than I expected, and consequently did not see your letter till last night. I have convinced that it is altogether reasonable: You are greatly mistaken if you think that I wanted to confine you tothe small matter paid by Mr. Thumbusamy Chettiar: no; it was indeed inadvertency; but my constant residence in the country makes me little acquainted with the customs of Calcutta. I don't desire to confine you to any particular sum; You are now arrived at an age, when it becomes absolutely necessary for you to be well acquainted with the value of money, your profession likewish requires it; and it is well known, that prudence and sobriety in youth, naturally lead to regularity of conduct in more advanced years. Virtue insures respect, and as I well know that all manner of precepts are useless where the inclinations are vicious, I have left the affair, mentioned in your letter, entirely to your own discrition; and, as the enclosed order is unlimited, I doubt not prudence will direct you how to proceed.

*Ranga Raju.*

### 8-ம் கடிதம்

**அந்தத் தந்தையின் பதில்.**

எனது அன்புள்ள குழந்தாய்,

நான் உனக்கு அதிக சீக்கிரத்தில் பதில் அனுப்பாதிருந்ததற்குக் காரணம், லால்குடி என்னும் ஊரிலிருக்கும் உன் சிறிய தகப்பனாரிடத்துக்குப் பிரயாணம் போய் நான் நினைத்ததற்கு அதிகமாய் அங்கே தங்கிவிட்டதால் உன் கடிதத்தை இராத்திரி வரையில் பாராதிருந்ததே தான். நீ கேட்டுக் கொண்டதை ஆலோசித்துப் பார்க்குமளவில் அது முழுவதும் நியாயமாகவே எனக்குத் தோற்றப்பட்டது. தம்புசாமி செட்டியார் கொடுத்து வரும் சொற்ப பணத்துக்குள் உன் செலவை அடக்க நான் எண்ணியதாக நீ நினைப்பாயாகில் மிகவும் மோசம் போகிறாய். அப்படியல்ல. (உனக்கு அதிகமாய் நடப்பிக்க நான் எழுதாமற் போனது) உள்ளபடி மறதியினாலே தான். ஆனால், நான் எப்போதும் நாட்டிலே வாசம் செய்வதால் கல்கத்தாவின் வழக்கங்கள் எனக்குத் தெரியாது. உன் செலவுக்கு இவ்வளவு என்று வரை ஏற்படுத்தும் மனம் எனக்கு இல்லை. பணத்தின் அருமையை அகத்தியம் நீ நன்றாய் அறியத்தக்க வயது இப்போது உனக்கு வந்திருப்பதுமன்றி உன் தொழிலைப்பற்றியும் நீ அதை அறிந்தே இருக்கவேண்டும். இளமையிலே விவேகமும் சீரும் உண்டானால், முதுமையிலே இயல்பாகக் கிரமத்துடன் நடக்கலாமென்பது நன்றாய்த் தெரிந்திருக்கின்றது. நன்னடக்கை பெருமையைக் காக்கும். மன இச்சை கெட்டதாய் இருந்தால், எவ்வகைப் புத்தியும் உதவாதென்று எனக்கு நன்றாய்த் தெரிந்திருப்பதால், உன் கடிதத்தில் கண்டிருக்கும் காரியத்தை முழுதும் உன் இஷ்டப்படி விட்டிருக்கிறேன். இதனுள் அடக்கம் பண்ணியிருக்கும் உண்டியலில் (நீ கேட்டமட்டும் கொடுக்கும்படி எழுதியிருப்பதால்,) நடக்கவேண்டிய வகையை விவேகம் உனக்குத் தெரிவிக்குமென்பதற்கு நான் சந்தேகப்படவில்லை.

இங்ஙனம்

ரங்க ராஜு.

# சென்றுபோன நாட்கள்

த்விஜேந்திர லால் ராய்.

1864—1913

நமது பாரத நாட்டில் தற்சமயம் மிகவும் உயர்ந்த பாஷை வங்காளி. அதன் சிறந்த நாவலாசிரியர் ராய் பகதூர் பங்கிம் சந்திர சட்டர்ஜி. சிறந்த மகாகவி மைகேல் மதுசூதன தத்தர். பிரபல வித்வான் ஸர் ரவீந்திரநாத டாகூர். சிறந்த நாடகாசிரியர் துவிஜேந்திரலால் ராய். இம்மாதம் த்விஜேந்திர லாலைப்பற்றி எழுதுவோம்.

இவர் 1814-ம் வருடம் கிருஷ்ண நகரில் பிறந்தவர். பிதாவின் பெயர் கார்த்திகேய சந்திர ராய். மாதாவின் பெயர் பிரசன்னமயி தேவி. கார்த்திகேய சந்திரர் கிருஷ்ண நகர ராஜனிடம் திவானாயிருந்தவர். மிகவும் நல்லொழுக்க முடையவர். அவர் மனைவியும் பர்த்தாவிற் கேற்ற பதிவிரதையா யிருந்தாள். த்விஜேந்திரருடன் கூடப் பிறந்தவர் எண்வர். த்விஜேந்திரர் தமது பிதாவின் ஐந்தாவது மைந்தர். இவர் குழந்தைப் பருவமுதல் மரணபர்யந்தம் வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தார்.

குழந்தைப் பருவமுதலே படிப்பில் மிகவும் கவனம் செலுத்தி வந்தார். தமது 12-வது வயது முதல் வங்காளி பாஷையில் பாக்களும் புனைய ஆரம்பித்தார். சங்கீதப் பிரியர். குரலும் அதற்குத் தகுந்தாற்போல் இனிமையா யிருந்தது. இவர் காலத்தில்தான் பிரசித்த ஆசார சீர்திருத்தக்காரரான ஈஸ்வர சந்திர வித்யாசாகரரும், வங்காள சாஹித்ய சந்திரரான பங்கிம் சந்திரரும், நாட்ய குருவான தீனபந்து மித்திரரும், கவீஸ்வரர் நவீன சந்திர சேனரும், கவிசம்ராட் ரவீந்திரநாத டாகூரும் இருந்தனர். இவர் களனைவரும் கார்த்திகேய சந்திரரின் வீட்டிற்கு வருவது வழக்கமாகையால் த்விஜேந்திரருக்கும் இவர்களுக்கும் சிறுவயதிலேயே அறிமுகமுண்டு.

த்விஜேந்திரர் 1878-ம் வருடம் என்ட்ரென்ஸ் பரீக்ஷையில் பாஸ் செய்தார். பின்னர் கிருஷ்ணநகர் காலேஜில் முதல்வகுப்பில் F. A. யும் பின்னர் ஹூக்லி காலேஜில் 1882-ம் வருடம் முதல் வகுப்யில் B. A. யும் பாஸ் செய்தார். 1878-ம் வருஷத்திலேயே மாதம் 10-ரூபாய் இனாம் சம்பளம் கிடைத்துவந்தது. பின்னர் 1884-ம் வருடம் கல்கத்தா பிரசிடென்சி காலேஜில் M. A. பாஸ் செய்தார்.

த்விஜேந்திரலால் ராய் சிறுவயது முதலே 'நவ்ய பாரத' 'ஆர்ய தர்சன' 'பாந்தவ' முதலிய பெரிய மாதப் பத்திரிகைகளில் வியாசங்கள் கவிதைகள் முதலியன எழுதிவந்தார்.

(தொடரும்.)

ஐ. கிருஷ்ண மூர்த்தி.



அடியிற்கண்ட புத்தகங்களும், ஔஷதங்களும், கூந்தல் தைலங்களும், சென்டுகளும்
எங்கள்
# "ஆநந்த குணபோதினி"
ஆபீஸில் கிடைக்கும்.

## "ஸ்ரீராம பராக்கிரமம்".

சாதாரண கட்டுக்கதைகளடங்கிய புத்தகங்களுக்குப் பணம் செலவுசெய்து வாங்கி வாசித்துக் காலம்போக்குவதைவிட ஸ்ரீமந் நாராயணனுடைய வைபவங்களடங்கிய புத்தகங்களை வாசித்து நற்பயனடைய முன்வாருங்கள், பேய் பில்லி, சூனியம், நோய் முதலான பிணிகளை வரவொட்டாமல் தடுக்கக்கூடியதுமான ஸ்ரீ ராம பராக்கிரமம் என்னும் புத்தகம் ஒன்றே உங்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை அளிக்கும். இராமாயண முழுச்சரித்திரமும் இதில் அடங்கியிருக்கின்றது. மேற்கோள்களாகப் பல அரிய செய்யுட்களையும் இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தைப் பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகளுக்குப் பாடமாகவும் வைக்கலாம். விலை அணா 6.

## ஸ்ரீ வெங்கடேச பராக்கிரமம்
அல்லது திருப்பதி மான்மியம்.

தென்னிந்தியாவிலுள்ள திவ்வியஸ்தலங்களில் ஸ்ரீ வேங்கடாசலம் (திருப்பதி) மிகவும் சிரேஷ்டமானதென்பதை அறியாதார் யாருமிலர். அந்த ஸ்தலத்தின் மகிமைகளையும், மூர்த்தி விசேடங்களையும், தீர்த்தங்களின் வரலாறுகளையும் அவற்றின் பலன்களையும் தக்க மேற்கோள்களுடன் கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களிலும் முறையே, விருஷபகிரி, அஞ்சனாத்திரி, சேஷகிரி, வெங்கடாசலம் என்னும் பெயர்கள் விளங்கிய காரணங்களையும், அந்தந்த யுகங்களில் ஸ்ரீ பகவான் அங்குத் திருக்கோயில் கொண்டெழுந்தருளிய விருத்தாந்தங்களையும், ஆங்காங்கடைந்து பகவானை வழிப்பட்டு நற்பேற்றினை யடைந்த புண்ணிய புருஷர்களின் சரித்திரங்களையும், சைவ, வைஷ்ணவ வேறுபாடின்றித் தெள்ளிய செந்தமிழ் நடையில் வெளியாக்கப்டிருக்கிறது. இதன் விலை ரூபா 1.

## விவேகாநந்த போதம்.

இஃது ஓர் விநோதமான ஆச்சரிய கதை இதில் வைதீகத் தன்மையில் வீடுபட்ட அந்தணரொருவர் தன் சிஷ்யனுக்குச் சொல்லிவரும் சில அற்புதக் கதைகளை வாசிக்கப் புகின்யாவருக்கும் வியப்பையும், ஆநந்தத்தையும் தரக்கூடியது மன்றி அதில் விவரித்திருக்கும் சம்பவங்களனைத்தும் மகா விசித்திரமாகவும், மனக்கிளர்ச்சியைத் தரக்கூடியதாகவும் இருக்கும். இதிலடங்கியுள்ள புத்தி மூடன், சுத்தவீரன் என்பவர்களின் சரித்திரங்கள் மிகவும் விநோதயாகவும் வேடிக்கையாகவும் வரையப்பட்டிருக்கின்றன. விலை அணா 10.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# இளங்கோவன்

அல்லது

## தவளமலைச் சுரங்கம்.

இது ஓர் அற்புதமான துப்பறியும் நாவல். இவ்வித நாவல்கள் நூற்றுக் கணக்காக வெளிவந்திருந்தாலும் அவற்றில் பாஷாபி விருத்திக்கும் தேசாபி விருத்திக்கும் பயன்படக்கூடியவை வெகு சிலதே. ஆனதால் இப்புத்தகம் மேற்கண்ட அபிவிருத்திகளுக்குப் பொருந்துமாறு நல்ல தமிழ் நடையில் வாசிப்போர் மனதைக் கவரத்தக்க சிறப்புடன் எழுதப்பட்டிருக்கிறதுமன்றி இதில் நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடிய விஷயங்கள் பல இருக்கின்றது. இதில் விவரித்திருக்கும் கதை ஆரம்பம் முதல் கடைசி வரையில் வெகு விமரிசையாய்ச் சேர்க்கப்பட்டிருப்பதுடன் இடை இடையே புகட்டியுள்ள ஆச்சரிய சம்பவங்கள் வாசிப்போரின் உள்ளத்தைக் களிக்கச் செய்யும். முக்கியமாய் இதில் எழுதியுள்ள துப்பறியவந்த துறவியின் திறமையும், படுக்கைக்குச்சென்ற பெண் மாயமானதும், தற்கொலை யுண்டானதும் யாவரையும் திடுக்கிடச் செய்யும்.

இதன் விலை ரூபா 1 4 0.

---

ஆச்சர்யம் ! அற்புதம் !! ஆனந்தம் !!

ஒப்புயர்வில்லாத் துப்பறியும் நாவல்

## கமலவல்லி அல்லது கன்னியின் சமர்த்து.

மனந்திடுக்கிடக்கூடிய பல அருமையான சம்பவங்கள் இதிலடங்கி விருப்துடன் கடைசிவரையிலும் ஆச்சரிய வர்த்தமானங்கள் செறிந்துள்ளன.

கன்னிகையான கமலவல்லியை நாகபூஷணம் என்பான் மணந்து கொள்ளப் பல கடுமையான சூழ்ச்சிகள் செய்தும் கமலவல்லி தப்பித்துக் கொள்ளும் சாமர்த்தியத்தைப் படிக்குந்தோறும் யாவரும் பரவசமடைவார்கள். அவளுடைய ஒவ்வொரு சாமார்த்திய செய்கைகளும் மகா விசித்திரமானவை. மேஜர் ஜெயராம் மீனுவதியின் அறையில் வீரகேசரியால் கொல்லப்பட்டது மிகவும் பரிதாபத்தை யுண்டாக்கும். குறி சொல்லும் கிழவி யொருவள் கமலவல்லியைப் பல இடையூறுகளைச் செய்தும் ரூபாவதி என்னும் கன்னிகையால் அவள் காப்பாற்றப்படுவது மிகுந்த ஆச்சரியத்தை யுண்டாக்கும். முடிவில் விவரித்துள்ள வெள்ளை ரோஜா மலரின் மர்மமும், அதனால் கஷ்டமடைந்த தேவசுந்தரியின் சரித்திரமும் படிப்பவருள்ளத்தைப் பதைக்கச் செய்யும். இடையிடையே விவரித்திருக்கும் காந்தாமணி, கருணாம்பாள், தாட்சாயணி, கோமளாம்பாள். கனகாங்கி முதலியோருடைய சரித்திரங்களால் யாவரும் ஆச்சரிய மடைவார்கள் என்பது திண்ணம்.

இதிலடங்கியுள்ள விஷயங்கள் அபாரமானதால் இதைத் தனித்தனி இரண்டு பக்கங்களாக அச்சிடப்பட்டிருக்கின்றன.

பாகம் 1-க்கு ரூ. 1 12 0 பாகம் 2-க்கும் ரூ. 3 8 0

---

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# டெய்லரிங் அண்டு கட்டிங்

…தையல் வேலை செய்யும் நண்பர்காள் !

டெய்லரிங் அண்டு கட்டிங் என்னும் விஷயங்களில் ஐரோப்பாவில், தேர்ச்சி யடைந்த மிஸ்டர் ராபர்ட்ஸ் துரையவர்களிடம் மிக அருமையாகக் கற்ற இரகசியங்களை நம் சுதேச தையல் வேலை செய்கிற நண்பர்கள் யாவரும் எளிதில் அறிந்து, ஒருவருடைய உதவி இன்றியே சுலபமாக அளவெடுத்து துணிகளை வெட்டுவதற்குத் தேவையான அளவுகளைப் பிரித்துக் காண்பிக்கக் கூடிய சில விஷயங்களை மாத்திரம் புத்தகரூபமாக T. M. கோவிந்தசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டதை இதுவரையில் முதல் பாகமென்று 8-பதிப்புகள் அச்சிட்டு வெளிவந்திருப்பதை யாவருமறிவார்கள்.

ஆனால் பல நண்பர்களின் வேண்டுகோளின்படி முன் பதிப்புகளில் இதுவரையும் வெளிவராத அநேக நூதன பலவிதமான கோட்டுகள், ட்ரவுசர்கள், அதாவது எஸ். பி. கோட், டி. பி. கோட், ஸ்போர்டிங் கோட்டு, செமிடாஸ் கோட். மிலிடெரி கோட், சிவில்கோட், ஓவர் கோட், நிக்கர் ட்ரவுசர், பிரீசெஸ் ட்ரவுசர், ரைடிங் பிரீசெஸ், முதலிய அநேக பிரிவுகளை தனித்தனி படங்களாலமைத்து, கணக்குகளைப் பிரித்து, மையால் நூதனமாய் எழுதப்பட்டதையும் சேர்த்து இரண்டு பாகமும் நன்றாக ராயல்சயிசில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு வெளியாக்கி இருக்கின்றோம்.

இதன் விலை ரூபா. 1 0 0

---

பிரபஞ்ச பிரசித்தியென்னும்

## பீதாம்பர ஐயர் ஜாலத்திரட்டு (1500)

இந்நூலில் கூறிய ஒவ்வொரு ஜால வித்தைகளையும் அனுபவமாய்ச் செய்து காண்பிக்கும் புண்ணியவான்களிடத்திலிருந்து கேட்டு வாங்கியும் பீதாம்பர ஐயர் ஆங்காங்குச் செய்து கீர்த்திபெற்ற ஜாலங்களைத் தேடியும் ஒருங்கு சேர்த்து அச்சிட்டிருக்கிறது. சிறுவர் முதல் பெரியோர்களும் இப் புத்தகத்தை ஒருமுறை வாசித்தவுடன் இந்திர தந்திர மகேந்திர வித்தைகளும், அற்புதமான ஜாலங்களும் செய்ய உடனே முயலுவார்கள்.

இதில் அடங்கிய விஷயங்கள்.

விநாயகரை அந்தர்தியானமாக அழைக்கும் ஜாலம், சபையோர்களுக்கு பந்திசெண்டு சந்தனம் தாம்பூலம் கொடுக்கும் ஜாலம், பலவிதமான பலகாரங்கள் அழைப்பிக்கும் ஜாலம், ஒரு அறைக்குள் சந்திர சூரியனைக் காண்பிக்கும் ஜாலம், எவ்வர்ண ஸ்திரீகளை காண்பிக்கும் ஜாலம், வசிய அஞ்சனம் இராசவசியம் மோடிவித்தை பேயோட்டும் ஜாலம், இருட்டுவீட்டில் பலவிதமான மிருகங்கள் காட்டும் ஜாலம் இவ்விதம் 1500-ஜாலங்கள் அடங்கியது.

மேற்காட்டிய ஜாலங்கள் ஒவ்வொன்றைக்கொண்டு பத்துப் பதினைந்து ஜாலங்கள் செய்யும்படியாய் இப்புத்தகத்தில் விபரமாக கூறியிருப்பதுடன் மூலிகையின் பெயர் அதன் அடையாளமும் இங்கிலீஷ் மருந்து திராவகம் அலைகளின் பெயரும் வகையும் தெளிவாக எழுதியிருக்கின்றன.

இதன் விலை ரூபா. 1.

---

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302 தங்கசாலைத் தெரு, சென்னை.

# இந்து தேகாப்பியாச சாதனம்.

மனித ஜன்மமெடுத்த ஒவ்வொருவரும் நோயின்றி சுகசரீரிகளாய் நீண்ட ஆயுளுடனும், மனோதிடம் பொருந்தி திடகாத்திரர்களாய் இருக்க வேண்டுமென்று கோறுவது உண்மையாதலால் அவ்விதமிருக்க அபேட்சை யுள்ள ஒவ்வொருவரும் இந்த தேகாப்பியாச சாதனமென்னும் புத்தகத்தை வாங்கி அதில் விவரித்திருக்கும் விஷயங்களை அப்பியாசப் படுத்துதல் மிகவும் அவசியமாகும்.

இது சரீரத்தைப் பலமாகவும், சௌக்ய மாகவும் இருக்கச் செய்ய வேண்டிய நிபந்தனைகளைப் போதிப்பதுடன் தொன்று தொட்டு நம் தமிழ் நாட்டில் அனுசரித்துவந்த தண்டால், பஸ்கி, அனுமந்த பஸ்கி, சக்காதண்டால், தோப்புகரணம் முதலிய அநேகவித தேகப் பயிற்சி செய்யும் விதிகளையும், தற்காலம் ஆங்கில முறைப்படி அப்பியசித்து வரும் பாரலல் பார் (Parallel Bar) ஹாரிசண்டல் பார் (Horizontal Bar) ட்ரிபிசியம் (Trapezium) முதலிய தேகப்பயிற்சி முறைகளையும், சாண்டோ என்னும் பிரபல பலசாலி யால் அனுபோகத்திற்குவந்த ஸ்பிரிங் கிரிப் டம்பெல்ஸ் (Sprig Grip Dumbbells) என்னும் அப்பியாசங்களை மிகவும் தெளிவாய் 18-சிறந்த படங்களுடன் சிறியோர் முதல் பெரியோர் வரையில் தாமாகவே தேகப்பயிற்சிகளை செய்து திடகாத்திர சரீரிகளாய் ஆகவேண்டி லோகோபகாரமாய் வெளி யாக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8.

---

# புலிப்பாணிமுனிவர் வயித்யம் 500

## மூலமும் உரையும்

(கைபாக செய்பாக மர்மங்களுடன்.)

நந்தமிழ் நாட்டின்கண் வைத்திய நூற்கள் செய்தவர்கள் பதினெட்டுச் சித்தர்களாவார்கள். அவர்களில் போகமுனிவரது மாணாக்கராகிய புலிப்பாணி முனிவர் வயித்தியத்திலும், சோதிடத்திலும், ஜாலத்திலும் பல நூற்கள் செய்திருக்கின்றனர். அவற்றுள் இந்த நூல் ஒன்று. இஃது ஐந்நூறு பாடல் களுடையது. இந்நூலிற் சொல்லப்பட்டிருக்கிற முறைகளை இக்காலத்தில் வயித்தியர்களால் பல நோய்களுக்குக் கையாடப்பெற்று வருகின்றன. ஆயினும் இதிலுள்ள சில விஷயங்கள் அருமையாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதா யிருத்தலின், பலர்கேட்டுக் கொண்டபடி அதற்கு விளக்கமாய் ஒரு உரை எழுதி அச்சிட்டிருக்கிறோம். அது கற்றவர்க்கும், மற்றவர்க்கும் பயன்படக் கூடியதாதலின் வைத்தியர்களா யுள்ளவர்களும், மற்றவர்களும், இதை வாங்கி இதில் சொல்லியபடி நோய்களுக்கு வைத்தியஞ் செய்து நற்பேறடைவார்களென்பதில் ஐயமில்லை. விலை அணா 12.

---

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302 தங்கசாலைத் தெரு, சென்னை.

# பங்கயச்செல்வி அல்லது பதிவிரதா சிரோன்மணி.

இது நூதனமுறையில் மிகவும் சாதுர்யமாய் புனைந்தெழுதப்பட்ட சிறந்ததோர் கற்பனை நாவல். கதைத் தொடர்பின் ஒழுங்கும் இடையிடையே விவரித்திருக்கும் ஆச்சர்ய சம்பவங்களும், ஆங்காங்கு வெளிப்படுத்தியிருக்கும் அதிவீரச் செயல்களும், மனதைக் கவரும் மகா விந்தையான மர்ம விஷயங் களும் யாவரையும் பிரமிக்கச்செய்து மனதை யுற்சாகப்படுத்தக்கூடியது. மரண தண்டனை யடைந்து தேசப்பிரஷ்டனாய்ப் பராரியான ஒரு மனித னுடைய இரகசிய வாழ்க்கையும், அவன் குமாரத்தியான ஓர் இளஞ்சிறுமியின் அதியற்புதச் செயல்களும், அவளின் தீரமும் மிகவும் கொண்டாடத் தக்க தாகும். ஆண், பெண், இருபாலர்க்கும் நல்லறிவைப் புகட்டி இன்புறச் செய்யும் நாவல்களில் இது மிகச் சிறந்ததென்பதை வாசிப்போரே யறிதல் கூடும். அரசன் அன்றுக் கொல்வான் தெய்வம் நின்றுக் கொல்லும்என்னும் உலக வாக்கியத்திற்கு இதில் விவரித்திருக்கும் கதையே அத்தாட்சியாகும்.

இதன் விலை அணா 12.

---

# மோஹன் சிங் அல்லது குடும்பகொலையின் இரகசியம்

இது மிகவும் ஆச்சரியமான ஓர் துப்பறியும் செந்தமிழ் நாவல் கதையின் தொடக்கத்திலிருந்து மனதை கவரத்தக்க சம்பவங்கள் அனேகமிருப்பதால், முழுதும் வாசிக்கும் வரையில் வேறொன்றிலும் மனஞ் செல்லாது. மோஹன் சிங் என்பவருடைய விசித்திரமான கொலையும், அக்கொலையைக் கண்டுபிடிக் கும் துப்பறியும் பாபுராவின் சாமர்த்தியங்களும் காஞ்சனன் என்பவன்மேல் ஏற்பட்ட சந்தேகங்களும், கிருஷ்ணசிங் என்பவன் உண்மைக் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கும் வரையில் சேர்ந்துள்ள விஷயங்களும் யாவும் வாசிப் போரின் மனதை பரவசப் படுத்தக் கூடியவைகளா யிருக்கும்.

இதன் விலை அணா 12.

---

# புவனராணி.

இது பூவையரின் பூஷணமெனத் தக்க ஓர் அற்புத நாவல். ஒரு ஜமீன் குடும்பத்தில் நேரிட்ட பல ஆச்சரிய சம்பவங்கள் இதில் விவரிக்கப்பட்டிருக் கிறது. கருணாகரன் வரதராஜன் என்னும் திக்கற்ற இரண்டு சகோதரர்க ளின் ஆபத்துகளும் அவற்றினின்றும் அவர்கள் தப்புவதும் மிகவும் ஆச்சரியப் படக்கூடியதுமன்றி அவர்களுக்குத் தீங்கிழைத்துவந்த பகையாளிகளின் பரிதாபச் செயல்கள் யாவும் படிப்போரின் மனதைப் பாகாக்கும். புவன ராணியின் மனோதிடமும், கற்பின் மாட்சியும், அவள் உக்கிரசிங்கனென்னும் வேடர் தலைவனுடைய சிறையினின்றும் தப்பிவருவது மிகவும் ஆச்சரியத்தை யுண்டாக்கும். இக்கதையின் ஆரம்பம் முதல் கடைசிவரையில் மெலகாதன் என்னும் உத்தம புருடன் பகைவர்களின் படுமோசங்களிலிருந்து ஜமீன் குடும் பத்தார்களைச் சமயோசிதமாய் மாறுவேடம் பூண்டு காப்பாற்றிய விருத்தாந்தங் கள் யாவும் மிகவும் வியக்கத்தக்கதாகும். இதன் விலை அணா 8.

---

தி. இராஜகோபால் முதலியார், நெ. 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்.

# ஆ ந ந் த ர ங் க ன்

## இது ஓர் சிறந்த நவீன துப்பறியும் நாவல்.

துப்பறியும் நாவல்கள் பல வெளிவந்திருக்கினும் இந்நாவலின் அமைப்பு மிகச் சிறப்புடைத்தென்பதை இதை வாசிப்போரே யறிதல் வேண்டும். வாசிப்போரின் மனதைச் சிற்சில சந்தர்ப்பங்களில் திடுக்கிடச்செய்து மறு விநாடியில் ஆச்சரியத்தையும் ஆநந்தத்தையும் அனுபவிக்கச் செய்யும்படி அதி விநோதமாகவும், சாமர்த்தியமாகவும், புனைந்தெழுதப்பட்டிருக்கிறது. இவ் வற்புத நாவல் அழகிய பதங்களாலும், இன்பரசமான வாக்கியங்களாலும் வெகு சிங்காரமான வர்ணனைகளாலும்கூடி நவரசங்களும் செறிந்து கிடப்பதுடன் சோகரசமே மிதமின்றி ததும்பிக் கிடத்தலால் யாவர்மனதையும் பாகாயுருகச் செய்யுமென்பதை யாம் இங்கெடுத்துச் சொல்லவேண்டுமா? கதையின் தொடர்பும் முடிவும் அத்தியந்த சுவையையும் சொகுசையும் உடையதால் புத்திமான்கள் மதிக்கத்தக்க இஃதோர் நவீனமாகும். ஆனந்த ரங்கன் என்பான் கள்ளர்கள் குகையில் வைக்கப்பட்டும், விஷமிடப்பட்டும், இன்னும் கொடிய ஆபத்துகளுக்குள் விட்டும், துப்பறியும் சீதாராமன் என்பவனால் அவன் மீட்கப்பட்டு தனக்கு நிச்சயித்திருந்த கன்னிகையை மற்றொருவன் மாங்கல்யம் தரிக்கப்போகும் சமயத்தில் வந்து அவளை விவாகம் செய்து கொள்ளும் வரையிலுள்ள கதையின் சொகுசை இங்கு விவரிப்ப தசாத்தியமாகும்.

இதன் விலை அணா 10.

---

# ஸ்ரீ மகா பக்த விஜயம்

இப்பூவுலகின் கண் ஜனித்த ஆத்மகோடிகள் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் திருவவதாரஞ் செய்து பகவத் பக்தி இத்தகைய சிறப்பினை யுடையதென்று யாவருக்கும் தெரியக்காட்டி முத்திப்பேற்றினைப் பெற்ற ஜெயதேவர், கபீர்தாசர், நாமதேவர், துளசிதாசர் ஞானதேவர், குசேலதாசர் முதலானவர்களின் சரித்திரங்களை ஆங்காங்குச் சமயோசித சுருதிப் பிரமாணங்களுடன் இப்புத்தகத்தில் எழுதப்பட்டு ஐதிகப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1 8 0

---

# திருக்குறள் மூலமும் உரையும்

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாருளிச்செய்த பரிமேலழகருரையைக் கொண்டியற்றிய பதவுரையும் கருத்துரையும், விசேடவுரையும், திருவள்ளுவமாலை மூலமும் உரையும் சரித்திரமும் ஆகிய பாகங்கள் 133-அதிகாரங்களாகப் பிரித்து அச்சிடப்பட்டிருக்கிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| கிளேஸ் கடிதம் காலிகோ பயிண்டு | ரூபா | 3 | 8 | 0 |
| திக்கு கடிதம் காலிகோ பயிண்டு | ரூபா | 2 | 8 | 9 |

---

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302 தங்கசாலை தெரு, சென்னை,



அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

# கோ கி லா

# கூந்தல் வளரும் தைலம்.

5-பலம் தைலம் அடங்கிய டின் 1-க்கு விலை அணா 12.

நேயர்களே! தாங்கள் அநேகவித கூந்தல் தைலங்களை உபயோகித்திருக்கக்கூடும். இருந்தபோதிலும் எமது கோகிலா கூந்தல் வளரும் பரிமளத் தைலத்தை ஒரு தடவை உபயோகிப்பீர்களாகில், அதன் குணம், மணம் என்றும் தங்களை விட்டகலா தென்பது உண்மை.




இந்த கோகிலா கூந்தல் வளரும் பரிமளத் தைலமானது அநேகவித திவ்விய வன மூலிகைகளால் சாஸ்திரப்படி தயார் செய்யப்பட்டது. இதன்பரிமளம் அன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். இது மயிரை உதிர்க்காமலும், கூந்தலை நீளமாக வளரச் செய்யும், மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி முதலியவைகளைப் போக்கடித்து தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

| | | | |
|---|---|---|---|
| மல்லிப்பூ எண்ணெய் | | 0 | 12 |
| சம்பங்கி | ,, | 0 | 12 |
| மருடம்பூ | ,, | 0 | 12 |
| தாழம்பூ | ,, | 1 | 0 |
| ரோஜாப்பூ | ,, | 1 | 0 |

5-பலம் கொண்ட டின்.

---

தி. இராஜகோபால் முதலியார் நெ. 302 தங்கசாலை தெரு, மதராஸ்.

## கேஸர் பவுடர்.

இந்த கேஸர் பவுடரை மிகவும் கஷ்டப்பட்டு கஜேஜ் தேசத்தில் தயார் செய்யப்பட்டது. இந்த பவுடரை ஸ்தனனம் பண்ணின பிறகு சந்தனத்தில் கலந்து திரேகத்தில் பூசிக்கொண்டால் இந்த வாசனையானது எப்பொழுதும் நீங்காது. திரேகத்தில் சொரிசிரங்கு வராது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2-தோலா பாட்டல் 1-க்கு | ... | ... | 2 | 0 | 0 |
| 1 ,, ,, | ... | ... | 1 | 4 | 0 |
| ½ ,, ,, | ... | ... | 0 | 12 | 0 |
| கேசர் தனிப்பவுடர் 1 ரூபா எடை | ... | ... | 1 | 0 | 0 |

## இங்கிலீஷ் சீமை சென்டுகள்.

இந்த இங்கிலீஷ் ஸெண்டுகள் சீமையிலிருந்து பாக்கிங்குடன் வரவழைத்து அதே இங்கிலீஷ் பாக்கிங்குடன் அனுப்புகிறோம். நாம் அனுப்புகிற இங்கிலீஷ் சீமை ஸெண்டுகள் மற்ற இடங்களில் இருக்கிற இங்கிலீஷ் சென்ட்டுகளைவிட அதிக சேர்த்தியானதும் அதிக வாசனையும் உள்ளது. இதை ஒரு தடவை வரவழைத்து பார்த்தால் அதில் உள்ள குணங்கள் தெரியவரும்.

### இங்கிலீஷ் ஸெண்ட்டுகள் பாக்கிங் செய்தது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்தம்போல் ரோஸ் 1-டிராம் புட்டி 1-க்கு | 2 | 0 | 0 |
